ரிஜிஸ்டர் நெ. 2041.

தனிப்பிரதி விலை ஒரு அணா.

தமிழ்நாடு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வேளி நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

வியாபாரிகள் விளம்பரம் அங்குலத்திற்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நிறுத்திய விளம்பரத்திற்கு தனி விகிதம்

மாலை 7 | சோமு, பிரஜோற்பத்தி வரு மாசி மீ 9உ (21—2—1932) | மலர் 43

தாதுபுஷ்டிக்கு

பழநி சி. எம். சாமி,

மன்மத குளிகை

யை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.

புட்டி 1க்கு ரூ 2. தபால் சார்ஜ் வேறு.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி S. I.

பழநி சி. எம். சாமி

குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி, ஆராத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிபபாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரூ. 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்டாலாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனுதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல் காதுமந்தம், மண்டைக் குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்சினையையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் எற்படும் துரித ஸ்கலிதமும், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மதுக்கு உற்சாகத்தையும் சுறுட்டையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்சொரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்று வலி, அஜீரணத்தால் எற்படும் வயிற்றுப்போக்குகள், ரத்தவாந்தி, மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

எல்லா மருந்துகளுக்கும் பார்சல் தபால் செலவு நீங்கலாகும்.

விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இலவசமாய் அனுப்பப்படும்.

மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்
கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

நித்தியக்குளம் போஸ்ட், திருச்சிராப்பள்ளி

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்பொப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

கவலை வேண்டாம்!

தற்காலத்தில் ஒவ்வொரு வரும் தாராளமாக சம்பாதிக்கக்கூடிய வழியை தெரிந்து கொள்ளவேண்டாமா? அப்படியானால் ஒரு நிப்ளேகார்டு எழுதுங்கள். பதில் தெரிந்து கொள்ளலாம்.

S. நாராயணசாமி
வடக்குவீதி திருவாரூர் S. I.

விற்பனைக்குத் தயார்.

1. 45. B. H. P. டான்ஜிஸ் ஆயில் இன்ஜின்.
2. 12. N. H. P. பிரிட்டானியா மார்ஷல் பாயிலர் பிரஷர் 100 lb.
3. No. 1. Hullers; Sheller; Pumps, Scale; pulleys-Shafting etc.
4. Steam Condensing Heater.

Apply to:—
MENAL & Co.,
East & West General Commercial House,
Vembanoor, Kodavasal P.O
Kumbakonam, S.I Ry.

கந்தகமே-இந்தியுகம்

டாக்டர் C. K. வெங்கடாசலம் அவர்களால் தயாரித்து, அனுபவித்து கைகண்ட கந்தகரசாயனம்.

கெந்தியின் அருவருப்பான வாசனையையும், காரமான காளின் தூர்குணங்களையும் நீக்கி, கோஷாயி முறையில் தயாரித்தது. ஆண், பெண், வாலிபர், விருத்தர்வரை, வெட்டகாங்கை, வெட்டவாய்வாலேர்ப்படக்கூடிய வியாதிகளுக்கு மூன்று வாரம் கோஷாயி கந்தகரசாயனம் சாப்பிட்டால் வியாதிகள் பூராவும் குணமாகி இரத்தவிருத்தி தரக்கூடியது சிரமமுள்ளபத்தியமில்லை. 3-வாரம் (21-நாள்) உபயோகிக்கக்கூடிய கோஷாயி கந்தகரசாயனம் கொண்ட டப்பி 1-க்கு ரூபாய் 6—0—0. உபயோகிக்கும் விதம் மருந்துடன். பாக்கிங் தபால் செலவு வேறு. மலாய்வாசிகள் ஆர்டருடன் ரூ. 7—12—0 அனுப்பிவைக்கவும்.

டாக்டர். B. A. எதிராஜ்,
(கால்ராபைரி)
கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

மலையாளம் சில்க் அங்கவஸ்திரம்.
2½ X 5 கீ. கம்பிக்கரைபட்டு ரூ. 1-8
ஷேகுண்டஞ்சுகரைடஜன் 1க்கு 15-0
No. 2 டஜன் 1க்கு 12-0
3 X 8 கீ. பட்டு கேவ்ஷ்டி 1க்கு 3-8
S. K. R வீவிங் பாக்டரி:
கோட்டார், திருவிதாங்கூர்,

"சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம் கட்டுரையும் தொடர்ச்சியாகவருகின்றது.

ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர்:-
சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'தமிழன்'
வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு " 4—0—0
ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விளாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஹண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'முன்னேற்றம்'
வாரப்பதிப்பு
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

"போர் முரசு"
வாரப் பதிப்பு.
ஆசிரியர், ச. ம. சி. பரமசிவம்.
தனிப்பிரதி காலணு.
வருட சந்தா. ரூ. 1—8—0
"போர் முரசு"
19, பெரிய செட்டி தெரு,
உறையூர் - திருச்சி.

'குமரன்'
வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0
மாதப்பதிப்பு.
உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0
ஆசிரியர்: சோ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

சென்னை லோக்கல் போர்டு ஆக்ட்.

(1930ம் ஆண்டு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)
M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

புதுவைமுரசு

ஆசிரியர்:-
அ. பொன்னம்
பலனர்,
அவர்கள்.

24 பக்கங்களோடு அழகிய முறையில் திங்கட்கிழமைதோறும் வெளிவரும் சுயமரியாதைச்சேந்தமிழ்வாரப் பத்திரிகை. வருடசந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 4.
மாதிரிபிரதி இனம்!
மானேஜர்,
"பதுவைமுரசு"
புதுச்சேரி (F. இந்தியா)

தக்ளியில் நூல் நூற்று சுயராஜ்யம் பெற்ற தேசங்கள் எத்தனை?

தமிழ் பாஷை விருத்தியும், பெருமையும் விரும்பினால் உங்கள் தெய்வங்களுக்கு தமிழைக் கற்றுக்கொடுங்கள்.

[கைவல்யம்]

தமிழைப்பற்றி ஆராய்ச்சிசெய்ய நான் பண்டிதனல்ல. கீழே சொல்லுவதையும், நடந்து வரும் அனுபோகத்தையும் ஆலோசித்துப்பாருங்கள். குடி அரசுப்பத்திரிகையைப்படிக்கப்பயந்து அறுவெறுப்புக்கொள்ளும் பண்டிதர்கள் உங்கள்பக்கமிருந்தால் படித்துக்காட்டுங்கள். அவர்கள்அபிப்பிராயத்தையும் தெரிந்துஒத்துப்பாருங்கள். மதப்பற்றும் பயமும் உடையவர்களாலுலும் அவர்களின் விவேகம் அவர்களைப் பொதுஅறிவிற்கு இழுத்துச்செல்லுவதை அவர்களால் தடுக்கமுடியாது பயந்தவர்களாகவிருந்தாலும் உண்மையை விவேகம்உணர்த்தியேதீரும்.

தமிழை வளர்க்கவேண்டும், விருத்தி பண்ணவேண்டும் என்று தமிழ் அபிமானிகளும், பண்டிதர்களும், சொல்லியும், எழுதியும் வருகிறார்கள். ஒருவர் சொன்னதை இன்னொருவர் பின்பற்றி கிளிப்பிள்ளை போல் பாடம் ஒப்புவிக்கிறார்களேயல்லாமல் தமிழில் இன்னகுறை பாடிருக்கிறது அதை நீக்குவதற்கு இன்னது செய்யவேண்டும் என்பதின் மூலத்தை அறிந்தவர்கள் சொல்பம். அதிலும் வெளியிட்டவர்கள் சொல்பத்திலும் சொல்பம்.

ஆங்கிலபட்டதாரிகளான தமிழ் பண்டிதர்கள் ஆங்கிலேயர்களால் எழுதப்பட்டப் புஸ்தகங்களைக்கொண்டும், கல்வெட்டு சாதனங்களின் நிப்போட்டுகளைக்கொண்டும் தமிழ் ஆராய்ச்சி என்று எழுதியும், பிரசங்கம் செய்தும் வருகிறார்களேயல்லாமல் தமிழின்குறைபாடுகளைத்தெரிந்தவர்களாகத்தெரியவில்லை. மூலத்தின் குறைபாடுகளைத்தெரிந்துஅதை வெளியில் சொல்லுகிறவர்களேதெரிந்தவர்கள். தெரிந்திருந்தாலும் கோழைகளால் பயன் என்ன?

தமிழ் பாஷை எழுத்தில், வடிவத்தில், பதத்தில், சேர்க்கையில், சப்தத்தில், இலக்கியத்தில், இலக்கணத்தில், அதன் அமைப்புகளில், அர்த்தத்தில், எதாவது குறைபாடுகளிருக்கிறதா? இவைகளில் ஏதேனும் குறைபாடுகளிருக்குமேயானால் தமிழ் பாஷையில் விசேடப்பட்ட பண்டிதர்கள் அநேகரிருக்கையில் அந்தக் குறைபாடுகளை லெகுவாகத்தீர்த்துக் கொள்ளலாம். தமிழ்பாஷை ஆக்கியோனின் மூலவரலாரும் அதில் உண்டாயிருக்கும் நூல்களின் கால நிர்ணயமும் சரியாகக்கணிப்பதில் பலனில்லை. தமிழ்பாஷை பேசுகிறவர்களோ அநேகர். அதில் எழுதப்பட்டிருக்கும் ஏடுகளோ அனந்தம். எழுதிக்கொண்டிருக்கும் ஏடுகளோ சொல்லிமுடியாது. அன்னியபாஷைகளையுடைய ஊர்களுக்குக்குடியேறின தமிழர்கள் பலதலைமுறையாலும் தமிழ் பாஷையே பேசுகிறார்கள். இப்படியெல்லாமிருக்க தமிழ் பாஷை எப்படி எங்கே பறந்துபோய் விடும்.

கலிங்கத்துப்பரணியில்தான் பழய தமிழன் மறைந்து கிடக்கிறான் என்று கத்துகிறார்கள். தொல்காப்பியத்தில் பழய தமிழ் வழக்கம் பதிந்து கிடக்கிறதென்று தோள்தட்டுகிறார்கள். பத்துப்பாட்டு, எட்டுத்தொகையில்தான் தமிழ் தாய்மார்களின்வீரம் விளங்குகிறதென்கிறார்கள். கம்பராமாயணத்தில் கவியின்பம் கரை புரண்டோடுகிறதென்கிறார்கள். தேவாரம், திருவாய்மொழியில் பக்தி தேனெழுகிறதென்கிறார்கள். தமிழ் தனி பாஷையென்றும், சிவபெருமான் அளித்த இரண்டுபாஷையில் ஒன்றென்றும் சொல்லுகிறார்கள். இவ்வளவும் சொல்லுகிறவர்கள் பண்டிதர்கள்தான். குறைபாடிருப்பதாகவும் முன்னுக்குக்கொண்டுவரவேண்டுமென்று சொல்லுகிறவர்களும் பண்டிதர்கள்தான். இவ்வளவு பெருமையையுடைய பாஷையில் என்ன குறைபாடிருக்கும், இருந்தால் அது என்ன? எப்படி வந்தது? ஏன்? வந்த காரணங்களென்ன? என்பதை ஆலோசித்துப்பார்த்து அதை சனசமூகங்களுக்குச் சொல்லும் பண்டிதத்திறமைதான் அழகுடையதாகும்.

கலிங்கத்துப்பரணியில் கலிங்கதேசத்தைக் கண்டுபிடிப்பதோடுகூட, தொல்காப்பிய ஆராய்ச்சியில் பண்டு தமிழரின் கொட்டு,கூத்து,வாத்தியம் கும்மியும், மண்ணும், மணலும் மலையும், நிர்ணயம் பண்ணுவதோடுகூட, விஜயநகரமென்னும் பிரபலப்பட்ட தெலுங்கு ராஜியத்தைத்தாண்டிக் கங்கைக்கரையிலிருந்த தெலுங்கு ராஜியத்தை சோழன் ஜெயித்திருந்தாலும் தெலுங்கரும், மராட்டியரும் தமிழ் ராஜியத்தை ஜெயித்ததற்கு ஒரு தமிழ் நூல் ஆராய்ச்சியும் வேண்டியதில்லை. அவை பிரத்தியக்ஷமான வைகள். தமிழ்ராஜியம்வீழ்ச்சியடைந்ததற்கு காரணமென்னவென்பதையும் சேர்த்து ஆராய்ச்சிபண்ணி தெரிந்து தமிழர்களிடமுள்ள அக்குறைபாடுகளை நீக்கினால் அதுபண்டிதர்களுக்கு ஆபரணமாகும்.

ஒரு பாஷையானது சிறப்படைந்து மேன்மையாய் விளங்கவேண்டுமானால் அந்த பாஷை கடவுளாலும், ராஜாவாலும் மதிக்கப்பட்டு, அவர்களின் விபகாரங்கள் அதிலடங்கி அந்த பாஷை அவர்களுக்கும் அர்த்தமாகி அவர்களும் அங்கீகரிக்கவேண்டும். அதுவுமல்லாமல் புதிதுபுதிதாய் நடந்துவரும் மாறுதலின் இயற்கை என்னும் காலமானது தன்னியர்க்கை குணத்தால் உலகத்தைப் புதிதுபுதிதாக மாற்றிக்கொண்டே வருவதற்கு இசைந்தாப்போல மனித அறிவு விர்த்தியாவதற்கும் உலக விபகாரங்களை நடத்திவருவதற்குத் தொழில்முறையான சாஸ்திரங்களையுமுடைத்தாயிருக்க வேண்டும். அவ்விதம் தமிழ்பாஷையில்லை. என் இல்லை? எதனால் இல்லாமல் போயிற்று? இருக்கவேண்டியதற்கு இனி மார்க்கமென்ன? அதற்காக தமிழ் அபிமானிகளும் பண்டிதர்களும் செய்யவேண்டிய காரியமென்ன? என்பவைகளை ஆலோசித்துப்பார்த்து உண்மை உணர்ந்து சமூகங்களுக்குச்சொல்லுவதே ஆராய்ச்சியின் பலனாகும். முதலாவது நமது தெய்வங்களுக்கே தமிழ் கூடாதென்றும், தமிழ் பாஷையில் தெய்வங்களுக்குச் சொல்லப்படும் மந்திரமென்னும் விண்ணப்பங்கள் பலனளிக்காதென்றும், கற்பித்து அனுபோகப்படுத்தியும் விடப்பட்டிருக்கிறது. இதைப்பலகாலமாக தமிழ் பண்டிதர்களும் ஒத்துக்கொண்டு அதற்கே உதவியும் செய்துவந்திருக்கிறார்கள். இன்றும் அதைத்தான் செய்கிறார்கள். நமது தெய்வங்களான பிர்மா, விஷ்ணு, சிவன், விநாயகர், சுப்பிரமணியர், பார்வதி, லெட்சுமி, சரஸ்வதி, வள்ளிதெய்வானை, கெங்கை, யமுனை, காவேரி, முப்பத்துமுக்கோடி தேவர்கள், பிதிர் தேவதை, நவக்கிரகம், பத்து அவதாரம், அனுமார், கருடன், பலஸ்தலங்களில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகள், இன்னும்பல தெய்வங்கள் இத்தனைக்கும் தமிழ் பாஷை தெரியாது, தமிழை ஏற்றுக்கொள்ளுவதுமில்லை. தமிழன் தொட்டாலே தீட்டுப்பட்டுவிடுகிறது. குன்றுகள்தோரும் விளையாடும் பண்டு தமிழ் தெய்வமென்று சொல்லப்படும் முருகன்கூடதமிழை மறந்துவிட்டது. இப்பொழுது வடமொழியில் மந்திரம் சொன்னால்தான் அவருக்கு அர்த்தமாகுமாம். இப்பொழுது அப்படியே நடந்தும் வருகிறது.

அங்கமோராறும் அருமறைநான்கும் அருள் செய்து, பொங்கு வெண்ணூலும் பொடியணிமார்பிற்பொலிவித்து, திங்களும் பாம்பும் திகழ் சடையுமுடையவன் மகன் திருப்பரங்குன்றத்தில் விளங்குகிறார் என்று நமது சைவ சமய ஆசாரியார் சொன்னதேயல்லாமல் தொல்காப்பியமும், பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும், சிவஞானபோதமும், சிவஞான சித்தியும் அருள் செய்தாரென்று சொல்லவில்லையே? வேதம் நான்கும் அதன் அங்கம் ஆறும் தமிழல்லவே, வடமொழியல்லவோ. தமிழர்களின் பழய சிவனையும், பூர்வீக முருகனையும் தமிழிலிருந்து மாற்றி மறக்கடித்து தமிழைப்பாடுங்கள், ஆடுங்கள், பாராயணம் பண்ணுங்கள் ஆனால் பரமன் பாதத்தின் அர்ச்சனைக்கு தமிழ் ஆகாதென்று தள்ளும் ஏற்பாட்டைச்செய்தவர்கள் பார்ப்பார ஆசாரிகள் என்று சொன்னால் சைவப்பண்டிதர்களில் சிலர் வீசையைத் தொட்டுப்பார்த்தும் கோபிக்கிறார்கள். நாம் செய்யும் தெய்வ பூசையும் வழிபாடும் என் தமிழாயிருக்கப்படாது? அவை என் நீக்கப்பட்டு அங்கீகரிக்காமல் போய்விட்டது? இதை கவனித்துப்பாருங்கள் நமது கடவுளுக்கு தமிழ் அர்த்தமாகி அங்கீகரிக்கயிலல்லவா தமிழ் பாஷையின் குறைப்பாடுநீங்கும்.

அங்கமோராறும் அருமறைநான்கும் சிவபெருமான் அருள் செய்தார் என்று சைவசமய ஆசாரி திருஞான சம்பந்தர் சொன்னாரே. அந்த வேதத்தில் என்ன சொல்லியிருக்கிறதென்பதைத்தமிழர்களில் அநேகர் அறியார்கள். அந்தவேதத்தில் தமிழர்களுக்கு தஸ்யுதர்ஸன், மிலேச்சன், அசுரன், சூத்திரன், அனாரியன், என பற்பல இழிவானபேர்களே வழங்கப்பட்டிருக்கிறது. ஆரியர்களுக்கோ பூதேவர் ஸமயம்பூவின் சந்ததிகள் யஜமானர் பண்டிதர், பிராமணர், முதலிய உயர்பெயர்கள் வழங்கியிருக்கின்றன. இந்தவேதத்தைத்தான் சிவபெருமான் அருளினார் அதற்கு சாட்சி திருஞானசம்பந்தராகவுமிருக்கிறார். சிவபெருமான் அருளினாரோ இல்லையோ அது நமக்குத்தெரியாது. அவ்வேதத்திலிருக்கிறது அவர் சன்னதியிலும் அப்படியே இருக்கிறது. இதை நிலைநிருத்தத்தான் திருஞானசம்பந்தரும் மற்றும் பலபார்ப்பார ஆசாரிகள் சிவபெருமான் திருமார்பில் முப்பரி நூலணிந்திருப்பார் என்று பாடி தெய்வத்தைப்பார்ப்பார சாதியாக்கி பூனூலும் போட்டு பூனூல் கலியாணமும் செய்கிறார்கள். பார்ப்பானுக்கோ தமிழ் சூத்திரபாஷை. பார்ப்பாரஜாதியான நமது தெய்வங்களுக்கும் தமிழ்சூத்திரபாஷையாகத்தானே யிருக்கும் அப்படித்தானே இருந்து வருகிறது. மூர்த்திஸ்தலம் புண்ணிய தீர்த்தம் இவைகளிலிருக்கும் தெய்வம்தான் பார்ப்பார ஜாதி அதற்கு தமிழ்பாஷைபிடிக்காது. சூத்திரபாஷை என்றாலும்இழவு;எட்டு; கருமாந்திரம் முதலிய சுடுகாடுதேவதைகளுக்கும் தமிழ்பாஷை பிடிப்பதில்லையே சுடுகாட்டுத்தெய்வம்கூட பார்ப்பார ஜாதியாகவல்லவா இருக்கிறது. நமது சுடுகாட்டுத்தெய்வத்திற்குக்கூட தமிழ்பிடிக்காமல் அர்த்தமாகாமல் தமிழ்பாஷை இருக்கையில் தமிழ்பாஷையில் எத்தனைப்பரணியிருந்தாலும்அதை ஆராய்ச்சிபண்ணும் ஆங்கிலபட்டாதாரியான தமிழ்பண்டிதர்கள் அநேகர் இருந்தாலும்பயனென்ன?

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க

பெண்களும் சுயராஜ்யமும்.

[நாகலிங்கம்]

இன்று, அரசியல் உலகத்தில், ராஜீய போராட்டத்தில், சுதந்திரப்போரில், சட்ட மறுப்பு இயக்கத்தில், மறியல் கூட்டங்களில், பிரசங்க மேடைகளில் பெண்மக்கள் ஆயிரக்கணக்காகத் தோன் கிறார் கள். பெண் மக்களுக்கு கல்வியும் மறுக்கப்பட்டு, சுதந்திரங்களும் பறி முதல் செய்யப்பட்டு தங்கள் தங் கள் உரிமையிழந்து தவித்தனர். சென்ற சில ஆண்டுகள் வரை எவ் வகை விமோசனமுமின்றி, அவர் களது குறைகள் கவனிக்கப்படாமல், ஆண் மக்களது சுயநல எண்ணத் தால் ஆழ்த்தி, மிதித்தே வைத்திருந் தனர். ஆனல் பலவித இன்னல் களுக்கும், கஷ்டங்களுக்கும் உட்ப ட்டு, சிறிது கல்விகற்றுவிஷயஞ்ான மும், உலக அறிவும் பெற்ற ஒரு சில ரது முயற்சியாலும், அவர்களுக்கு பக்கபலமாயிருந்து பிடிவாதங்காட் டிய சகோதரிகளது ஊக்கத்தாலும், உலகமெங்கும் பெண்மக்களது இயக் கங்கள் வளர் பிரைபோல் நாளுக்கு நாள் வளர்ந்து வருவதன்றி அவர்க ளது உரிமைப்போரின் எதிரொலி இந்தியாவிலும் கேட்கவே, உறக்கத் திலிருந்த பெண்மக்கள் விழித்து தங் களது கோறிக்கைகளை நிறைவேற் றிக்கொள்வதில் கண்ணும் கருத்து மாய் இருந்து உழைத்ததின் பயனுய், சில ஆண்டுகளாக பெண்களது இயக் கம் இந்திய நாட்டில் உரம் பெற்று வருவது கண்கூடு. இந்த நிலையில் அவர்களது உரிமைகளை வற்புறுத்தி சங்கங்கள் தீர்மானங்கள் செய்வதி லும், பிரசாரம் செய்வதிலும் கருத்து டையவர்களாய் இருந்ததன்றி, கல்வி கேள்விகளில் சிறந்த பெண்மணிக ளே போதிய அளவுக்கு வெளிவந்து தங்கள் சமூகத்திற்கு பிரசாரமோ, ஊழியமோ செய்யமுடியாதிருந்த தோடு, எற்கனவே ஊழியம் செய்ப வர்களிடம் தங்கள் அனுதாபத்தை மட்டும் தெரிவித்து, தாங்கள் வந்து தீவிரமாய் கலந்துழைக்க முடியாமை க்கு வருந்துவதாக அபிப்பிராயம் தெரிவித்து, கவலையின்றி இருந்த பெண்மணிகளைப்பற்றியும் நமக்கு போதுமான அளவு தெரியும். இது சமயம் அதிர்ஷ்டவசமாக திரு. காந்தி யவர்கள் உப்பு சத்தியாகிரகம் வரவே பெண் மக்கள் அதி தீவிரமாக முன் னணியில் வந்து சேவைசெய்யவும், கஷ்டப்படவும், சிறைவாசம் எற்க வும் உண்டான சம்பவங்கள் மறை முகமான அனுகூலங்கள் என்றே கருதவேண்டியிருக்கிறது. சில நாட் களுக்கு முன் கட்டுத்திட்டத்தோடு வைத்திருந்த ஆண் மக்களே இன்று பெண் மக்களை தாராளமாக எவ்வித தியாகமும் செய்யத் துண்டுகிறார்கள். அல்லது அவர்களது ஊழியத்தில் பிர வேசித்து தடுப்பதுமில்லை. பெண் மக்கள் சட்டமறுப்பு இயக்கத்தில் சேர்ந்து, காங்கிரசின், சார்பாகத் தான் தியாகமும், சேவையும் செய்ய வேண்டுமா? அதை விட உருவான, உபயோகமான, அவசியமான பல வழிகளில்லையா? என்ற கேள்வி ஒரு புறமிருந்தபோதிலும் பெண்கள் உல கத்தில் இது பெரிய மாறுதலை உண் டாக்கி விட்டது, அவர்களிடையே புதிய ஊக்கத்தையும், உற்சாகத்தை யும், தைரியத்தையும் உண்டாக்கி விட்டதென்பதை யாரும் மறுக்க முடியாது. இனி எத்தகைய இயக் கமேயாயினும் பெண் மக்கள் முன்ன ணியில் வருவதற்கு எவ்வித இடை ஞ்சலும், தடையும் இல்லாத வாறு செய்யப்பட்டு விட்டது என்பது உண்மையே. இந்த ஒரு காரணத் திற்கு திரு. காந்திக்கு பெண்கள் நன்றி கூறக்கடமைப் பட்டுள்ளார் கள்.

விளம்பரப் பிரியமா தேசாபிமானப் பெருக்கா?

ஒத்துழையாமை காலத்தில் ஒரு சில பெண்மணிகள், குறிப்பிட்டசில விடங்களில் ஊழியம் புரிந்தார்கள், கஷ்டப்பட்டார்கள், சிறையும் சென் றார்கள். ஆனல் இந்த சட்ட மறுப்பு இயக்கத்திலோ வென்றல்—கொடி பிடிப்பது பெண்கள், தொண்டர் படைக்கு தலைமை வகித்து நடத்திச் செல்வது பெண்கள்; மதுபானக் கடை, அந்நிய ஜவுளிக்கடை மறியல் செய்வது பெண்கள், துண்டுப்பிரசுர ங்கள் வழங்குவது பெண்கள், பாட் டுப்பாடி ஊர்வலத்தை நடத்துவது பெண்கள், வீட்டில் குடி யிருக்கலா காது என்றல் போலீஸ் ஸ்டேஷ னில் சமயல் செய்து கொண்டு மறி யல் செய்வதும் பெண்கள், கோர்ட் நடவடிக்கைகளில் கலந்துகொள்ள விருப்பமில்லை யென்பதும் பெண்கள், சாயத்தண்ணீரால் நனைக்கப்பட்டும் மறியலை விடாமல் செய்வதும் பெண் கள், காங்கிரஸ் சர்வாதிகாரிகளாய் நியமிக்கப்படுவதும் பெண்கள், தனி மோட்டார்களில் எற்றிப்போய் தூல தூரங்களில் கொண்டு விடப்படுவ தும் பெண்கள், அபராதத்தொகைக் காக தாலியை இழப்பதும்பெண்கள். இவை யெல்லாம் என்? எதற்காக? இவர்கள் என்ன வேண்டுகிறார்கள்? இந்தியாவுக்கு சுயராஜியம் வேண்டு மென்கிறார்கள். பாரத தாய் முடி சூடி மற்ற தேச அரசிகளைப் போல் சரிநிகர்சமானமாக வீற்றிருக்க காண வேண்டு மென்கிறார்கள். தாயின் அலங்கோலத்தை அகற்ற வேண்டு மென்கிறார்கள். அடிமை விலங்கை உடைத் தெரிய வேண்டு மென்கிறார்கள். இந்திய நாட்டை சுதந்திர நாடாக்க விழைகிறார்கள். காங்கிரசின் ஆணையைமேற்கொண்டு சாத்வீக சட்ட மறுப்பில் இறங்கி யிருக்கிறார்கள். இது தான் அவர் களுக்கு வேண்டியது. அவர்களது கோரிக்கையும் இதுவே.

ஆனல், வரப்போகும் சுயராஜியம் எத்தகையது. அதில் பெண்கள் நிலை எவ்வாறிருக்கும் என்பதை அறிந்த பெண் மணிகள் பத்தாயிரத் தில் ஒருவர் இருவர் கூட இருக்க முடியாது. அது மாத்திர மல்லாது காங்கிரஸ் கொள்கைகள் முழுவதும் இன்னவை யென்று அறிந்த பெண் களின் தொகையும் மிக மிகச் சொற்பமாகத் தான் இருக்க முடி யும். கதரை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பது காங்கிரசின் முக் கிய பிரச்சினையல்லவா? "பெண் மக் களே ஆடவருக்குப் பாடம் கற்பிக்க வேண்டும். வீட்டில் வேலையில்லாத நேரங்களில் அண்டை அயலாரிடம் வீண் வம்பு வளர்த்திப் பொழுது போக்குகின்ற நமது பெண்மக்கள் சதா ராட்டை ஓட்டிக் கொண்டே யிருக்க வேண்டும்." என்று காந்தி யார் சொல்ல வில்லையா? ஆனல் இன்று சட்ட மறுப்பியக்கத் தில் சேர்ந்து, மறியல் செய்து தண் டனை அடையும் பெண்மக்கள், அதை கடைப் பிடித்து அதன்படி, நடந்தார் களா? எவ்வளவு நூல் நூற்றார்கள்? எத்தனை அயல் வீட்டு சகோதரிக ளுக்கு நூற்கக் கற்றுக் கொடுத்தார் கள்? அயல் நாட்டுப் பொருள்கள் எவை எவை விலக்கப் பட்டிருக்கின் றன? சுதேசியத்தை எவ்வளவு தூரம் ஆதரிக்கிறார்கள்? பெண் மக் களின் மொத்த எண்ணிக்கை என் ன? எத்தனை பேர் கதர் அணிகிறார் கள்? இது போன்ற கேள்விகளை யோசித்து முடிவு கூறும்படி வாச கர்களையே வேண்டிக் கொள்ளுகி றேம்.

நீங்கள் கோறும் சுயராஜ்யம்.

சுதந்திர வேட்கை கொண்ட சகோதரிகளே! நீங்கள் கோரும் சுய ராஜியம் எத்தகையது என்பது உங் களுக்குத் தெரியுமா? யாராவது அதைப் பற்றி யோசித்த துண்டா? வரப் போகிறசுயராஜிய திட்டத்தின் யோக்கியதை உங்களுக்குத் தெரி யுமா? அந்த சுயராஜியம் வருண சிரம ராஜியம், ராம ராஜியம், வைதீ க ராஜியம், பார்ப்பன ராஜியம். அந்த ராம ராஜியத்திற்கு வேதங்க ளும், ஸ்மிருதிகளும், சுருதிகளுமே யாதாரம். அந்த சுருதி, ஸ்மிருதி தத்துவப்படி பெண்கள் என்றும்அடி மைகள், சுதந்திரம் பெற உரிமையில் லாதவர்கள், பிறவியிலேயே சுற்பி ழந்தவர்கள், இந்தப் பழிகள் தான் உங்கள் மீது சுமத்தப்படும். அத்தி கைய ராஜியத்தை நீங்கள் விரும்பு வீர்களேயானல் அந்தக் கொடிய இழி சொற்களை, மான மற்ற கற்பனை களை ஏற்றுக கொண்டவராவீர்கள் எந்த சுயராஜியத்தை நீங்கள் விரும் புகிறீர்களோ அதே சுயராஜியத்தில், உங்கள் இன மேன்மைக்கு, நன் மைக்கு, முற்போக்கிற்கு ஏதுவான உரிமைகள், சுதந்திரங்கள், அபிலா ஷைகள் எல்லாம் மறுக்கப் படுமென் பது உண்மை, இது சத்தியம் சுய நல வெறியர்களான அந்த வைதீக ராஜியத்திலே உங்களுக்கு எத்த கைய சீர்திருத்தமும் வழங்கப் போவ தில்லை. வழங்க சம்மதிக்கப் போவ தும்மில்லை. என்? உங்கள் உரிமை களை மறுப்பதின் மூலம், உங்களை சாஸ்வத அடிமைகளாகவே பாவித்து தங்கள் எஜமானத்துவத்தை நிலை நிறுத்திக் கொள்ளவே முயற்சிப்பார் கள். இதுமறுக்க முடியாதஉண்மை. வெள்ளைக்கார அரசாங்கம் மத்தியஸ் தர்களாயிருக்கும் போதே சீர்திருத்த வாதிகளுக்கு விரோதமாய் வைதீகர் கள் கூச்சல் ஜெயமடைகிறது. மசோதாக்களும், தீர்மானங்களும் தோற்றுப் போகின்றன. சாரதா சட்டத்தின் கதி எம்மட்டிலிருக்கி றது. நேற்று வந்த விதவைகள் சொத்துரிமை, விவாக விடுதலை மசோதாக்களின் கதி என்னவா யிற்று? சற்றே யோசித்துப் பாருங் கள். வேறு மதஸ்தராகிய அன்னிய அரசாங்கத்திலேயே இந்த யோக்கி யதை என்றல் நாளைய தினம் வரப் போகின்ற, நீங்கள் விரும்புகின்ற, தியாகம் செய்து, கஷ்டப் பட்டு சிறைக்கும் சென்று அடையப் போ கின்ற சுயராஜியத்திலே ஒரு இம்மி யளவேனும் உங்கள் குறைகள் கவ னிக்கப்படமாட்டாது என்பதை நீங் கள் நன்குணரவேண்டும். இந்தஉண் மையை நீங்கள் உணரவில்லையானல், விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றிலிறங்கிய கதைக்கு ஒப்பா வீர்கள். நீங்கள் விழுவதற்கு நீங்க ளே குழி வெட்டியவராவீர்கள். உங் கள கழுத்துக்கு நீங்களே சுருக்குப் போடுபவராவீர்கள். நன்முய் சிந்தி யுங்கள். உங்கள் முற்போக்கை நீங் களே தடை செய்து தற்கொலை செ ய்து கொண்டவராவீர்கள். தேவ தாசிகள் ஒழிய வேண்டுமென்றல், பட்டம் பெற்ற பூரண விடுதலைக்கார புண்ணியவான் சாஸ்திரத்தைகாட்டி அது இருக்கத்தான் வேண்டுமென்கி றார். பாலிய மணம் கூடாதென் றல் அது மத விரோதம் அதற்காக சத்யாக்கிரகம் செய்வோம், ஆயிரக் கணக்கில் சிறைக்கு செல்லுவோம் என்றார். விதவைகளுக்கு சொத் துரிமை யென்றல் சுருதி ஸ்மிருதிகளை கைகாட்டி மதத்திற்கு அழிவு என்று ஒரு மகான் இந்த இருபதாம் நூற் றாண்டிலே, எங்கும்சீர்திருத்தம், சீர் திருத்தம் என்ற பேரொலி கேட் கின்ற இந்நாளிலே, பிரிட்டிஷ் அர

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

(The Work before us in India)

நாம் செய்யவேண்டிய வேலை என்ன?

ஜனநாயக ஆட்சியின் (Democracy) ஆபாஸம்.

[தோழர் M. சிங்காரவேலு B. A., B. L.,]

(VI)

முன் எழுதிய வியாசங்களில் நமது நாட்டின் தற்கால நிலைமையை சுருக்கமாக வரைந்து, அந்நிலையைப்போக்கி, தேசம் சீரடையக்கோரும் சில கட்சியினர்களுடைய போலிப்பரிகாரங்களைக்குறிப்பிட்டு, அவைகளின் ஆபாசங்களை வெளியிட்டோம். இனி நமது நாடு சுகம் பெற வேண்டி, நாம் செய்யவேண்டிய வேலையைக் குறிப்பிடுவாம்.

முதலில், நமது நாட்டின் பல கோடி பாமர மக்களின் அறியாமையை நீக்கப்பாடுபடவேண்டும். இந்த அறியாமைக்கு அடிப்படையாகவுள்ள, சுயநந்நாமின்மையும், மத கற்பனைகளும், ஜாதித்துவேஷங்களும் அறவே ஒழியுமாறும், அவை நிறைந்துள்ள ஸ்தாபனங்களில் உண்மை சுதந்தரமும், பகுத்தறிவும், விஞ்ஞானமும் கூட்டுறவும் நிறையுமாறு, உழைக்க வேண்டும். ஜாதி ஒழியவேண்டும், மத கற்பனைகள் தொலையவேண்டும், சுதந்தரம், சமத்துவம், சகோதரத்வம் தழைத்தோங்கவேண்டும் என்று வாய்ப்பந்தல் போடுவதில், பிரயோசனமில்லை. வேத கால முதல், இவ்வித வாய்ப்பந்தல் போட்டு வந்தும், உண்மை சுதந்தரமாகிலும், உண்மை சகோதரத்துவமாகிலும், உண்மை சமத்துவமாகிலும், உலகில் ரஷ்ய நாட்டைத்தவிர, மற்றெந்த நாட்டிலாகிலும், வந்ததாக நமக்கு விளங்கவில்லை.

நமது பரத நாட்டில், பற்பல நாகரீகங்கள் தோன்றி மறைந்தன. வேத கால நாகரீகம், உப நிஷத்து கால நாகரீகம், புத்த கால நாகரீகம், மத்திய கால நாகரீகம், அதாவது புராணகால நாகரீகம் தோன்றி மறைந்தன. அந்த நாகரீக காலங்களில், வலியோர், எளியோர் இல்லாத நிலைமை இருந்ததாகத் தெரியவில்லை. கடந்த 5000 வருஷங்களாக சிலரே உலக சம்பத்துக்களை அனுபவித்தும் பலர் பஞ்சத்திலும், இல்லாமையிலும் வருந்தியும் வந்திருக்கின்றனர். வாஸ்தவத்தில் அந்தக் காலத்து பாமர மக்களுக்கு, அறியாமை நீங்கி, சுயமரியாதை விளக்க முற்றிருக்கும் பட்சத்தில், வேதகாலத்து சண்டைகளாகிலும், மகாபாரத சண்டைகளாலும், இராமாயணப்போர்களாகிலும், மத வெறியால் மத்திய காலத்தில் நடந்த போர்களாகிலும், நடந்திராதென்பது நிச்சயம். இன்றைக்கும், உலக வல்லரசுகள், பொது மக்களின் அறியாமையை, கைவசப்படுத்திக்கொண்டே எல்லாவித துர்நடத்தைகளுக்கு உலகை ஆளாக்கி வருகின்றார்கள். இன்று உலகிலுண்டாகிய நெருக்கடி புதிதென எண்ணவேண்டியதில்லை. இந்த நெருக்கடி, தலைமுறை, தலைமுறையாக வந்திருக்கும் நெருக்கடியே. அந்தக் காலங்களில், நெருக்கடி தோன்றியும், மறைந்தும் வந்திருக்கின்றன. குருக்ஷேத்திர சண்டை பிறகு, மாண்ட அக்குரோணி சேனைகளின் குடும்பங்கள், என்ன கதியடைந்திருக்கலாமென்று எண்ணுகிறீர்கள்? அல்லது, ராமர், இலங்கையை அழித்த பிறகாகிலும், அல்லது தென்பாண்டியன், இலங்கை அரசனை, அடிமையாக்கிய பிறகும், இலங்கையிலாகிலும், அல்லது, தென்பாண்டிய நாட்டிலாகிலும், மக்களை இழந்த குடும்பங்கள், சுபீட்சமாக வாழ்ந்திருப்பார்களென்றுஎண்ணுகின்றீர்களா? காலாகாலங்களாக, பாமர ஜனங்கள், உண்மை சுதந்திர ஞானமின்றியே, கண்ட தலைவர்களுக்கெல்லாம் தலைகொடுத்துவந்த நிமித்தத்தால், வறுமையிலும், பஞ்சத்திலும், நோயிலும் அகால மரணத்திலும் கஷ்டப்பட்டே வந்திருக்கின்றனர். 2000 வருஷங்களுக்கு முந்தி, நமது நாட்டை ஆண்டு வந்த அசோக சக்கரவர்த்தி செய்த சண்டைகளால் நேர்ந்த கொடுமைகளை தானே வரைந்துள்ளார். அந்தக் காலத்திலும், இந்தக் காலத்திலும், எந்த காலத்திலும் வாழ்ந்து வரும் பாமர மக்களின் நிலைமை ஒன்றே என்பதற்கு, ஆட்சேபணை என்ன?

நேற்று நடந்த மகா யுத்தத்தின் காரணங்களை தெரிந்து கொள்ளாமலே, பாமர மக்கள், நாய்களை வேட்டையில் உசுப்படுத்துவதைப் போல் தூண்டப் பட்டு, இருபது கோடி மக்கள் வீணே மடிந்தனர். எவ்வளவு வயதில் கோடான கோடி மக்கள், போரில் மாண்டதும் காயமடைந்ததும் பயனுக, மேல் நாடுகள், பிணி, மூப்பு, சாக்காட்டால், இன்றும் வருந்த நேரிட்டிருக்கிறது. இவ்வளவு கஷ்டமும் என்? அறியாமையால் தான் என அறிக. எந்த நாட்டில், உண்மை சுதந்தரமாகிலும், சுயராஜ்ய மாகிலும், பாமர ஜனங்கள் பெற்றுள்ளனர் என்று கேட்கின்றோம்? பிரான்ஸிலா? ஜெர்மனியிலா? அமெரிக்காவிலா? ஜப்பானிலா? அல்லது நம்மை ஆளும் பிரிட்டனிலா? பாமர மக்கள் அந்த நாடுகளின் சுயராஜ்யமடைந்துள்ளார் என்று சொல்லும் பட்சத்தில், அந்த நாடுகளின் பாமர மக்கள், கோடி கோடியாகத்தங்களுக்கே, வேலை இல்லாமலா செய்து கொள்ளுவார்கள்? தங்கள் கூலியையும் சம்பளத்தையும் தாங்களே குறைத்துக் கொள்வார்களா? தங்கள் தலை மேல் தாங்களே அதிக வரிகளை சுமத்திக் கொள்ளுவார்களா? தங்களுக்கு ஒரு பலனும் வராத சண்டைகளிலா தலையிட்டுக் கொள்ளுவார்கள்? தங்கள் தொழிற்களாகிய எதிராளித் தொழிலாளர்களையா கொல்ல வேண்டு மென்று, தங்கள் கட்டளை வேண்டிக் கொள்ளுவார்கள்? இவ்வளவு தீமையும், அண்மை சுயராஜ்யம் பெற்ற பொதுவக்களா, விலை கொடுத்து வாங்குமார்கள்? சிலரே, பொது மக்களின் அறியாமையைக் கொண்டு, அவர்கள் அறியாமையின் பெயரால், வேலை இல்லாமையை அதிகரித்தும், கூலியைக் குறைத்தும், வரியை அதிகரித்தும், உலகப் போர்களை விளைவித்தும் வருகின்றார்களென எண்ணலாமே யொழிய, பாமர மக்களின் பகுத்தறிவால், இந்த அநீதிகள் யாவும், நிகழுருகின்றன வென, எண்ணலாகாது. வல்லரசுகள் செய்யும் திருவிளையாடல்களில், நமது பாமர மக்களை, பலகரையைப் போல் உருட்டி, ஜெயமோ, அப ஜெயமோ, பெறுகின்றார்களே யொழிய, தாங்கள் செய்யும் அட்டூழியங்களுக்கெல்லாம், பாமர மக்களின் தெளிவுபட்ட சம்மதத்தைக் கொண்டு, இந்த அரசியல் திருவிளையாடல்களை, நிகழ்த்துகின்றார்களென, எண்ணுவதற்கும் இடமில்லை.

வல்லரசுகள் மாத்திரமல்ல, இந்த கொடூர திருவிளையாட்டுகளில் உடன் பட்டவர்கள். இவர்களுடன், மத குருக்களும் கலந்தே, பாமர மக்களின் புத்தியின்மையைக் கையாளுகின்றார்கள். எந்த காரியத்திற்கும் கடவுள் அருளை வேண்டிக் கொள்ள, குருமார்களும், பாதிரிமார்களும், மதாபிமானிகளும், தூண்டுதல் செய்கின்றார்கள். துரியோதனனைக் கொல்வதற்குப் "பரமாத்மா" வாகிய கிருஷ்ணன், படைத்துணையாக வர வேண்டும்.! ஜர்மன் குழந்தைகள் வதைபடுவதற்கு, இங்கிலீஷ் கடவுள் அருள் வேண்டும்!! இவ்விதமாக அந்த காலத்திலும், இந்த காலத்திலும், ஒருவரை யொருவர் கொல்வதற்கும், நாட்டை நாசமாக்குவதற்கும், அவரவர் மதக் கடவுள்களை அவரவர்மதங்கள் வேண்டிக் கொள்கின்றன. கோடான கோடி மாந்தரை வதைய வைத்த பிறகும், ஜெயக் கொடியை கோயில்களில், நாட்டி, தீபமிட்டு, கடவுளை வாழ்த்தி வணங்குகின்றார்கள்! ஜெயத்தைக் கொண்டாட கோயில்களில் கும்பல் கூடி, கை கூப்பி ஆகாயத்தை நோக்கி, எங்கும் நிறைந்துள்ளதாக நினைத்த கடவுளை கை கூப்பி தண்டனிடுகின்றார்கள்!! இவ்வித கூட்சிகளுக் கெல்லாம், பாமர ஜனங்களை மயங்கச் செய்து, அவர்கள் அறியாமை கொண்டு அவர்களையும் கஷ்டப்பட வைப்பது விந்தையிலும் விந்தையாகும்!!! இந்த தினசரி சம்பவங்கள் தான், சுதந்திரமோ, சுயராஜ்யமோ பெற்ற உலக தேசங்களில், நிகழ்வுறுகின்றன. இவ்வித சுயராஜ்யத்தைத் தான், நமது காந்தியாரும் வேண்டு மென, தனது கடவுளை, அல்லும், பகலும், அறுபது நாழிகையும் வேண்டுவது!!!! இவரைச்சேர்ந்த அறிஞரும், அறியாதோரும், இவரது விரதத்தையும், அரைத்துணடையும், மூட பக்தியையும் கண்டு மயங்கி, "சுதந்திரம்," "சுயராஜ்யம்", "சுதேசிய மென", இவை இன்ன தென உண்மையில் அறியாமலே, அவர் சொல்லும் சொற்களுக் கெல்லாம் உடன் படுகின்றார்கள்.

இத்தகைய மனப்பான்மையை, எந்த நாட்டிலும், கண் காட்சியாகப் பார்க்கலாம். மேல்நாடுகளில் அமெரிக்க ஹூவரைப்போன்றவரும் (Hoover) ஆங்கில பால்டுவினைப் போன்றவரும், (Baldwin) பிரஞ்சு பிரியாண்டைப் போன்றவரும் (Briand) ஜெர்மன் புரூனிங் (Bruning) கைப் போன்றவரும், பாமர மக்களை, பம்பரத்தைப் போல் ஆட்டி வரும் காட்சியை, தினந்தோறும் பார்க்கலாம். இதே விதமாகவே நமது இந்திய தேச காந்தியாரும், நமது நாட்டு பாமர ஜனங்களுக்கு கண் கட்டு வித்தையைக் காட்டுகின்றார். இந்த சுயராஜ்யத்தை, ஜனநாயகஆட்சி (Democracy) என்று பெயரிட்டு, பொது மக்களை மயக்கி வருவதையும் எளிதில் உணரலாம். இந்த மருளைத் தான் நமது காந்தியாரும், கோருவது. இதனை விபரமாக சற்று விளக்கிக் காட்டுவோம். ஜனநாயக ஆட்சி என்று அரசியல் திட்டங்களில் வழங்கும் சொற்களின் பொருளென்ன? இதனை, அமரிக்கா தேசத்தில், தலைமை வகித்த ஆண்ட, பிரபல பிரசிடெண்டாகிய, லிங்கன் (Lincon) என்ற பெரியார் இந்த வாக்கியத்தை விளக்கியுள்ளார். அதாவது, **"எந்த அரசியல் பொது ஜனங்களால் பொது ஜனங்களுக்காக, பொது ஜனப் பொறுப்பில் நடத்து வதுகின்றதோ, அது தான் ஜனநாயக ஆட்சியாதும்."** என்றார். இந்த

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

தேசத்திற்கு நாம் யாது செய்தல் வேண்டும்? அவைசெய்வதால் தேசத்தி லுள்ளவர்களுக்கு எதேனும் நன்மை உண்டா? அல்லது நாம் தேசத்திலுள்ள மக்களுக்குச் செய்யும் ஒவ்வொரு காரியமும், ஒவ்வொரு பிரசாரமும், ஒவ்வொரு கட்டுரைகளும் பிரயோஜன முண்டா? இதைப் பற்றி எனக்குத் தெரிந்த சில வார்த்தைகள் எழுதுகிறேன்.

முன் கூறியவற்றை எழுதப் புகுமுன் முக்கியமான சில விஷயங்கள் குறிப்பிட வேண்டியுளது. அதாவது "கருத்து வேற்றுமைக்கு இடந்தராது எதிர்த்தலியாகும்." ஒருவர் எழுதியவற்றை அவருடைய 'கருத்தை' 'கழறியதை, உணராமல், உணரமுற்யாமல், மூளையில்லாமல் எதிர்க்கிறார்கள் சிலர்; எள்ளி நகையாடுகின்றனர் பலர். மற்றும் எதாவது ஒரு புதிய விஷயத்தை எழுத முற்படாமல், அவ்விஷயத்தைப் பற்றி எழுதினவரை 'பைத்தியம் பிடித்தவன்'-அறிவிலி, நாஸ்திகன்-மூடன்' என்பன போன்ற சொற்களைக் கொண்டு எதிர்ப்பதுடன் நில்லாது' உதைபுங்கள்! கொல்லுங்கள்!' என்று கிளர்ச்சியைத் தோற்றுவித்து குழப்பத்தை உண்டாக்குகின்றனர். உண்டாக்கியுமிருக்கின்றனர்.

ஒருவர் தனது ஆராய்ச்சியின் பயனைக் 'கடவுள் என ஒன்றே, பலவோ இல்லை என்று தாம் கண்ட உண்மையை வெளியிடின், பிரசங்கம் செய்யின், அவரை உலகினர் பெரும்பாலும் சகலரும் ஒன்று சேர்ந்து 'அவன் கடவுள் இல்லை என்கிறான்-நாஸ்திகன்-இவனை யார் படைத்தது என்று கேளுங்கள் - உதைபுங்கள்-கொல்லுங்கள்! அவனை உயிருடன் வைத்திருந்தால் உலகமே கெட்டு விடும்! என்று கண்டவாறெல்லாம் வசை பாடி- வருகின்றனர் இதை நம் அனுபவத்தில் கண்டது!

மற்றொருவர் 'சமயம்' என்பது மக்களால் உண்டாக்கப் பட்டது ஆதலால் அதை ஒழிக்க வேண்டும். சாதி சமயங்களை வெட்டிப் புதைக்க வேண்டும்!! என்று தெரிவித்தால் ஒரு சாரார் ஒப்புக் கொள்கின்றனர், ஆனால் வைதிகர்கள், சைவப்பிண்டங்கள் இதை எதிர்க்கின்றார்கள். இவை எல்லாவற்றையும், தாங்கிக் கொண்டு தான் நம்மியக்கம் விடாமல் முரசு ஒலி சப்தித்துக் கொண்டு இவ்வேழு ஆண்டுகளாக உலாவி வருகின்றது.

ஒன்றுபட்டால் நன்மையுண்டு.

[ஈரோடு சி. நாகப்பன்]

மற்றும் பழைய புராணங்கள்-பல சமயங்களும் அவைகளைப்பிரிமறைகள்-இதிகாசங்கள் ஸ்மிருதி த்ய பலவாறான மாறுபாடுகளை கள்-சாஸ்திரங்கள் ஆகியன வெல் யும், வேற்றுமைகளையும் உண்டாலாம் புரட்டு நூல்கள்! அவை மக்க்கி தேயத்தைப்பாழாக்குகின்ற களை அறியாமைக்கு இழுத்துச் னர். மற்றொரு சாராருக்குப்பல செல்கின்றன. எனவே இறைவனை உண்டாக்கி அவை அவைகளை அழியுங்கள்! சுயமரி களைக்கொண்டு பணம் பறிக்க யாதையுடன், பகுத்தறிவுடன் வழி தேடி மக்களை கடவுள் பித் வாழ எழுங்கள்! என பறை சாற் தர்களாக ஆக்கிவிடுகின்றனர். றுகின்றது சுயமரியாதை இயக் இன்னும் மக்கள் அனைவர்களை கம்! ஆயின் இவைகளை எல்லாம் யும் வேறு வேறுகப் பிரித்து விஷ ஒப்புக் கொண்டாலும் ஒரு சிலர் விதமான சமயங்களையும், கொள் எதிர்க்கின்றனர். எதற்கு? வயிற் கைகளையும், பழக்க வழக்கங்களை றுப் பிழைப்பிற்காகவும் கூலிக்கு யும் கற்பித்துக்கொண்டு—உண் மாரடிப்பதற்காகவும்! ஆயின் டாக்கிக்கொண்டு மக்களை ஏமாற் அதற்காக அஞ்ச வேண்டிய றுத்துகின்றனர்.

நில்லை. ஆயினும் அவர்கள் நம் அனைவரும் மக்கள்—அனைவ கூற்றைக் கவனிக்காமல் குறுகிய ரும் ஒரே இனம்—எல்லோரும் அறிவுடன் ஒன்றுத் தோன்றுமல் சகோதரர்கள் என்பதை மக்களு பத்திரிகையில் எழுதியும் வருகின் க்கு ஊட்டாமல் சிலர் சண்டை றனர். களையும், வேற்றுமைகளையும் கிள

நாம் முன் எழுதப்புகுந்ததைச் ப்பி விட்டு, அறிவிழந்த மிருகங் சிறிது கவனிப் போம். கருத்து களைப் போல் பாராட்டி வருவ வேற்றுமைக்கு இடந்தராத எந்த தைக்கண்டு யாம் கவலையும்— நாடும் முன் நிலைக்கு வருவது வருத்தமும் அடைகின்றோம். அரிது! அரிது!! என்று பல இதற்காக சகோதரர்களாகிய— முறையும் அறைவோம்? கருத்து இளஞ்சிங்கங்களாகிய நாம் யாது வேற்றுமைக்கு இடந்தராத மனி செய்தல் வேண்டும்?

தர் அறிஞராக இருக்க முடி மக்கள் எல்லோரையும்—எந் யாது! புதிய கருத்தை தப்பெரிதும் உலகினருக்கு விளக் நாட்டினராய் இருந்த போதிலும் கிக்காட்டுவதே அறிஞருடைய —எவ்வகுப்பினராயிருந்த போதி கடமை! லும்—அவர்கள் 'மனித உருவம்'

ஆகையால் எவர் எக்கருத்து பெற்று இருப்பின் அவர்கள் டன் வெளியிட்டாலும் அதை அனைவரும் சகோதரர்கள் என்று எற்று—அக்கருத்தை— அறிவுக் எண்ணி அவர்களுக்கு நமது கும்—அதுபவத்திற்கும்— இயற் மறுத்த கொள்கைகளை எடுத்துக் கைக்கும் ஒத்து வருவதாயிருந் கூறிச் சீர்திருத்த வேண்டும். சா தால் ஏற்றல் வேண்டும். இன் தியமல்ல வேறுபாடுகளை அறுத் றல் துன்றுக. இதை விட்டு தெறிதல் வேண்டும். எல்லோரும் விட்டு கேவலம் விலங்கினங்கள் ஓரே வகுப்பினர் என்ற எண்ணம் போல உறுமலும், எதிர்த்தலும் உதயமாகச் செய்தல் வேண்டும். சிறிதும் நலன் தராது. இனிமேல் நாம் மக்களாக இருக்கவேண்டு நாம் எடுத்துக்கொண்ட விஷயத் மானால்—இந்தியா விடுதலையடை தைச் சிறிது கவனிப்போம். யவேண்டுமானால்—அறிவைப்பெ

தற்சமயம் எங்கும் சாதி வேற் ற்று சுகமாக வாழவேண்டுமானால் றுமைகளும், நிறவேற்றுமைகளு —மூடப்பழக்க வழக்கங்களை ஒழி ம்-சமயப்பூசல்களும்-மூடப்பழக்க க்கவேண்டுமானால், நாம் முன் வழக்கங்களும், இன்னும் பலவித கூறிய வாறு செய்தல் வேண்டும். மான அசம்பாவிதமான வழக்கங் இல்லையேல் ஒரு நாடோ—ஒரு கள் நம்நாட்டில் மலிந்து கிடக்கி சமூகமோ --விடுதலை பெற முடி றன. இவைகளை எல்லாத் தலை யாது என்பது முக்காலும் நிண் வர்களும்—அறிஞர்களும் அற் ணம்! நிண்ணம்!! நிண்ணம்!!! யாதவர்கள் அல்லர். இன்னும்

எல்லோரும் நாம் முன் கூறிய வாறு நடப்பின் இந்தியாவில் கொலை எது? கலவரம் எது? சாதி எது? வேற்றுமை எது? சமயம் எது? உயர்வு தாழ்வு எது? தீண்டாமை எது? ஆகையால் சகோதரர்களே! எழுங்கள்! உழைபுங்கள்!! நீங்கள் எல்லோரும் ஒன்றுபட முயலுங்கள்! பிரசாரம் புரிய வீறிட்டு எழுங்கள்! வீணை தேசீயம் என்னும் பெயரால் மயங்கித்தரியாதீர்கள்!!

"அரும் பெரும் மொழிகள்"

[சாக்கோட்டை எஸ். ஆர். சாமி]

முன்தொடர்ச்சி.

உண்மையை மறைத்து, உலகத்தை துன்பப்படுத்தும் சுபாவமும், அதற்கு ஆதாரமாக சாஸ்திரமென்று வைத்துக்கொண்டிருக்கும் கதைகளும், அழிந்துபோக வேண்டும்.....கைவல்யம்.

ஃஃ ஃஃ

கோவில் வழிபாடு மக்கள் பக்தியை வளர்க்க வென்றால், அதற்குச் செய்யும் பணச்செலவு யார் வயிற்றை வளர்ப்பதற்கு?.....
சித. சிதம்பரம்.

ஃஃ ஃஃ

மத நூல்கள் யாவும், மனிதனுடைய சுயமரியாதைக்குமுரணானவைகள்....ஆர். கே. ஷண்முகம்.

ஃஃ ஃஃ

திரு. காந்தியவர்கள் மூலமாக எதிர்பார்க்கும் ராம ராஜ்யத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு, விடுதலை காலம் எப்படவே எப்படாது..... எஸ். ஜெயராம் பி. ஏ.

ஃஃ ஃஃ

பிரிட்டிஷ் ஆட்சியானது, எப்படிப்பார்த்தாலும், அதுபார்ப்பனிய ஆட்சியைவிட, அதுவும் திரு. காந்தியார் "ராமராஜ்ய" ஆட்சியைவிட மோசமானதல்ல ..... ஈ. வெ. இராமசாமி.

ஃஃ ஃஃ

ஒன்றிலிருந்து ஒன்று இயற்கையாகவோ மாறுமாதலின், இயற்கையாகவே மாறும் பொருள்களுக்கு கடவுள் உதவி என்?..... எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல்.

ஃஃ ஃஃ

மதப்பற்றையும், மதத்தையும் ஒழித்தலே, இந்தியாவுக்குச்செய்யும் தேசியத்தொண்டு.
T V சோமசுந்தரம் பி.எ. பி.எல்

ஃஃ ஃஃ

கலைபுரைத்த கற்பனையே, நிலையெனக்கொண்டாடும் கண் மூடி

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

காரணமின்றி காரியமில்லை!

காரணம் ஒழியாது காரியம் அழியாது!

"உலகம் அனித்தியம்"

என்ற மனப்பான்மை மாறவேண்டும்.

[உடுமலை கனகராஜன்]

நண்பர்களே, நான் ஆரம்முதல் காங்கிரஸ் கொள்கைகளையும், சட்ட மறுப்பியக்கத்தையும் எதிர்த்து எழுதியும், பேசியும் வந்திருக்கிறேன். ஏன் அம்மாதிரி செய்தேன் என்றால், திரு. காந்தியாருடைய கொள்கைகளையும், காங்கிரஸ்வாதிகளின் போக்கையும் தெரிந்து கொண்டேன். திரு. காந்தியார் ஒரு மதவாதி என்பதையும், காங்கிரஸ் ஒரு மத பாதுகாப்பு இயக்கமென்பதையும் நான் அறிந்திருந்தேன். நான் அப்படி நினைத்தது சரியென்பதை திரு, காந்தியார் கிராம போன் பிளேட் கொடுத்தும், காங்கிரஸ் 'மதப்பாதுகாப்பு' தீர்மானம் செய்தும், ருசுப்படுத்தி விட்டது. நிற்க,

தற்பொழுது ஆரம்பிக்கப் பட்டிருக்கும் சட்ட மறுப்பு என்ன வாயிருக்கிறது, என்னவாகும் என்பதில் எனக்குச் சந்தேகமே கிடையாது. இந்த இயக்கம் நமது அடிமைத் தனத்தையும், கஷ்டங்களையும் போக்க முடியாது. இதை அறிந்தும் சிலர் சுயநல காரணமாக சிறைக்குச் செல்கிறார்கள். சில பத்திரிகைகள் பொது ஜன ஆதரவைப்பெற வேண்டிகாங்கிரஸைஆதரிக்கிறார்கள், சிலர் சட்ட சபையில் அங்கம் வைக்கும் காரணமாக காங்கிரஸை ஆதரிப்பவர்கள் மாதிரி பாசாங்கு செய்கிறார்கள். அதிலும் சுயமரியாதை இயக்கத்தை வீழ்த்த வேண்டும் என்றும், மதத்தையும், ஜாதி உயர்வையும் காப்பாற்ற வேண்டுமென்னும் எண்ணத்தோடு காங்கிரசின் சட்ட மறுப்பில் கலந்து கொள்பவர்களின் அறியாமையை என்னென்பது. ஆனால் காங்கிரசின் சூட்சி பிரசாரத்தில் மயங்கி, கீழ்படு சூதறியாத சில வாலிப நண்பர்கள் அடிபடுவதை நினைக்கும்பொழுது பரிதாபமாகவே இருக்கிறது. அவர்களுடைய முயற்சியும் தியாகமும் உண்மையான விடுதலைக்கு உபயோகப்படாதது மன்றி மக்களுடைய உண்மைச் சுதந்திரத்திற்கு மாறான சுயநலக் கொள்கைக்காக சிலரால், அவ்வாலிபர்களை கருவியாக உபயோகப்படுத்திக் கொள்வதைப் பார்க்க சகிக்காத காரணந்தான், என்னை அடிக்கடி எழுதும்படி தூண்டுகிறது. நண்பர்களே, நான் எழுதியதை நன்றாய் படித்துப் பாருங்கள். சட்டமறுப்பில் நம்பிக்கையுள்ள உங்களுடைய நண்பர்களுக்கு இதைக்காட்டுங்கள். இவ்விதமெல்லாம் எடுத்துக் காட்டிய பிறகும் சட்ட மறுப்பில் கலந்து கொள்வார்களாகில் நாம் என்ன செய்ய முடியும். நமது தலைவர் சொன்னமாதிரி, இமய மலைக்குடை பிடிக்க யாரால் முடியும். நிலைமை நெருக்கடியாயிருக்கிறது. தேசம் உங்களை அழைக்கிறது, இந்தியத் தாய் அழுகிறாள், இன்னும் இம்மாதிரி பலவற்றை சொல்லி காங்கிரஸ் பிரசாரகர்கள் ரோஷம் வரும்படி செய்வார்கள் எய்ப்பார்கள். அப்படிச் சொல்லும் காங்கிரஸ் காரர்களும், அனுதாபிகள் மாத்திரம் ஏன் தற்கால நெருக்கடியான நிலைமையை உத்தேசித்து ஜாதி இறுமாப்பையும், மத வைராக்கியத்தையும் விட்டுக் கொடுப்பதில்லை? மற்ற ஜனங்களுக்குத் தான் இந்த நெருக்கடியோ! இவர்களுக்குத் தற்போதைய நெருக்கடி இல்லை போலும்!! வெள்ளைக்காரன் கொடுமை செய்கிறான். என்கிறார்களே யொழிய, இவர்கள் தீண்டாதார்களுக்கும், பெண்களுக்கும் கொடுமை செய்வதை நிறுத்திஞர்களில்லை. நிற்க,

நம் அடிமைத் தனத்திற்கு முக்கியமாயுள்ள காரணம் என்ன வென்பதை முதலில் அறிய வேண்டும். பின் அதை முதலில் களைந்தெறிய வேண்டும். அது தான் முறை, அது தான் அறிவுள்ள செயல் அப்படிச் செய்யாமல், அக்காரணத்திலுல் ஏற்பட்ட காரியமாகிய அன்னியர்களுடைய ஆட்சியைக் கண்டு அதை மாத்திரம் வெறுப்பது ஆராய்ச்சி யற்ற செயலாகும். ஒவ்வொரு காரியம் நிகழ்வதற்கும், ஒவ்வொரு காரணம் உண்டென்பது யாவரும் உணர்ந்ததாகும்.

இந்தியாவானது ஆயிரக்கணக்கான வருடங்களாகஅன்னியர்படையெடுப்பிற்கு அடிமைப் பட்டு வந்தது காரியம். இக்காரியம் எற்படுவதற்கு காரணம் என்ன வென்று ஆராய வேண்டும். நான் யோசித்த அளவில், இந்தியர்களாகிய நாம் 'உலகம் அனித்தியம்' என்றும் மேலுகதித்துள்ள 'நித்தியத்தை' அடைவதே நமது லட்சியமாகக் கொண்டிருந்ததும், கொண்டிருப்பதுமேயாகும். இது இந்து மதத்தின் தீமையில் தலை சிறந்தது. மற்ற மதஸ்தர்களை (கிறிஸ்து, முகமதியர்களை) நம்மவர்கள் லோகாயுத மதஸ்தர்கள் என்றும், மலைகிய மதமென்றும் கேலி செய்கிறார்கள். லோகாயுத மதஸ்தர்களான கிறிஸ்தவர்களும், மகம்மதியர்களும் உலகத்தில் பல தேசங்களை தம் வயப்படுத்தி ஆட்சி புரிகிறார்கள்.

'உலகத்தை அனித்தியம்' என்று புறக்கணித்த இந்துக்களுக்கு அவ்வுலகிலுள்ள சுதந்திரமும் புறக்கணிக்கப்படுவதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. ஆகையால் நாம் அடிமையாவதற்கு மூலகாரணமாயிருந்த, **உலகம் அனித்தியம்** என்ற எண்ணத்தை மாற்றி, உலக இன்பத்தை அனுபவிக்கும்படியான, உலக இன்பத்தை முக்கியமானதாகக் கருதும்படியான, மனப்பான்மையை மக்களுக்கு பிரசாரத்தின் மூலம ஊட்ட வேண்டும். உலக விவகாரங்களில் கவலையில்லாமலிருக்கச் செய்ததும், உலக வாழ்வை அலட்சியம் பண்ணும்படியாக செய்வதுமாகிய, பரலோகம், அதிலிருக்கிறது என்கின்ற கடவுள் முதலான கற்பனை உலகங்களையும், தவறான எண்ணங்களையும் அடியோடு அகற்ற வேண்டும்.

நாம் சுதந்தரமடைவதற்கு இக்காரியங்களை செய்ய வேண்டியிருக்க இவைகளை எல்லாம் கொஞ்சமும் கவனியாமல், அவ்விஷயங்களில் கவலையில்லாமலிருப்பது மன்றி, இவைகளுக்கு ஆதரவாக மதப்பாதுகாப்பு பழக்க வழக்க பாதுகாப்பு போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றுவதும், கடவுளைப் பற்றி கிராம போன் பிளேட் கொடுப்பதும் ராம பஜனை செய்வதுமாக விருந்து கொண்டு, கதர், ஹிந்தி, மறியல், சட்டமறுப்பு என்றால் அவர்களை எப்படி கண்டிக்காமல் இருக்க முடியும்? உண்மையை எடுத்துச் சொன்னால், தேசத்துரோகி என்று மிரட்டி எண்ணுவதால் பயனென்ன?

நமது அடிமைத்தனம் உலகம் அனித்தியம் என்ற மனப்பான்மையில் புதைந்து கிடக்கிறது. உலகம் அனித்தியம் என்னும்எண்ணம் தான் அடிமைத்தனம் என்னும் நம்நேரான எதிரி, அந்தஎதிரியினுடைய அதாவது உலகம் அனித்தியம்என்னும்மனப்பான்மையினுடைய சாயல் (நிழல்) தான் வெள்ளைக்காரன் என்பது எனது முடிவான அபிப்பிராயம். நமது அடிமைத்தனத்திற்கு பிரிட்டிஷ் அரசாங்கம்தான் காரணம் என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள். அவர்களை நான் கேட்பது என்னவென்றால் பிரிட்டிஷார் ஆட்சிக்குமுன்பு இந்தியா சுதந்தர நாடாக விருந்ததா? அல்லது அலெக்ஷாண்டர் படையெடுப்பிலிருந்து இதுநாள் மட்டும் அன்னிய படையெடுப்புகளுக்கு அடிமைப்பட்டு வந்ததா? என்பதேயாகும். இதிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சிதான் நாம் அடிமையாயிருப்பதற்குக் காரணம் என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுவது பிழையாவது காண்க.

நமது கஷ்டமான நிலைமைக்கு அடிமையாக வாழ எற்படுவதற்கு காரணமாக உள்ள 'உலகம் அனித்தியம்' என்ற எண்ணத்தையும்: இதற்கு அடிகோலிய மதம் முதலியவற்றையும் அழிக்க முன் வருகிறீர்களா? அல்லது காங்கிரஸ்காரர்கள் காட்டும் அதனுடைய நிழலாகவுள்ள, பிரதிபிம்பமாகவுள்ள அதன்காரணமாக எற்பட்ட பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்க்கப்போகிறீர்களா வென்று அறிவுள்ள உங்களைக்கேட்கிறேன்.

இப்பொழுது வாசகர்களாகிய நீங்கள் எனது அபிப்பிராயத்தையும், நான் எழுதின விஷயங்களையும் படித்திருக்கிறீர்கள். இசமயத்தில் (காங்கிரஸ் அபிமானமுள்ளவர்களுக்கு) ஒரு பெரிய சந்தேகம் உண்டாவது சகஜம். அதாவது மகாத்மா காந்தி, மாஜி சட்டசபைத்தலைவர் படேல் மற்றும் அநேக வக்கீல்கள் கோடீஸ்வரர்கள், பெரிய பெரிய மனிதர்கள் எல்லாம் காங்கிரசைப் பின்பற்றி சட்ட மறுப்பில் இறங்கி சிறை சென்றிருக்கிறார்கள். அவர்கள் இதை எல்லாம் யோசிக்காமலிருப்பார்களா, அவர்கள் அப்படி செய்தது பிழையாயிருக்க முடியுமா, அவர்கள் பிழை செய்வார்களா என்ற எண்ணம் தோன்றலாம். இதையே கிளிப்பிள்ளை தேசபக்தர்கள் இடையிடையே கூட்டங்களில் பேசுகிறார்கள். இதற்குத்தகுந்தமாதிரி நம்மக்கள் சுய அறிவில் நம்பிக்கையில்லாதவர்களாதலாலும் மகாத்மா அவதாரபுருஷருடைய போக்கு சரியானதாயிருக்கும் என்ற எண்ணமுள்ளவர்களாதலாலும், காங்கிரஸ் பிரசாரகர்களின் சூழ்ச்சி வார்த்தையில் பட்டுக்கொள்கிறார்கள்.

இம்மாதிரியேதான் காங்கிரஸ் போதனைகள் இருக்கும். "மகாத்மா சொன்னார், நீங்கள் செய்யவேண்டும்' 'நீங்கள் வீரர்கள் அல்லவா சட்டத்தை மீறுங்கள்' வீரர்களாயிருந்தாலென்ன நினைத்ததை எல்லாம் செய்வதா, ஒரு காரியம் செய்வதற்கு முன் யோசிக்கவேண்டாமா என்று கேட்டால், உடனே, 'தேசத்துரோகி' பட்டம் கட்டிவிடுவார்கள்.

ஆனால் நம் சுயமரியாதை இயக்கத்தில் சொல்வதையெல்லாம் சொல்லிவிட்டு நீங்கள் உங்கள் அறிவைக் கொண்டு யோசித்து முடிவு செய்யுங்கள் என்று சொல்லுகிறோம். நாம் சொல்வதெதையும் மனிதசக்திக்கு மீறியதாகச்சொல்லி மக்களை மிரட்டுவதில்லை. இதிலிருந்து எது நேர்மையான இயக்கம் என்பதும் ஒருவாறு தெளிவுறலாம்.

மகாத்மாவையும், படேலையும்விட சுயமரியாதைக்காரர்களுக்கு புத்தி அதிகமாவென்றும் இன்னும் பல வாறுக காங்கிரஸ் பிரசாரகர்கள் பேசுவதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம், மற்றும் நம் மக்களுக்கும் இந்த அபிப்பிராயந்தான் குடிகொண்டிருக்கிறது. இதற்கு நான் எழுதும் சமாதானம் யாதெனில் ஒரே ஒருவன் உண்மை அறிந்தவனு

யார் நல்லவர்கள்?

[சாமி. சிதம்பரனார்]

சுயமரியாதை என்ற சொல்லை அன்போடு வரவேற்கின்றவர்கள் சிலர்; இச்சொல்லைக்கேட்டவுடன் ஒன்றும் தெரியாதவர்களாய் விழிக்கின்றவர்கள் சிலர். இச்சொல்லைக்கேட்டாலே தங்களுடைய அப்பன் வீட்டு ஆஸ்திக்கு அழிவு வந்துவிடும் என இரு காதுகளையும் மூடிக்கொள்ளுபவர் சிலர்; இச்சொல்லைக்கேட்டு அளவுகடந்த வெறுப்படைகின்றவர் சிலர்; இச்சொல்லைக்கேட்டவுடன் அஞ்சி நடுநடுங்குகின்றவர்கள் பலர். எப்படியோ இச்சொல் நாடு முழுவதும் பரவி விட்டது. இதனால் சுயமரியாதைக்காரர்கள் என்ற ஒரு கூட்டத்தார் இருப்பதாக எல்லா மக்களும் அறிந்திருக்கின்றனர்.

சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி உணராதவர்கள், இவர்களை ஒரு கொடுமை நிறைந்த கூட்டத்தார் என்றும், தேசத்திற்கும், கடவுளுக்கும், மதத்திற்கும் விரோதமாக இருக்கின்ற தேசத்துரோக நாஸ்திகக்கூட்டத்தார் என்ற அளவிலும் தரிர்த்து கொண்டு இருக்கின்றனர். ஆகையால் சுயமரியாதைக்காரர் என்று சொல்லுகின்ற ஒருவரைக்கண்டால் இவர்கள் பயப்படுகின்றனர். ஆனால் சுயமரியாதைக்காரர்கள் சொல்வதென்ன? சுயமரியாதையை வெறுக்கும் வயிற்றுப்பிழைப்புக்காரராகிய புராணமரியாதைக்காரர்கள் கூறுவது என்ன? என்பதை மாத்திரம் கொஞ்சம் யோசித்துப்பாருங்கள்! அப்பொழுது உண்மை தெரியும். சுயமரியாதைக்காரர்கள் யோக்கியர்களா? புராணமரியாதைக்காரர்கள் யோக்கியர்களா? என்பது தெரியும்.

முதலில் சுயமரியாதைக்காரர்கள் சொல்லுவதைக் கவனியுங்கள்! அவர்கள் உலகத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக்கண்டு அவற்றுக்குத் தக்கபடி மக்களுடைய நிலையை மாற்றிக்கொண்டு வாழவேண்டுமென்று சொல்லுகின்றனர். அண்டை வீட்டுக்காரன் எவ்வளவு சிறப்போடும் சுகத்தோடும் வாழுகிறானோ அதைப்போலவே நீங்களும் வாழ முயற்சி செய்யுங்கள்! என்று சொல்லுகின்றனர். சுருங்கக்கூறினால் சுயமரியாதைக்காரர்கள் கேரிலும் அனுபவத்திலும் கண்டதைக்கூறுகிறார்களேயொழிய காணாததை ஒன்றைப்பற்றி கூறுவதில்லை. நம்புவதுகூடக்கிடையாது.

தாங்கள் நேரே காணாத விஷயத்தைப்பற்றியும் அனுபவத்தில் அறியாதவிஷயத்தைப்பேசுகிறவர்கள்தான். கண்டதைப்பற்றிக் கூறுவது உண்மை என்பதும், காணாதவைகளைப்பற்றிச் சொல்லுவது பொய் என்பதும் உங்களுக்குத்தெரியாததல்ல. சிற்சிலருக்கு வாதியாகிய புத்தர் உபதேசங்களில் "தான் பார்த்து அனுபவித்து அறிந்த ஒன்றைப்பற்றி உரையாடுவதே அறிவுடைமையாகும், தான் காணை அனுபவியாத ஒன்றைப்பற்றிப் பேசுவது அறியாமையாகும்" என்பது மிகச்சிறந்த உபதேசமாகும். இந்தக் கொள்கையின்படி பார்த்தால், சுயமரியாதைக்காரர்கள் அறிவுடையவர்களா? புராண மரியாதைக்காரர்கள் அறிவுடையவர்களா? என்பது விளங்காமற்போகாது.

அறிவாளியாகிய, சுவாமி ராமதீர்த்தர் என்பவரைப்பற்றி ஆஸ்திகர் அறிவார்கள். அவர் செய்த பிரசங்கங்களில் அனேகம் சுயமரியாதைக்கொள்கைகளை வலியுறுத்தி கவும், உலகிலுள்ள மற்றமக்கள் அனைவரும் முட்டாள்களாகவும் இருக்கமுடியும், முடிந்துமிருக்கிறது என்பதேயாகும்.

சிலநூற்றாண்டுகளுக்கு முன் சூரியன்தான் பூமியை சுற்றுகிறது என்று அனைவரும் நம்பியிருந்தார்கள் பிறகு முட்டாள் என்று அக்காலத்தில் உலகத்தாரால் கருதப்பட்ட ஒருவன் பூமிதான் சூரியனை சுற்றுகிறது என்றான் இதை அவன் உயிருக்கு துணிந்து சொல்லவேண்டியதாய் அக்காலநிலையிருந்தது. அனைவரும் அவனை முதலில் முதல்தரமான முட்டாள் என்றும், பயித்தியம் பிடித்துவிட்டது என்றும்சொன்னார்கள். ஆனால் பிறகு அவன் சொன்னது உண்மையாய் போய்விட்டது. அவனைப்பயித்தியக்காரன் என்ற உலக மக்கள் அனைவரும் முட்டாள்களாய்விட்டார்கள். ஆகையால் பெரும்பான்மையான மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயமே சரியானது என்று நினைப்பது அறிவீனம் என்றே சொல்கிறேன். இப்பொழுது திரு. ஈ. வெ. ராமசாமி அவர்களை பைத்தியக்காரர் என்றும், புத்தி சுவாதீனமில்லை என்றும், அவருடைய சகாக்களை அறிவில்லாதவர்கள் என்றும் இன்றைக்கு பெரும்பான்மையான மக்கள் சொல்லுவது பிறகு அப்படிச் சொன்ன பெரும்பான்மையான மக்கள் முட்டாள்களாகவும், முட்டாள்கள் என்று சொல்லப்பட்டவர்கள் சொல்லுவது உண்மையாகவும் ஏற்படக்கூடும் என்பதை தேசிய ஆவேச இயக்கத்தார்களுக்கும், பொது மக்களுக்கும் தெரிவிப்பதோடு இனிமேலாவது ஒவ்வொரு விஷயத்தையும் நிதானமாக யோசித்து முடிவு செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பா
கட்டளை

கள்! நான் சொல்லும் சில விஷயங்களைக் கவனியுங்கள்!

"நீ ஜன சமூகத்திற்குப் பயந்து நடக்கின்றவனா? அல்லது தீரனா? நீ எதை விரும்புகிறாய்? சிறப்பாக வாழ்வதையா? அல்லது மிகப் பணிந்து அடிமைத்தன்மையா? பலமும் பரிசுத்தமும் பொருந்திய வாழ்க்கையே சரித்திர நிலையை உயர்வு பெறச் செய்கிறது. பழக்கத்தை அதாவது சம்பிரதாயத்தை ஒட்டியும், மூடபக்தியை ஒட்டியும் நமது பூமியில் பல நூற்றாண்டுகளாகத்தகாத வெறுப்புகளும், அவற்றினும் கொடியதான உணர்ச்சியற்ற தன்மையும், ஒரே மாதிரியாக நிறைந்து நிற்கின்றன. நல்ல பயிற்சியும் சிறந்த குணமும் நிறைந்த வாலிபர்களே! மூடபக்தியையும், சம்பிரதாயங்களையும் ஒதிப்பது உங்களுடைய கடமைதான். தற்காலம் தேவையில்லாமல் வீழ்ந்து கிடக்கும் சக்திகளையெல்லாம் மாற்றத்தக்க ஜீவ சக்தியாக நிற்க வேண்டும். பரிசுத்தமும், பலமும் பொருந்திய உங்களது தற்கால நிலையை பின்னால் வரப்போகும் காலத்திற்கு உபயோகப்படுமாறு தைரியமாகச் செலுத்துக்கள்" என்று நீங்கள் போற்றும் வேதாந்த மதத்தைப்பின்பற்றிய ராமதீர்த்தர் கூறுகிறார்; இதைத்தான் சுயமரியாதைக்காரர்களும் சொல்லுகிறார்கள்! "எந்தச் சமூகத்தில் முற்காலக்கொள்கைமேலோங்கி நிற்கின்றதோ அந்தச்சமூகம் தானே உள் பலஹீனத்தால் அழிந்து போம்" என்றும் ராமதீர்த்தர் கூறுகிறார். இதைத்தான் சுயமரியாதைக்காரர்களும் "நீங்கள் இன்னும் பழைய பழக்க வழக்கங்களை முரட்டுத்தனமாகப்பிடித்துக்கொண்டு, காலத்திற்கு ஏற்ற புதிய கொள்கைகளைப் பின்பற்றமாட்டோம் என்பீர்களானால் நீங்கள் சுதந்தரம் பெற முடியாது; உலகில் சுகத்தோடு வாழ முடியாது என்று தான் சுயமரியாதைக்காரர்கள் சொல்லுகின்றனர்.

ஆனால் புராணமரியாதைக்காரர்களோ மக்களுடைய மூடப்பழக்க வழக்கங்களைப் போக்குவதற்கு ஒரு காரியங்களையும் கூறுவதில்லை: அவர்களுடைய அகராதியில் "மூடப்பழக்க வழக்கங்கள்" என்ற வார்த்தையே கிடையாது, நமது முன்னோர்கள் பின்பற்றிவந்த காரியங்கள் எல்லாம் தெய்வீக சம்பந்த முள்ளவை. அவற்றைக் கைவிட்டால் நமது சமூகம் அழிந்துவிடும். நமக்கும் நரகம் கிடைக்கும். ஜாதி மதம் போய்விடும்" என்று பயப்படுகிறார்கள். நாம் எது தேசத்திற்குத் தீமை தரக்கூடிய காரியங்கள் என்று சொல்லுகிறோமோ அது அவர்களுக்கு அதாவது புராணமரியாதைக்காரர்களுக்கு பரிசுத்தமான புண்ணிய காரியங்களாக இருக்கின்றன. இதிலிருந்து யார் அறிவாளிகள் என்பதை யோசித்தால் தெரிந்து கொள்ளலாம்.

"அந்த காரத்தில் அழுத்துவதால் ஜனங்களை ஒன்று சேர்க்க முடியுமா? பிழைகளுக்கும் மூடபக்திக்குமே அடிமை யென்று பிரமாணம் செய்து விட்டு அதன் மூலமாகத் தேசிய சமரசம் உற்பத்தி செய்ய முடியுமா? கப்பலோட்டிகள் எல்லோரும் ஒன்றுகவே நின்று தப்பின மார்க்கத்தில் கப்பலைச் செலுத்திஞல் அது விரும்பத்தக்கதா?" என்று சுவாமி ராமதீர்த்தர் கேட்கிறார். இதைத்தான் இன்று சுயமரியாதைக் காரர்களும் கூறுகின்றனர். முதலில், மனிதர்கள் ஜாதி பேதத்தில் கொண்டிருக்கும் நம்பிக்கையை, அது நிலைத்திருக்கவேண்டும் என்று நம்புகின்ற மூடத்தனத்தை ஒழியுங்கள்! மதப்பிடிவாதம் கொண்டு ஒருவர்க்கொருவர் கொடுமை செய்ய முற்படுவதை ஒழியுங்கள்! இவ்வாறு ஜாதிக்கொடுமை, மதக்கொடுமை தாண்டவமாடுவதற்கு மூலகாரணங்கள் எவையென்று கண்டுபிடித்து அவற்றின் வேரைக்களைந்து வெண்ணீரை ஊற்றிப் பட்டுப்போகும்படி செய்யுங்கள்! அதன்பிறகு தான் நாம் ஒரே "தேசிய மக்கள்" என்று ஆக முடியும்! நாம் ஒன்றுபட முடியும், என்றுதான் சுயமரியாதைக்காரர்கள் விளக்கமாகச் சொல்லுகின்றனர்.

ஆனால் புராண மரியாதைக்காரர்கள் என்ன சொல்லுகிறார்கள்? தேசியம் என்பது நமது நாட்டுப் பழைய பழக்க வழக்கங்கள் காப்பாற்றப்படுவதுதான்! நம்முடைய ஜாதி மதங்களைக் காப்பாற்ற வேண்டும். அவைகளை அழியவிடக்கூடாது. இதற்காகவே நமக்குச் சுயராஜ்யம் வேண்டும். ஆகையால் எல்லோரும் அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சி செய்யவேண்டும் என்று கூறுகின்றனர். இந்த இரண்டு விதக் கூற்றுகளிலும் எது நேர்மையானது? நாட்டிற்கு நன்மை தரக்கூடியது? என்று யோசித்துப் பாருங்கள்!

"ஒரு தேசத்திற்கு வேண்டியது சிறிய நோக்கங்கொண்ட பெரிய மனிதர்கள் அல்ல: பெருமை பொருந்திய நோக்கங்கொண்ட சிறிய மனிதர்களே அதிகம் தேவை" என்று சுவாமி ராமதீர்த்தர் கூறுகிறார். இதைத்தான் சுயமரியாதைக் காரர்கள் நம்புகிறார்கள். அவர்கள் கூட்டம் சிறியதாயிருக்கலாம்: அவர்கள் அதிகப் பணம் படைத்த முதலாளிகளாயில்லாமல் ஏழைகளாயிருக்கலாம்: ஆனால் அவர்கள் கொள்கை பெருமையானது. ஆகையினால் தான் அது வைதீகர்களின் உசசிக் குடுமியையும் பிடித்துக் குலுக்கிவருகின்றது.

நமது பிரச்சினை.

(நாகை கே. முருகேசன்)

பள்ளி மாணவர்களுக்கு பரீக்ஷை என்பது ஒரு பெரிய பிரச்சினை. இரவில் யாவருக்கும் ஒரே விதமான கேள்விகள் கேட்கப்படுகிறது. அவர்கள் அதற்கு ஒரே விதமான கருத்துள்ள பதிலைத் தான் எழுத வேண்டும். பரீக்ஷையில் தேருவதும் தேராமல் போவதும் ஆசிரியர் எதிர்பார்க்கும் அந்த ஒற்றுமையான கருத்தை எழுதும் சிற்மையைத்தான் பொருத்து நிற்கு மென்றும், வாத்தியார் முன்னதாகவே சொல்லிக் கொடுத்ததை நெட்டுருப் போட்டு வைத்திருந்து எழுதினாலும் போதும். அல்லது அடுத்தவனைப் பார்த்து கள்ளக் காப்பி அடித்தவனுக்குங்கூட பாஸ் கிடைத்து விடும். ஆனால் இயற்கை நியதியானது உலகப் பொது வாழ்க்கையில் நமக்கு அளித்திருக்கும் எவ்வித பிரச்சினையும் பள்ளிப் பிள்ளைகளுக்குள்ள பிரச்சினைகளைப் போன்று அவ்வளவு சுலபமானதல்ல. ஒவ்வொரு மனுஷன், சமூக சமுதாயம், நாடு, நகரம் இவைகளுக்குப்பிரச்சினைகள் வேறு வேறுகவே இருந்து வருகிறது. இவைகளை அவரவர்கள் தத்தம் சொந்த தனிப் போக்கில் சுய முயற்சியைக் கொண்டு தீர்த்து அதனால் நன்மையும் புகழும் அடைய வேண்டுமே ஒழிய மற்றொருவரைப் பார்த்து கள்ளக் காப்பி அடித்தோ, குருட்டுத் தனமாகபின் பற்றியோ வெற்றி பெறலாமென்று ஏண்ணுவது விஷய ஞானசூனிய மென்றே கூறவேண்டும். அதனால் கருதிய பலன் கைகூடாதென்பது அநுபோகம். அதைப் போலவே நமது இந்திய நாட்டிலும் தீர்க்க வேண்டிய பல பிரச்சினைகளும் நம் முன்னால் நிற்கின்றன. இவைகள் எவ்வளவு சிக்கலாகஇருப்பினும் உண்மை வழி கண்டு அதைத் தீர்க்காத வரையில் நமது துன்பம் தொலையாது. இன்ப வாழ்வும் வந்தெய்தாது.

ஆனால் நாம் என்ன செய்தோம். பிற நாட்டார் கண்ட வழிகளை குருட்டுத் தனமாக பின்பற்றி வருகிறோம் அவ்வழிகள் நம் நாட்டின் நிலைமைக்கு பொருத்தமாக இருக்கின்றதா என்பதைக்கூட யோசித்தோமல்ல. உலக வாழ்க்கையில் பிறரைக்காப்பி அடிப்பதே பயனற்ற விஷயம். ஒருக்கால் அப்படிச்செய்வதானாலும் திறமை வேண்டும்; நுண்ணிய அறிவு வேண்டும். அவைகளெல்லாம் நம் மக்களிடத்தில் இன்னும் எற்பட வில்லை. எனினும் நாமெல்லாம் அறிவே இல்லாத மிருகங்கள் என்று சொல்ல வரவில்லை. ஆனால் நமது குருட்டபிமானம் குறுக்கிட்டு, இயற்கையாக உள்ள அறிவையும் ஒழுங்கான முறையில் உபயோகிக்க முடியாமல் செய்து விடுகிற தென்பதேயாகும். அன்னிய நாட்டாரின் சரித்திரங்களை தெரிந்து கொள்ள நமக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அதைக் கற்றறிந்தோம், பிழைபட அர்த்தம் கொண்டோம். இன்பம் அடைய வேண்டுமென்ற அவா மேலிடுகிறது. விடுதலை, விடுதலை யென்று ஆர்ப்பாட்டம் செய்கிறோம். கடைசியில் அச்சோதனையில் நமக்குக் கிடைத்தசன்மானம் என்ன? முழு பூச்சியந்தான். அதற்குக் காரணம் என்ன வென்று விசாரிக்க வேண்டும். ஒரு வண்டிக்கு முன்பாரம் கூடாது, பின் பாரமும் கூடாது. பாரம் நிரந்தரமாக இல்லா விட்டால் எப்பொழுதும் ஆபத்துதான். வண்டியை இழுக்கும் குதிரைக்கும் கஷ்டம். வண்டிக்காரனின் மனதிலும் நிம்மதி ஏற்படாது. வேகமும் குறையும், பிரயாணமும் தாமதப்படும். மற்றும் வாயுப் பிரதேசத்தில் எற்படும் தார தம்மியங்களால் புயல் ஏற்படுகிறது. ஒரு விடத்தில் காற்று குறைவாகவும் மற்றொரு விடத்தில் அதிகமாகவும் இருக்குமானால் குறைவான விடத்தை நிரப்புவதற்கு அதிகமான காற்று அடித்துப் புடைத்துக் கொண்டு அவ்விடம் செல்லுவதால் ஏற்படும் குழப்பமே புயல். இதனால் ஏற்படும் அமைதியின்மையும் சொல்லவும் வேண்டுமோ?

நிரந்தரமான சமத்துவம் ஏற்படாத வரையில் அமைதியே ஏற்படாது. இந்த நியதி பூத பௌதிகங்களுக்கு மாத்திரமல்ல. சமத்துவம் ஏற்படாத ஜன சமூகத்தினிடை அமைதி ஏற்படுவது கஷ்டமே. சமுத்துவமாக காற்று எங்கும் நிரம்பிய பிறகே புயல் நிற்கும் அதற்கு நடுவில் விழுந்து விழுந்துஎத்தனை தரம்தான் கும்பிட்டாலும் பிரயோஜனப் படாது. ஆகவே நாம் விடுதலைவிடுதலை என்று ஆர்ப்பாட்டம் செய்வதற்கு முன் உண்மையாக எவைகளிடமிருந்து விடுதலை அடைய வேண்டுமென்று நிச்சயித்துக் கொள்ள வேண்டியது அவசியம். நமக்கிடையே உள்ள ஒற்றுமைக்குறைவிற்கும், சமத்துவமின்மைக்கும் காரணமென்ன வென்று ஆலோசித்துக் கண்டு அந்த வழியில் உழைக்க வேண்டும். அதை விடுத்து நமது கிளர்ச்சியானது இடி முழக்கத்திற்கு சமானமானதா யிருப்பினும் சரி; அல்லது சட்ட வரம்பிற்குட்பட்டதோ, படாததோ, இம்சையோ, அஹிம்சையோ எதுவாகத்தான் இருப்பினும் சரி என்ன பிரயோஜனம்?

மனிதன் தன்னந் தனியாக இருந்து எவருடைய கூட்டுறவோ, எவருக்கும் பொறுப்பாளியாக இல்லாமலும், அல்லது எவருடைய தயவு தாக்ஷண்ணியத்தையும் எதிர்பாரதவனாகவோ இருப்பதானால் அதுவும் ஒரு வகையில் முழு விடுதலை என்று கூற துணிவதில்லை. இருந்தாலும் அந்நிலை எற்படினும் அது இயற்கை விரோத மென்பதோடு அது மாதிரி விடுதலை மனிதனுக்கு கொஞ்சம் கூட திருப்தி அளிக்கக் கூடிய தல்ல வென்று கொள்ள வேண்டும். தன்னம் தனியாய் இருப்பவன் நிலையில் விடுதலை யென்பது அர்த்தமற்ற ஒரு சொல்லாகவே முடியும். உதாரணமாக, ராபின்சன் குரூசோ என்பாரின் கதை யாவரும் அறிந்ததொன்றே. அவர் தன்னந் தனியாக ஒரு தீவில் எவருடைய தயவையும் எதிர் பார்க்காதவராய் எவருக்கும் பொறுப்புவகிக்கச் சந்தர்ப்பங் கிடைக்காதவராய் வாழ்ந்து வந்ததாக கூறப்படுகிறது. அப்படிஇருந்தும்அவருக்குவிடுதலை என்பதும் ஏற்படாமல் மனோவியாகூலமே குடி கொண்டு தளர்ந்த மனத்தோடு காலங்கடத்தியதாகதெரிகிறது. பிறகுபிரைடே (Friday) என்னும் மூரட்டு அநாகரீகன் தவறிப் போய் அவர் கண்ணிற்கு தென்பட்டானும். அத்தீவின் ஜனத்தொகை ஒருவராயிருந்தது இருவராக ஆயிற்று. அன்றிருந்தே ராபின்சன் குருசோவின் துர்ப்பாக்கிய வாழ்க்கையில் சுதந்திரம் பிறந்ததென்றும் இருவருக்கிடையே ஏற்பட்ட பரஸ்பர உணர்ச்சியாலும் கூட்டுறவாலும், அன்பாலும், ஆதரவாலும், மனோதிடங்கொண்டு நிம்மதியாக வாழ்ந்தததாகத் தெரிகிறது. அது போல உண்மை விடுதலையின் சுகம் ஜனசமூகத்தின் பரஸ்பர ஒற்றுமையாலும், கூட்டிறவாலும், சமத்துவ சகோதரத்துவத்தாலுமே ஏற்படுவதோடு சுதந்திரமும் அதிகரிக்குமென்றே கொள்ளவேண்டியிருக்கிறது. பரஸ்பர அன்பில்லாத நட்பு நட்பல்ல. பரஸ்பர காதலில்லாதவர்களை புருஷன் பெண்சாதியென்றே, வாழ்க்கைத்துணைவர்களென்றே அழகாகக் கூறுவதால் என்ன பிரயோஜனம். அடிமை வாழ்க்கை நடத்தும் அறிவிலிகள் என்று கூறுவதால் ஒன்றும் முழுகிவிடாது. மனிதத்தன்மைக்கும், உண்மை சுதந்திரத்திற்கும் அழகாக நிற்பது பரஸ்பர நல்லெண்ணத்தோடும், கூட்டுறவோடும், சமத்துவத்தோடும், வாழ்வதே ஒழிய வேறல்ல. சூதுசுயநலங்களால் இவைகள் பாதிக்காத நிலைமையை எற்படுத்திக கொள்ளவேண்டுவது அவசியமல்லவா? ஆதலால் நாம் உண்மை சுதந்திரத்திற்கு போராடுவதானால் அதற்குள்ள இடைஞ்சல்களை அப்புறப்படுத்தவேண்டும். சமத்துவத்தை நிலவச்செய்யவேண்டும். ஒற்றுமையை உருப்படுத்தவேண்டும். இவைகளைப்பற்றியே ஒரு சிறிதும் கவனம் செலுத்தாது சுதந்திரக்கிளர்ச்சி செய்கிறோமென்பதின் பொருள்தான் என்ன? மேல் நாட்டார் சுதந்திரத்திற்கு ஒரு காலத்தில் கிளர்ச்சி செய்தனர். அவைகளெல்லாம் ஒருபெறும் புரட்சியை உண்டுபண்ணக் கூடிய அளவிற்கு ஒற்றுமையையும், உண்மையையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. தங்களுக்கிடையேயாதொருதாரதம்மியங்களும் இல்லாதபடிசெய்துகொண்டனர். ஆளுவோர், ஆளப்படுவோர் என்ற இரண்டே வித்தியாசங்களிருந்தன. ஆளப்படுவோர் தங்கள் முழு ஒற்றுமை பலத்தோடும் ஆளுவோரை எதிர்த்தனர். தங்கள் சம சுதந்திரத்திற்கும்,பாத்தியதைகளுக்கும் போராடினர். புரட்சி செய்தனர். அதில் வெற்றிபெற்றனர். இப்பொழுதும் கூட மேல் நாட்டில் முதலாளி தொழிலாளிகளிடையே வித்தியாசம் அதிகரித்து வருகிறதினால் உரிமைகளிலும் வாழ்க்கை நிலைமைகளிலும் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டிருப்பதினால் என்றைக்கு புரட்சி ஏற்பட்டுவிடுமோ என்று யாவரும் எதிர்பார்த்தவண்ணமாக இருக்கின்றனர். முதலாளிகளும் இந்த அறிகுறிகளை கவனிக்காமலில்லை. அதனால் ஏற்படக் கூடிய பேராபத்துகளை நன்கு உணர்ந்திருக்கின்றனர். அங்ஙனம் ஏற்படாதபடி முன்னெச்சரிக்கையோடு ஒரு சில அளவில் தொழிலாளர்களுடைய முன்னேற்றத்திற்கான ஏற்பாடு செய்துவருகின்றனர். நல்ல ஊதியமும், ஒழுங்கான குடிஇருப்பு வகதியும், அதிகமான படிப்பும், எல்லாவிதமான சௌகரியங்களையும் செய்துதான் வருகின்றனர். இருந்தும் புரட்சியானது புகைந்துகொண்டேதான் இருக்கிறது.அவிந்தபாடில்லை என்று வெடிக்குமோ என்று யாவரும் அஞ்சுகின்றனர். இதற்குக்காரணம் என்ன? கண்துடைப்பு வேலையால் காரியம் பலிக்காது. ஒட்டுப்பிளாஸ்திரிவேலையால் உருப்படியான உண்மையான திருப்தியும், அமைதியும் ஏற்பட்டுவிடாது என்பதேயாகும். மற்றும் ஆங்கிலேயர்களே அமெரிக்காவில் குடிஏறினர். குடியேற்றநாடாக ஆளப்பட்டுவந்தது எனினும் சில காலத்திற்குள் தாய் நாட்டின் ஆளுகைக்கே அமெரிக்கர்கள் சம்மதிக்கவில்லை. ஒற்றுமையுடன் எதிர்த்தனர். ஆங்கிலேயர் எவ்வளவோ பிடிவாதம் செய்தும் புரட்சி ஏற்பட்டது. இருநாட்டினர்க்கிடையே எவ்வளவோ இரத்தபாத்தியதை இருந்தும் கூட்டுறவு முறிந்தது. அமெரிக்கரின் ஒற்றுமையான கோரிக்கைக்கு ஆங்கில நாடு தலை சாய்க்கவேண்டிநேர்ந்தது. என்றைக்கும் தனிவையாகவே இருக்கவேண்டிய விதத்தில் இருநாடும் பிரிந்தது. இதுபோலவே இரத்த பாத்தியம்கொண்ட இட்டாலியரும் ஆஸ்டிரியரும் இருபிளவாயினர். பிரஞ்சு புரட்சியின் காரணமும் யாவருக்கும் தெரிந்தவிஷயம். சமீபத்தில் ரஷியாவில் நடந்த தலைகீழான புரட்

தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க

ஏஜண்டுகள் தேவை

நமது பத்திரிகைக்குக் கீழ்கண்ட நகரங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்கள் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

சேலம்.
திருப்பூர்.
பொள்ளாச்சி.
உடுமலைப்பேட்டை.
தஞ்சாவூர்.
கள்ளிக்கோட்டை.
திருவனந்தபுரம்.
ஜோலார்ப்பேட்டை.
கண்ணிலம்.
பரமக்குடி.
கரூர்.
திருமங்கலம்.

பிரிண்டர் அண்டு பப்ளிஷர்
"குடி அரசு" சார்பாக.

குடி அரசு.

ஈரோடு 1932 பிப்ரவரிமீ 21-உ

சட்டசபையில் வைதீகர்.

மதம், கடவுள், வேதம் சாஸ்திரம் முதலிய கற்பனைகளில் குருட்டு நம்பிக்கையுடைய, பகுத்தறிவற்ற வைதீகர்களைக்காட்டிலும், தாம் பார்க்காதவைகளையும், அறியாதவைகளையும், நம்பாத பகுத்தறிவுடைய நாஸ்திகர்களே உலகத்தில் நன்மையை, மக்களுடைய நலத்தைக்கவனிப்பவர்கள் என்பது ஒரு உண்மையான அபிப்பிராயமாகும் என்றாம் தீர்மானமாக நினைக்கிறோம். வைதீகர்கள் எவ்வளவுதான் யோக்கியப்பொறுப்புடையவர்களாயிருந்தாலும், இரக்கமனமுடையவர்களாயிருந்தாலும், காலநிலையையும் மக்களுடைய மனோபாவத்தையும், ப்றர் நலத்தையும் அறிந்து அதற்குத் தகுந்தவகையில் நடந்துகொள்ளுவதற்குரிய அறிவு அவர்களிடம் உண்டாவதில்லை. ஏனெனில், கொடுமைப்படுகிற மக்கள் கொஞ்சம் சுகமடையக்கூடிய சீர்திருத்த சம்பந்தமான விஷயங்கள் வருகிற பொழுதெல்லாம் அவர்கள், வேதங்களில் என்ன சொல்லப்படுகின்றது, புராணம், ஸ்மிருதி முதலிய சாஸ்திரங்களில் என்ன சொல்லப்படுகின்றது என்று பார்த்து அதன்படியே நடந்துகொள்ளவேண்டும் என்று நினைப்பார்களேயொழிய தமது சொந்த புத்தியினால் ஆலோசித்துப்பார்க்க முன்வருவதேயில்லை. அவர்கள் சொந்த அறிவும் உபயோகப்படுவதேயில்லை. ஆனால் மதம், கடவுள், வேதம், சாஸ்திரம் முதலிய கற்பனைகளைக் கற்பனைகளாகவே அறிந்திருக்கின்ற 'நாஸ்திகர்' என்பவர்களோ எந்த விஷயங்களிலும் தமது சொந்த புத்தியை செலுத்தி யோசனை செய்யக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். இவ்வாறு யோசனை செய்வதனால் பிறருடைய சுகதுக்கங்களையும், இலாப நஷ்டங்களையும் அறிந்து அவர்கள்பால் இரக்கங்கொண்டு உதவி செய்யக்கூடியவர்களாயிருப்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மேலே நாம் கூறியவைகளைப் பொய்யென்றோ பொருத்தமற்றதென்றோ யாரும் கூறமுடியாது. இதுவரையிலும் உலகில் நடந்திருக்கின்ற எந்தச் சரித்திரங்களைப் பார்த்தாலும் இவ்வுண்மை விளங்காமல் போகாது. புராணங்களிலாகட்டும், இதிகாசங்களிலாகட்டும், மற்றும் தேசசரித்திரங்களிலாகட்டும் மதம், வேதம், கடவுள், சாஸ்திரம் இவைகளை நம்பாத நாஸ்திகர்கள் ஜனசமூகத்திற்குத் தீங்கு செய்ததாகவோ அல்லது ஜனசமூகத்தை அடிமைப்படுத்தியதாகவோ, கொடுமைப்படுத்தியதாகவோ சொல்லப்படவில்லை. இதற்கு மாறாக மதம் என்னும் அபினியும், வேதம் என்னும் சாக்கடையையும், கடவுள் என்னும் பொய்மொழியையும், சாஸ்திரம் என்னும் குப்பையையும் கண்மூடித்தனமாக நம்பிய வைதீகர்களே ஜனசமூகத்தைக் கஷ்டத்திற்குள்ளாக்கி வந்திருக்கின்றார்கள் என்று அறியலாம். ஒரே வகையான மக்களை வேறு வேறு சாதிகளாகப்பிரித்து வைத்ததும், கொள்கைகாரணமாகவாவது மதம் காரணமாக ஒருவரையொருவர் வெறுப்பதும், பழிப்பதும், அடிப்பதும், குத்துவதும் கொல்லுவதும், கழுவேற்றுவதுமான கொடுமைகளைச்செய்யும்படி வைத்ததும் குருட்டு நம்பிக்கையுள்ள வைதீகர்களேயாவார்கள். ஆகையால் எந்தக்காலத்திலும் வைதீகர்களால் ஜனசமூகம் விடுதலையோ, சுதந்தரமோ, சுகமோ, அடையமுடியாது என்ற உண்மையான நிச்சயத்தோடுதான் நாம் வைதீகத்தை அடியோடு ஒழிக்கவேண்டுமெனக் கூறிவருகிறோம்.

ஜனசமூகத்தில் சரிபகுதியாகவிருக்கும் பெண்மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகக்கட்டுண்டு கிடந்து தமது அடிமைத்தளையை அறுத்தெறிந்து சுதந்தரத்தோடு வாழ உலகமெங்கும் கிளர்ச்சி செய்து வருகின்றனர் என்பதும், அவர்களுடைய கிளர்ச்சி நியாயமானதும், உண்மையானதும், அவசியமானதும் ஆகும் என்பதும் குடி அரசு வாசகர்களுக்குத் தெரியாத புதிய செய்தி அல்ல. பெண்மக்கள் பிறந்தது முதல் இறக்கும் வரையிலும் அடிமையாகவே இருந்து துன்பப் பட்டு வாழக்கூடிய நிலையை அகற்றி, அவர்களும் ஆண் மக்களைப் போலவே சுதந்தரத்துடன்வாழச் செய்ய வேண்டுமென்றும் நமது இயக்கம் தோன்றிய நாள் முதல் நாம் இடைவிடாது பிரசாரம் பண்ணிக் கொண்டு வருகிறோம். மதம், வேதம், கடவுள், சாஸ்திரம் இவைகளின் பேரால் ஆண்களுக்கு ஒரு நீதி, பெண்களுக்கு ஒரு நீதி ஏற்பட்டிருக்கும் கொடுந் தன்மையான-அக்கிரமமான-அநீதி ஒழியவேண்டும் என்று சொல்லி வருகிறோம்.

ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதற்காகச் செய்து கொள்ளும் ஒரு ஒப்பந்தமாகிய விவாகம் அதாவது மணம் என்ற ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டு கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள்! இவ்விஷயத்தில்ஆண்களுக்குக் கொடுத்துள்ள உரிமைகளையும் பெண்களுக்கு ஏற்படுத்யுள்ள அநீதிகளையும் பாருங்கள்! இந்து சமூகத்தில் ஆண்கள் எத்தனை மனைவிகளை வேண்டுமானாலும் கல்யாணம் பண்ணிக்கொள்ளலாம்;-உயிரோடிருக்கும் மனைவி பிடிக்காவிட்டால் அவளை நீக்கி விட்டு வேறு பெண்ணை விவாகம் பண்ணிக் கொள்ளலாம் மனைவி இறந்து விட்டாலும் வேறு மணம் புரிந்து கொள்ளலாம் என்ப தற்கு மதம், வேதம், சாஸ்திரம் ஆகிய இவைகள் இடந்தருகின்றன. ஆனால் பெண்கள் பல கணவர்களை மணம் புரிந்து கொள்ளவும், உயிரோடிருக்கும் கணவன் பிடிக்கா விட்டால் அவனை நீக்கி விட்டு வேறு ஒருவனை மணம் புரிந்து கொள்ளவும், கணவன் இறந்து விட்டால் வேறு மணம் செய்து கொள்ளவும், அந்த மதமும், வேதமும், சாஸ்திரங்களும் தடை செய்கின்றன.

இப்படிப்பட்ட வித்தியாசமும் கொடுமையும் இல்லாமல் பெண்களும் ஆண் மக்களைப் போலத் தங்கள் விருப்பப்படியே மணம் புரிந்து கொள்ளச் சுதந்தரமுடையவர்களாயிருக்க வேண்டுமென்று கூறுகிறவர்களையும், இதற்காக சட்டஞ் செய்ய வேண்டுமென்று சொல்பவர்களையும், சட்டமாக்குவதற்க கமிசாதாக்கள் கொண்டு வருபவர்களையும், அவை ஆதரிப்பவர்களையும் வைதிகர்கள் நாஸ்திகர்க ளென்றும், மதத்துரோகிகள் என்றும் தூற்றவாரம்பித்து விடுகின்றனர். "மண விஷயத்தில் ஆண்களுக்கு இருக்கும் உரிமை பெண்களுக்கும் இருந்தால் மணம் என்பதன் தெய்வீகத்தன்மை போய் விடும்; பெண்களின் கற்புத் தன்மை போய் விடும்; இந்திய மக்களின் கட்டுப்பாடான சமூகத் தன்மை அழிந்து விடும்." என்று வைதிகர்கள் கூச்சலிட்டு எதிர்க்கின்றனர். ஆனால் இவர்கள் ஆண் மக்கள் விஷயத்தில் மாத்திரம் இக்கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கச்சம்மதிப்பதில்லை; ஆண் மக்கள்மத்திரம் பல மனைவிகளை மணந்து கொள்ளுவதனாலும், ஒரு மனைவியை நீக்கி விட்டு வேறு மனைவியை விவாகம் புரிந்துகொள்ளுவதனாலும், மனைவி இறந்த பின் வேறு மணம் புரிந்து கொள்ளுவதனாலும், மணம் என்பதன் தெய்வீகத் தன்மை அழிய வில்லையா? கற்புத் தன்மை அழிய வில்லையா? இந்திய மக்களின் கட்டுப்பாடான சமூகத் தன்மைஅழியவில்லையா? என்று தான் கேட்கிறோம்.

பொதுவாகப் பெணமக்களுக்குச் சுதந்தரம் வழங்கும் விஷயத்தில் நமது நாட்டுவைதீகர்களுக்கு இருந்து வரும் மனப் பான்மையை நாம் பல தடவைகளில் விளக்கமாக எடுத்துக்காட்டி வந்திருக்கின்றோம். அன்றியும் சீர்திருத்தம் சம்பந்தமான கமிசாதாக்கள், பெண்கள் சுதந்தரம் சம்பந்தமான கமிசாதாக்கள் சட்டசபைகளில் கொண்டு வரப்படும் காலங்களில், வைதிகர்கள் தாங்களாகவே முன் வந்து தங்கள் மனப்பான்மையை வெளியிட்டு வந்திருக்கின்றார்கள். இவ்விஷயங்களை பால்ய விவாகத் தடை கமிசாதாவை இந்திய சட்டசபையில் திரு. சாரதா அவர்கள் நிறைவேற்றிய காலத்தில் அதை எதிர்த்தபண்டிதமாளவியா, திரு. எம். கே. ஆச்சாரியார் போன்றவர்களின் பேச்சுகளிலிருந்து உணரலாம். அன்றியும் இந்த ஆண்டிலும், சென்ற ஜனவரி மாதத்திலும், பிப்ரவரி மாதத்திலும் இந்திய சட்ட சபையில், "விதவைகளுக்குச் சொத்துரிமை வழங்க வேண்டும்" என்ற கமிசா

தாவை திரு. சாரதா அவர்கள் கொண்டு வந்த காலத்திலும் "இந்து மதத்தைச் சேர்ந்தவர்க ளுக்குவிவாகரத்துச் செய்துகொள் ளஉரிமை வேண்டும்"என்றமசோ தாவை திரு. அரிசிங்கவர் அவர் கள் கொண்டு வந்த காலத்திலும் இவைகளை எதிர்த்து திரு. ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியார் போன்ற வைதிகர்கள் வெளியிட்ட அபிப்பிராயங்களைக்கொண்டும் வைதிகர்களின் மனப்பான்மை களை நன்றாய் உணரலாம். சென்ற வாரங்களில் "விதவைகளுக்குச் சொத்துரிமை" வழங்கும் மசோ தாவைப் பற்றி எழுதியிருந்தோம் ஆதலால் இப்பொழுது "விவாக விடுதலை" மசோதாவைப் பற்றி மாத்திரம் கூறி முடிக்கின்றோம்.

சென்ற 13-2-32இல் இந்திய சட்ட சபையில் மீண்டும் விவாக விடுதலை மசோதா விவாதத்திற்கு வந்த போது, வைதிகர்கள் நடந்து கொண்ட மாதிரியைக் கவனித் தால் நமது நாட்டினரனைவரும் வெட்க மடைய வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. அன்று காலையில் மசோதாவைப் பற்றிய விவாதம் தொடங்கிய போது பண்டித சத்தியேந்திர நாத சென் என்பவர் மசோதாவை எதிர்த் தும், திரு. ஜோஷி, ஆர். எஸ். சர்மா போன்றவர்கள் மசோதா வை ஆதரித்தும், திரு. சீத்தா ராம ராஜு திரு. ஸி. எஸ். ரெங் கய்யர் போன்றவர்கள், மசோதா வின் கொள்கையை ஒப்புக்கொண் டும், ஆனால் அதைப் பிறகு நிறை வேற்றிக் கொள்ளலாம் என்றும் விளக் கெண்ணெயாகவும் பேசினார் கள். இவ்வாறு காலையில் விவா தம் நடந்து முடிந்தது. மீண்டும் இடை வேளை போஜனத்திற்குப் பின் சட்ட சபை கூடிய போது சபையில் 18 அங்கத்தினர்களே வீற்றிருந்தார்களாம். மற்ற அங் கத்தினர்கள், அதாவது இம்ம சோதாவை எதிர்க்கும் மனப் பான்மையுடைய வைதிக அங்கத் தினர்களும், ஆதரிக்கும் மனப் பான்மை யுடைய அங்கத்தினர் கள் சிலருங்கூடச் சட்ட சபைக் குள் வராமல் வெளியிலேயே நின் று விட்டார்களாம். சட்ட சபை யிலிருந்து கொண்டு தங்களுடைய உண்மையான அபிப்பிராயத்தை வெளியிடத் துணிவில்லாத இவ் வங்கத்தினர்களால் நமது சமூகத் திற்கோ, அல்லது தேசத்திற்கோ என்ன நன்மை செய்ய முடியும் என்று கேட்கின்றோம். கடைசி யில், சட்ட சபைத் தலைவர், சபை யில் "குவாரம்" உண்டாவதற்கு எவ்வளவோ முயன்றும் கடைசி யரையிலும் "குவாரம்" ஏற்படா ததால் சபை ஒத்தி வைக்கப் பட் டது.

இந்த நிகழ்ச்சியிலிருந்து "விவா க விடுதலை" விஷயத்தில் நமது வைதிகர்களின் மனப்பான்மை எவ்வாறு இருக்கிற தென்பதை அறிந்து கொள்ளலாம். இந்த வைதிகாகள் விவாக விடுதலை உரி மையில்லாமையால் உண்டாகும் தீமைகளையும், நன்மைகளையும், "விவாக விடுதலை" உரிமையிருந் தால் அதனால் உண்டாகும் நன் மை தீமைகளையும் தங்கள் சொந்த அறிவைக் கொண்டு நன்றாய் ஆலோசித்துப் பார்த்தால் "விவா க விடுதலை" மசோதாவை எதிர் க்க முன்வருவார்களா? என்று கேட்கின்றோம்.

ஒரு குடும்பத்தில் உள்ள கண வன் மனைவிகளுக்குள் ஒற்றுமை இல்லாவிட்டால், எந்தக்காலத்தி லும் ஒற்றுமை ஏற்பட முடியாத அதிருப்தி ஏறபட்டு விட்டால், அல்லது வியாதியுடையவர்களாயி ருந்தால், ஒருவருடைய நடத்தை மற்றவர்களுக்குப் பிடிக்காமலிருந் தால், தங்கள் கணவன் மனைவி களாக வாழ்வதில் சிறிதும் விருப் பம் இல்லாதவர்களாயிருந்தால் அவர்கள் தங்கள் மண ஒப்பந்தத் தை சட்டமூலமாக நீக்கிக்கொள் ளுவதில் என்ன குற்றமிருக்கின் றது? மன ஒற்றுமையில்லாத இருவர்கள் சேர்ந்து வாழ்க்கை நடத்துவதில் ஏதாவது சௌகரிய மோ, சுகமோ அவர்களுக்கு இரு க்கமுடியுமா? ஆனால் ஆண்மகன் மாத்திரம் மணம் செய்துகொண் டமனைவி தனது மனத்திற்குப் பிடிக்காவிட்டால் யாதொருதடை யுமின்றி உடனே அவளை நீக்கி விட்டு வேறு ஒருபெண்ணை மண ஞ்செய்துகொள்ளுகின்றான். இது சட்டப்படி செல்லத்தக்கதாகவும், குற்றமற்றதாகவும் இருக்கிறது. ஆனால் கணவனால் நீக்கப்பட்ட பெண்கள், கணவன் உயிரோடிருக் கும் வரையிலும், தனக்கு விருப்ப முள்ள வேறொரு புருஷனை மண ந்து கொள்ளச்சட்டப்படி உரிமை யில்லை. இந்தக்காரணத்தால் கண வனால் நீக்கப்பட்ட—வெறுக்கப் பட்ட—அநேக பெண்கள் திருட் டுத்தனமாகத் துன்மார்க்க வழி யில் பிரவேசிக்கவும் சில சமயங் களில் மானம் பொருக்கமாட்டா மல் தற்கொலை செய்துகொள்ள வும், தனித்திருந்து விபசாரம் புரி ந்து மானமற்ற வாழ்க்கை நடத்த வும் நேருகின்றது. பெரும்பா லும் தற்கொலை செய்துகொள் ளும் பெண்களெல்லாம் மாமன் மாமி, புருஷன் முதலியவர்களின் கொடுமை சகிக்க முடியாமலும், வேறு ஒருபுருஷனை மணந்து வாழவழியில்லாமலும்; தனித்தி ருந்து கௌரவமாக ஜீவிப்பதற்கு முடியாமலும், மனமுடைந்து தற் கொலை செய்து கொள்ளுகிறார் களேயொழிய வேறுகாரணமில்லை யென்று சொல்லலாம். இது போலவே மாமன், மாமி, பெண் சாதி முதலியவர்களின் கொடுமை க்கு அஞ்சித் தற்கொலை செய்து கொண்ட ஆண்கள் எவரேனும் உண்டென்று கூறமுடியுமா?

ஆகையால் பெண்களும் ஆண் களைப்போலவே உரிமைபெற்ற வர்களாயிருந்தால் இத்தகைய கொடுமைகள் நடைபெற முடி யுமா? என்றுதான் கேட்கின்றோம். கணவன் எவ்வளவு அயோக்கிய னாய் இருந்தாலும், வியாதியஸ்த னாய் இருந்தாலும், ஆண்மையற்ற வனாயிருந்தாலும், கொடுமைப்படு த்துகின்றவனாயிருந்தாலும் அவனையே ஆயுள்வரையிலும் தெ ய்வமாகக்கொண்டு அவனுக்கு அடிமையாக இருந்து வாழ்வது தான் 'மணத்தின் தத்துவம்' 'விவாகத்தின் தெய்வீகத்தன்மை' 'ரிஷிகளின் புனிதமான சட்டம்' பெண்கள் கடமையென்று விதிப் பது ஒரு மதமாகுமா? வேதமா குமா? சாஸ்திரமாகுமா? நீதியா குமா? அறிவுடைமையாகுமா? என்று நன்றாய் யோசனை செய்து பாருங்கள்!

ஆகையால் இத்தகைய கஷ் டங்கள் இல்லாமல் ஆண்பெண் இருவரும் சமஉரிமையுடைய வே ண்டுமென்ற நல்லெண்ணத்துட னேயே திரு. அரிசிங்கவர் அவர் கள் 'விவாக விடுதலை மசோதா' வைக்கொண்டு வந்தார். இத்த கைய ஒரு நல்ல சீர்திருத்த மசோ தாவை வைதிகர்கள் ஆதரிக்க மனமில்லாமலும் அவ்விவாதத் தில் அதிகமாகக்கலந்துகொள்ள இஷ்டமில்லாமலும் சட்டசபை க்கு வெளியிலேயே நின்றுவிட் டார்கள். இவ்வாறு வெளியி லேயே நின்றவர்களுடன் அரசா ங்க அங்கத்தினர் சிலரும் இருந்த னராம். இதனால் அரசாங்கமும் வைதிகர்களுடன் சேர்ந்துகொண் டுஇந்தமசோதாவை எதிர்த்ததாகத் தானே அர்த்தம்? இவ்வா று எத்தனை நாளைக்கு அரசாங்கத்தார் வைதிகர்கள் வார்த்தைக்கு அஞ்சிச் சீர்திருத் தத்திற்கு விரோதியாய் இருப் பார்களென்று கேட்கின்றோம். உண்மையிலேயே நாட்டின் நன் மையில் கருத்துடைய அரசாங்க மாயிருந்தால் இது போன்ற சீர் திருத்த மசோதாக்களை ஆதரிக்க வேண்டியது கடமையாகும். அல் லது மத நடு நிலைமை வகிக்கக் கூடிய அரசாங்கமாயிருந்தால் மசோதாவை எதிர்க்காமல் நடு நிலைமை வகிக்கவேண்டும். இரண் டு மில்லாமல் மசோதாவுக்கு எதி ராகவுள்ள வைதிகர்களுடன்சேர்ந் து கொண்டு வெளியேறுவது ஒழுக்கான காரியமா என்று நான் கேட்கிறோம்.

வைதிகர்களும், அரசாங்க உறு ப்பினர் சிலரும் "விவாக விடுதலை மசோதா"வைக் கெடுக்கும்பொரு ட்டு சபைக்குள் வராமலிருந்த காரணத்தால், உத்தியோகப்பற் றற்றவர்களின் மசோதாவுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒரு நாளில் அரை நாள்வீண்போயிற்று. இனி யும் உத்தியோகப் பற்றற்றவர்க ளின் தீர்மானங்கள் விவாதத்தி ற்கு வரும் நாளில் இந்த மசோ தாவும் வரத்தான் போகிறது. அப்பொழுதும் இம்மாதிரி சட்ட சபைக்குள்வராமல் வெளியிலே யே நின்று கொண்டு நாளை வீணா க்கப்போகிறார்களா? அல்லது மசோதாவை எதிர்த்துத் தோற் கச் செய்யப்போகிறார்களா? அல் லது வேறு என்ன செய்கிறார்க ளென்று பார்ப்போம்

இவ்வாறு வைதிகர்களும், அர சாங்கமும் சீர்திருத்தங்களை எதிர் ப்பதனால் அவ்வுணர்ச்சியை அட க்கிவிட முடியாது என்பது நிச்ச யம் என்று மாத்திரம் எச்சரிக் கை செய்கிறோம். வர வர மக்க ளுடைய மனத்தில் சமூகச்சீர்திரு த்த உணர்ச்சி மிகுந்து வருவதன் பலனாகச் சீர்திருத்தங்களுக்கு விரோதமாக இருக்கின்ற மதம், வேதம், சாஸ்திரம், வைதிகம் ஆதி யவைகளின் ஆதிக்கம் வீழ்ச்சிய டையும் காலம் தூரத்தில் இல்லை யென்றே நாம் கூறிமுடிக்கிறோம்.

தீண்டாதார் துன்பம்.

வெள்ளைக் காரர்களைப் பார்த்து "நீங்கள் எங்களைக் கொடுமைப் படுத்துகிறீர்கள்! ஆகையால் உங் களுடைய அரசாட்சி எங்களுக் குப் பிடிக்க வில்லை; ராஜ்யத்தை எங்களிடம் விட்டு விட்டு நீங்கள் உங்கள தேசத்திற்குப் போய் விடுங்கள்; நாங்கள் ஒற்றுமையா யிருந்து எங்கள் தேசத்தை ஆண்டு கொள்ளுவோம்" என்று சுயராஜ்ய வாதிகள் கூச்சலிடுகின் றனர்; இதற்காகச் சட்டமறுப்பு செய்கின்றனர்; சிறைக்குச் செல் கின்றனர்; இன்னும் சத்தியாக்கிர கத்தின் பெயரால் என்னென்ன

காரியங்களையெல்லாம் செய்து கொண்டிருக்கின்றனர். ஆனால் வட நாட்டில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உள்ள கலகமும், வெறுப்பும் இன்னும் ஒய்ந்தபாடில்லை. இவர்கள் ஒற்றுமையாய் வாழ்வதற்குரிய காரியங்களைச் செய்யவும் இல்லை.

இது ஒரு புறமிருக்க மிகவும் பரிதாபகரமான வாழ்வில் இருந்து துன்பப்படும் ஆதிதிராவிடர் போன்ற தீண்டாத மக்களின்கதி இன்னும் மோசமானதாகவே இருந்து கொண்டிருக்கின்றது. தீண்டாதவர்கள் கோயில் பிரவேசத்தின் பொருட்டு நாசிக்கிலும், குருவாயூரிலும் சத்தியாக்கிரகம் புரிந்து கொண்டு துன்பப் படுதலும், அவர்களை வைதிக இந்துக்கள் எதிர்த்துத் துன்பப்படுத்துதலும் ஒரு புறம் இருக்க, அவர்கள் தங்கள் மட்டிலாவது சுத்தமாகவும், நாகரீகமாகவும், சௌகரியமாகவும் வாழக்கூட மனஞ் சகிக்காத இந்துக்கள் அவர்களுக்குப் பண்ணும் கொடுமை மிகவும் அநீதமாக இருக்கின்றது என்ற விஷயம் நமது நாட்டு மக்களுக்குத் தெரியாததல்ல. சென்ற ஆண்டில் ராமநாதபுரம் ஜில்லாவில் ஜாதி இந்துக்கள் தீண்டாதவர்களுக்குச் செய்த கொடுமையும், திருச்சி ஜில்லாவில் ஜாதி இந்துக்கள் தீண்டாதவர்களுக்குச் செய்த கொடுமையும் இன்னும் மறக்கப்பட வில்லை. இது போலவே ஒவ்வொருகிராமத்திலும்தீண்டாதவர்களுக்குப் பல கஷ்டங்களிருந்து வருகின்றன. ஆனால் அத்தீண்டாத மக்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு உயர் ஜாதி இந்துக்களின் கையையே எதிர்பார்த்திருப்பதாலும்,பெரும் பாலானவர்கள் கல்வியறிவும், உலகநாகரீக உணர்ச்சியும் இல்லாமையால், "தங்களை ஆண்டவன் என்பவன் தீண்டாதவராகவே கஷ்டப்படும்படி படைத்தான்; எல்லாம் தமது தலைவிதியின்படி படி நடக்கும்" என்றநம்பிக்கையுடையவர்களா யிருப்பதாலும் தங்கள் துன்பத்தைச் சகித்துக் கொண்டு வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.

இப்படியில்லாமல் தீண்டாத மக்கள் கொஞ்சம் சுயமரியாதை உணர்ச்சி பெற்றுத் தங்களைச் சீர்திருத்தம் செய்து கொள்ள முந்துவார்களானால், அப்பொழுதே அவர்களை முன்னேற ஒட்டாமல் நசுக்கிப் பழைய சாக்கடையிலேயே அமிழ்த்தி வைக்க ஜாதி இந்துக்கள் தயாராகி விடுகிறார்கள். இதற்கு உதாரணமாக இப்பொழுது சேலம் ஜில்லா ராசிபுரம் தாலூக்கா, தாத்தையங்கார் பட்டி கிராமத்திலிருக்கும் தீண்டத்தகாத மக்களை அவர்கள் முன்னேற்ற மடையாத படி அடக்கி வைக்க உயர்ஜாதி மக்கள் அவர்களுக்கு விதித்திருக்கும்நிபந்தனைகளைப் பார்த்தால் விளங்கும். இதைப்பற்றி அவர்கள் சேலம்ஜில்லா கலெக்டருக்கும், போலீஸ் சூப்பரின்டெண்டுக்கும் செய்து கொண்டிருக்கும் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுக்காட்டியிருக்கின்றனர்.

'எங்களூர்க்குடியானவர்கள், நாங்கள் நாகரிகமாய் இருப்பதற்காகப் பொறுமைப்பட்டு எங்களைக்கண்ட இடங்களிலெல்லாம் அடித்தும், எங்கள் தெருப்பெண்களை வாய்க்கு வந்தபடி நிட்டியும் கஷ்டப்படுத்துகிறார்கள். அதோடு அல்லாமல் கீழ்க்கண்ட நிபந்தனைகள் ஏற்படுத்தி அதன்படி நடக்காதுபோனால் எங்கள் கால்களை ஒடித்துவிடுவோம் என்று சொல்லுகிறார்கள்.

நிபந்தனைகள்:—

1. பறையர்கள் கிராப்பு வைக்கக்கூடாது.

2. பள்ளிக்கூடம் தெருவில் இருக்கவும் கூடாது, படிக்கவும் கூடாது.

3. வெள்ளை வேஷ்டி கட்டக் கூடாது; அழுக்கு வேஷ்டியிலிருந்தாலும் முழங்காலுக்குமேல் கட்டவேண்டும்.

4. பெண்கள் மார் ஆடை போடக்கூடாது; மீறி மார் ஆடை போட்டால் மாரை அறுத்து விடுவது.

5. நாகரிகமான நகைகள் போடக்கூடாது.

6. குடைகள் பிடிக்கவும் கூடாது; குடைபிருந்தால் நெருப்பு வைத்துக்கொளுத்திவிட வேண்டும்.

7. பெட்டிகள் கையில் கொண்டுவரக்கூடாது; புஸ்தகமும் கையில் பிடிக்கக்கூடாது.

(தமிழ்நாடு)

என்பது தீண்டாதவர்களின் விண்ணப்பம். இந்தக்கொடுமைகளை யார் பொருத்துக்கொண்டிருக்க முடியும்? என்று கேட்கின்றோம். இந்த நிலைதான் கிராமாந்தரங்களிலெல்லாம் இருந்து வருகின்றது. இதை மாற்றுவதற்கு இதுவரையிலும் என்ன முயற்சியை, எந்தத்தேசிய வாதிகள் செய்தார்களென்று கேட்கிறோம். அந்நியர் கையில் அதிகாரமும், தாங்கள் சுதந்தரமின்றி அந்நிய நாட்டினர்க்கு அடிமையாக இருக்கும் இக்காலத்திலேயே இந்த உயர் ஜாதி இந்துக்கள் தீண்டாதவர்களுக்கு இக்கொடுமையைச் செய்வார்களாயின் இவர்கள் கையில் ஆட்சியும் அதிகாரமும் கிடைத்து விட்டால் அவர்களைச்சித்திரவதை செய்யமாட்டார்களா? என்று யோசித்துப்பாருங்கள்.

இம்மாதிரி வகுத்தவர்கள் இழைத்தவர்களுக்குக் கொடுமை செய்வதைப் பொருட்படுத்தாத ஒரு தேசீயம் அல்லது ராஜீயம் எதற்குப்பயன்படும்? இவ்வாறு தீண்டாதவர்களைக் கொடுமைப்படுத்தும் எண்ணத்தை உயர் ஜாதி இந்துக்களின் மனத்தில் பதிய வைத்திருப்பதற்குக்காரணம், பாழும் மதமும் வைதிகமும் பழக்க வழக்கங்களுமே அன்றோ? ஆகையால் இந்தப்பழம் மதமும் வைதிகமும் பழக்க வழக்க மூட நம்பிக்கையும் தொலைந்தாலொழிய உயர் ஜாதி இந்துக்களின் மனத்தில் மாறுதல் ஏற்படுமா? ஒருக்காலும் முடியாது. ஆகவே இனியும் தீண்டாதவர்கள் கடவுளையோ மதத்தையோ நம்பிக்கொண்டிருந்தால் ஒரு சிறிதும் முன்னேறமடையப்போவதில்லை. தம்மையே நம்பி இடைவிடாது கிளர்ச்சி செய்வதன் மூலமும் வைதீகர்களான அரசியல் கிளர்ச்சிக்காரர்கள் எல்லாம் சுயராஜ்யம் வந்தபிறகுபார்த்துக்கொள்ளலாம்' என்று கூறும் வார்த்தைக்கு ஏமாறாமல் முயற்சி செய்வதன் மூலமும்தான் தாங்கள் விடுதலை பெற்று மனிதர்களாக வாழமுடியுமென்று எச்சரிக்கின்றோம்.

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

சியும் நாம் அறியாததல்ல. இவைகளெல்லாம் கவனித்தால் இரத்தபாத்தியதை உடையவர்களுக்கிடையே ஏற்பட்ட விஷயங்களாகும். ஆனால் நமது இந்தியநாடோ அன்னியர்களால் ஆளப்படுகிறது. நம்முடைய முன்னோர்களின் அறிவு கெட்ட தனத்தாலும், அயோக்கியத்தனத்தாலும், சூழ்ச்சிசுயநலத்தாலும், அன்னியர்கையில்பட்டு அடிமைவாழ்வு வாழநேர்ந்தது. அந்த ஆட்சிமுறையோ குற்றம் நிறைந்ததாய் இருக்கிறது. அக்குற்றமான ஆட்சியிலும் நமக்கிடையே குடிகொண்டிருக்கும் சூழ்ச்சிக்கும், சுயநலத்திற்கும், மூட்டாள் தனத்திற்கும் தகுந்த வசதிகள் இன்னும் இருந்து அந்த ஆட்சியை பலப்படுத்தி வருகிறதென்றால் விடுதலைக்கு வீண் கூச்சல்போடுவது அர்த்தமென்ன? ஒருமுகமாக முழு ஒற்றுமையோடு எதிர்க்கவேண்டிய சந்தர்ப்பம் வேண்டாமா? அந்த சந்தர்ப்பம் ஏற்படும்படி செய்துகொள்ள வேண்டாமா அதை விடுத்து ஒற்றுமை, ஒற்றுமைஎன்றுவாயளவில் கூறுவதால் யாது பிரயோஜனம். ஒற்றுமைகுறைவுக்குள்ள காரணத்தை முதலில் நாம்நீக்கவேண்டும். ஒற்றுமைக்கானதடைகளையெல்லாம் முதலில் நாம்நீக்குவோம்.

நமது பிரயத்தனத்திற்கு ஆள்வோரால் இடைஞ்சல் ஏற்படுவது சகஜம். ஒற்றுமை ஏற்படாதபடி ஆள்வோர் சூழ்ச்சிசெய்யலாம். ஆனால்நமது தற்போதைய நிலைமை தற்போதைய அனுபவம் அதற்கு முற்றிலும் மாறுக இருக்கிறது. சுயநலக்காரர்கள் நாம் அன்னியர்களுக்கு அடிமைப்படநேர்ந்ததற்கான ஆபாசக்காரணங்களையே தங்கள் சொந்த நலத்திற்காக என்றென்றும் சாஸ்வதப்படுத்திக்கொண்டு நம் பிரயத்தினத்திற்கு தடைக்கல்லாய் நிற்கின்றனரென்றால் இதைவிட துர்ப்பாக்கியம் வேருண்டோ எனினும் நமக்கு அறிவுண்டு, ஆற்றலுண்டு, பொருமையும் உண்டு ஜன சமூகத்தினிடையே உள்ள தன்னலத்திக்கமும் தனி உரிமைகளும் பரம்பரை பாத்தியதைகளும் மூடப் பழக்க வழக்கங்களும் அடியோடு ஒழிய வேண்டுமென்று உணர்ந்து விட்டோம். அதை மற்றவரும் உணரச் செய்ய வேண்டுவதே நமக்கு உரிய கடமை. இவைகள் ஏற்படுத்துவதற்கு முதல் கேவலம் மன மாற்றமாவது உண்டு பண்ண வேண்டும். பிறகு ஒற்றுமைக்கு அடிகோலியவர்களாய் ஆய் விடுவோம். ஒற்றுமையும் நம்முடையதாகி விடும். அவ்வொற்றுமையின் மீது நமது சமத்துவ சகோதரத்துவ விடுதலைக் கட்டிடத்தை எழுப்புவோம். இதைத் தான் சுயமரியாதைக் காரர்களாகிய நாம் வற்புறுத்துகிறோம். இதில் என்ன குற்றமிருக்கிறது. இதற்காக எம்மேல் "தேசீயம்" சீறி விழ வேண்டுமோ.

(தொடரும்.)

மோட்சலோகத்துக்கு நேர்வழி.

யாககுண்டத்தில் பாய்ந்து சுவர்க்கம்புக முயற்சி செய்த ஒருபிராமணனைப்பற்றிய துக்ககரமான செய்தியொன்று இப்பொழுது வெளிவந்திருக்கிறது.

அவர் ஒருவைஷ்ணவர்; வயது28; தஞ்சைஜில்லா பாபநாசத்துக் கடுத்த சருக்கைகிராமத்தில்பிறந்தவர். அவரது தகப்பனார் காலஞ்சென்ற ரங்கமனிஅய்யங்கார்; அவர்பிரிட்டிஷ்சர்வீஸில் ஒருமுன்சீப்பாக இருந்தாராம்.

யாககுண்டப் பாய்ச்சல்மணப்பாறைக்கு 16 மைலுக்கப்பாலுள் ஒருகிராமத்தில் நிகழ்ந்ததாகத்தெரிகிறது. அந்தக் கிராமத்திலிருந்ததன் 12வயது மனைவியைப்பார்க்கச்சென்றிருந்த போதுதான் இந்தப் பிராமணனுக்கு மோட்சக் கிறுக்குப்பிடித்ததாம் அவர் அந்தக்கிராமத்தில்இருந்தபோது கிராமவாசிகளுக்கு 'கனகசபைத்திரு நடனம்' கற்பித்தாராம் இறப்பதற்குத்தலை நாள்அவர் "வனயாகம்" என்னும் பெயரால் ஒருயா

சுயமரியாதைக்கண்டால்! பயப்படவேண்டாம்!!

[மு. அ. கோவிந்தசாமி]

சிலர் காங்கிரசின் கொள்கையை எதிர்த்து விவாதிக்கின்றனர். சிலர் சுயமரியாதையின் கொள்கையும், அதன் கருத்தின்னதென்று தெரிந்தும் விவாதிக்கின்றனர். இது பிரண்டும் தெரியாத "மாகாணி"கள், சுயமரியாதை என்னும் பேரைக்கண்டாலோ, அல்லது அவ்வியக்கத்தின் பெயரைக்கண்டாலோ, அல்லது அக்கொள்கையின் மனிதனைக்கண்டாலோ, அப்பா! சுயமரியாதைக்காரனு? வென்று உள்ளம் நடுங்கிய "பின்" ஒருவித ஆற்றலுக்கு வருகிறார்கள். நான் சில தினங்களுக்கு முன் "குமரன்" என்னும் மாதப்பத்திரிக்கையும், "புதுவை முரசு" என்னும் வாரப்பத்திரிக்கையும், கையில் கொண்டு ஓர் நண்பரிடத்து சென்றேன், அவர் இவ்வியக்கப் பேப்பரை கையில் வாங்கிப்பார்த்தார். உடனே தேள் கொட்டியது போல் (கொட்டியது தோயில்லையோ அவருக்குத்தான் தெரியும்) மறுவினாடியே பத்திரிகை என் கையில் இருந்தது. உடனே நான் அவரை நோக்கி, எனய்யா! பத்திரிகையை கண்டு இப்படி பயப்படுகிறீர்கள்? என்று வினவ, அவர் (தொடுத்தார் ஆரம்போல்) இல்லை! இல்லை! ராமாயணத்தைப்போல்! சுயமரியாதைப் பத்திரிகை ஆசிரியர்கள் அரையும் குறையுமாகப் படித்தவர்கள், அப்பத்திரிகையைப் பார்ப்பவர்களோ கண்டவுடன் கூத்தாடுகின்றவர்கள் என்றும், மேலும் கடவுள் இல்லையென்கிறார்கள், கோவில்களை இடித்து பள்ளிக்கூடம் கட்டவேணும் என்கிறார்கள் என்றும், இதுவெல்லாம் நியாயமா வென்றும் கேட்டார். உடனே நான் அக்கடவுள் நேசரை நோக்கி ஐயா! தாங்கள் வினவும் வார்த்தைக்கு பதில் அளிக்கின்றேன். ஆனால் பத்திரிகையை கண்டமாத்திரத்தில் பதறி விட்டீரே! அக்கொள்கையைப்பற்றி பேசுகின்,

---

கம்செய்தாராம் ஒருபெரிய குழிவெட்டிவிறகுகளை அடுக்கித் தீமூட்டிராமநாமம் ஜபித்துக்கொண்டு யாககுண்டத்தைச் சுற்றிஅவர் தாண்டவமாடினாராம். அப்பால்வீட்டுக்குச்சென்று மறுநாள்காலை யாககுண்டத்தில்பாய்ந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த சமாசாரம் கிராமத்தாருக்குத் தெரியவந்ததும் அவர்கள்வந்துபார்க்கையில் அவரதுஉடல் பாதிவெந்து கரிக்கட்டையாகிக் கிடந்ததாம்.

கடைசியில் போலீசார்வந்து மரணவிசாரணைநடத்தி பிரேதத்தைதகனம்செய்ய பந்துக்களிடம் கொடுத்தார்களாம்.

ச-ம்.

ஒருகால் விஷம் தலைக்கேறியது எனது நெஞ்சு தைரியத்துடன் பிராபோல் படுத்து விடாதீர்! என் மனன் இல்லம் என்று தெரியாதென். உடனே அவர் (தலை அறுபட்ட ஆட்டைப்போல் விழித்தார்.) அல்ல! அல்ல! (ஆந்தையைப்போல்) ஆஹா! கைதவறுதல் கண்ணிரண்டும் விழித்துக்கோரத்துடன் பார்த்தார் பிறகு, அவறை அக்கோபத்தை உணடுகளியுங்கள் என்றுசமாதானம் சொல்லியபின், நீங்கள் தான் பத்திரிகையை கண்டமாத்திரத்தில் பயப்படுகிறீரே! அவ்வியக்ககாரர்களும், அக்கொள்கையுடையவர்களும், கடவுள் இல்லை என்கிறார்கள் என்று உங்களுக்கு எப்படி தெரியுமென்றதற்கு, இல்லை எல்லோரும் அப்படித்தான் சொல்லுகிறார்கள் என்றார். உடனே நான், உங்களைப்போன்றுதான் அவர்களும் பதில் சொல்வார்களேயல்லாமல், ஆதாரத்துடனுவது, அல்லது தக்க முகாந்திரத்துடனுவது சொல்லவே மாட்டார்கள். நிற்க; தாங்களும் தங்களைச்சார்ந்த சிவநேசர்களும் சொல்வதில் அர்த்தமில்லாமலில்லை. அதாவது; சுருங்கச்சொல்லுமிடத்தில்கடவுளால் ஏற்பட்ட புராணங்களென்றும். அப்புராணங்களில் உள்ள மதம் என்னும் ஆணவத்தால், பலித்த வரையில் பார்ப்பான் இல்லை பார்ப்பான்! என்பவனால், சூத்திரன் என்பவனை தீண்டாதாகவும், சூத்திரன் என்பவனால், பஞ்சமன் என்பவனை தீண்டாதாகவும் கருதிக்கொண்டு வந்ததுமன்னியில் மேல் சொன்ன பார்ப்பாவிடம், சூத்திரன் என்பவன் சென்று எவ்வளவு கொடூரமான பகியாக யிருந்தபோதிலும்கூட, அதாவது உயிர்போகும் தருவாயில் இருந்தபோதிலும்கூட அய்யா! சிறிது அன்னமிடுங்கள் என்றுவது அல்லது தாகத்திற்காவது கொஞ்சம் தணணீர் கொடும் என்றுவது கேட்டுவிட்டால் (அவர்கள் தூஷிப்பது மானங்கெட்டதன்மையாக இருந்தபோதிலும் அது ஒருபுறமிருக்கட்டும்) இக்கல்நெஞ்சுடைய பார்ப்பான் மனது கொஞ்சமாவது இளகுமா? அல்லது அவன் மனவியாகட்டும் ஈவிரக்கம் கொள்வாளா? இல்லவே இல்லை. வேறு, என்ன சொல்வார்கள்? சூத்திரன் எவ்வளவு தான் செல்வமுள்ளவனாகவும், படிப்புள்ளவனாகவும், பதவியுள்ளவனாகவும் இருந்தாலும் அவனை சூத்திரன் என்றுதானே சொல்லுகிறார்கள். அதுமாத்திரமல்லாமல் அவனை சூத்திரன் என்பதற்காக அவனை தீண்டாதவனாகவும் கருத

அவனை நாம் என்ன சொல்வோம் குடியை கெடுக்க வந்தகோடாரிக் காம்பு என்றும், நட்பைப் பிரிக்க வந்த சண்டாளன் என்று தான் சொல்லுவோமா? வேறு என்ன சொல்வோ மென்று சிந்தித்துப் பாருங்கள். ஐயா! வைதிக சிகாமணிகளே, சிவன் பேரில் காதல் கொண்ட மீனன் மனிகளே!! மனிதன் பேரில் ஏற்பட்ட குற்றங்களை மாத்திரம் கூசாமல் நேரத்தில் சொல்லி விடுகிறீர்கள். இதோடு நில்லாமல் பத்திரிகைகளின் மூலம் பேரையும் விளம்பரம் படுத்திக்கொள்கிறீர்கள். கடவுள் மேல் உள்ள குற்றங்களை கண்டு பிடித்து சொல்ல முன் வர மாட்டேன் என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்லி விடுகிறீர்கள் உங்களுக்குத் தான் அவ்வளவு தூரம் அறிவு எட்ட வில்லையாகிலும் ஆராய்ச்சி செய்து சொல்ப வர்களை கண்ணை மூடிக் கொண்டு பிதற்றுகிறீர்கள். இதன் நடுவில் கடவுளால் ஏற்பட்டது என்று சொன்ன வுடன் தட்டுத் தடங்கலின்றி அது என்ன விதமான ஆபாசமானாலும் சரி, சமூகத்தைப் பாழாக்கவந்தாலும் சரி, அப்படியே மன நிலை பதிய வைத்து விடுகிறோம். மனிதன் சொன்ன தென்று சொல்வோமேயாகில் ஆராய்ச்சி செய்யத் தொடங்கி விடுகின்றோம். ஆனால் ஆராய்ச்சி வேண்டு மென்று சொல்ல முன் வரவில்லை. எக்காரியங்களுக்கும் அவ்வித ஆராய்ச்சி வேண்டு மென்று தான் சுயமரியாதைக்காரர்கள் சொல்கின்றார்கள் இதில் எவ்விதமான காரியங்களுக்கும் "கடவுள் மேல் வைக்கும் நம்பிக்கையால் புத்தி மழுங்கி விடுகின்றது" என்று சொல்லும் "சுயமரியாதை" இயக்கத் தலைவரும் அக் கொள்கையுடையோரும் சொல்வதில் என்ன தப்பிதம் இருக்கிறது என்று அறிவை யுபயோகித்து அமர்ந்து பாருங்கள். இவ்வுதாரணம் போதாதென்றால் இன்னும் பல உதாரணம் கொடுக்கத் தயார். நிற்க; எவ்வித பேதமில்லாமல் மக்களெல்லாம் ஒன்று. முதலாளி தொழிலாளி வேற்றுமை அற்று, ஆண் பெண் சமத்துவமென்று, கருதக்கூடிய எக் கடவுளானாலும்சரி, அல்லது அவரால் ஏற்பட்ட புராணங்களானாலும் சரி அது தானாகட்டுவிண்டும். அப்பேற்பட்டதை "சுயமரியாதை" இயக்கத் தலைவரும் அக்கொள்கையுடையோரும் வரவேற்க தயாராக இருக்கிறார்கள். "சுயமரியாதை" என்னும் கோலால் தூபில் செய்பும் மக்களை தட்டி எழுப்பி கண்ணை விழித்துப் பாருங்கள் உலகம் எந்நிலையில் இருக்கின்றது? நீங்கள் எம்முடுக்கில் இருக்கின்றீர்கள்? என்று ஞானப்பாலை ஊட்டிய கொள்கையையும், அதன் தலைவரையும். அவ்வியக்கப் பத்திரிகைகளையும், அக்கொள்கையுடையோரையும் அரைப்படிப்புக்காரர்களென்றும், கூத்தாடுகிறவர்களென்றும், குறை கூறுவதின் கருத்தென்ன? ஓய்! உம்முடைய வார்த்தையே உம்மை முழுமுட்டாள் என்று காணபிக்கின்றதே அதை விடுத்து புனித இயக்கத்தை குறை கூறுகின்றீரே! உம்முடைய மதிதான் என்னே! "சுயமரியாதை ஓர் சிம்மம் அல்ல! ஓர் புலியல்ல! ஓர் மதங் கொண்ட யானையல்ல! வேறு என்ன? அது தான் தன் மதிப்பென்றும்; அடிமையை நீக்க வந்த ஓர் அம்சம் அதை நீரும் உமது சுவதேசகர்களும் கண்டவுடன் பயப்படுகிறீர்களே! எதற்காக என் பயப்பட வேண்டும்? அவசரக் காரனுக்கு புத்தி மட்டு என்பது போல் அவசரப் படாதீர்கள். மூளைக்கு கொஞ்சம் வேலைகொடுத்து முக்கியமாக "சுயமரியாதை" யைப் பெறுவீர்களென்று நம்புகிறேன்.

ஈ. வெ. ராமசாமியின் படத்திறப்பு விழா.

யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச்சார்ந்த வதிரியில் பிரபல செல்வந்தராயிருந்து காலஞ் சென்ற சுவாமிநாதர் வேலுப்பிள்ளையின் பங்களாவில் தோழர் எஸ். குணரத்னம் அவர்களால் சுயமரியாதை இயக்கத் தலைவர் ஈ. வெ. ராமசாமி படம் 1-2-32ல் திறந்து வைக்கப் பட்டது. அச்சமயம் உள்ளூர் சுயமரியாதை வாலிபர்களிற் சிலரும் இந்திய சுயமரியாதை வாலிபர்களும் வந்திருந்தார்கள். சு. வே. சதாசிவம் அவர்கள் "காங்கிரசும் சுயமரியாதையும்" என்பதைப்பற்றி சொற்பொழிவாற்றினர். பின்பு சமதர்ம வாசகசாலை ஒன்று திறப்பதை ஆலோசனை செய்வதாக தீர்மானிக்கப் பட்டது. தலைவர் முடிவுரையில் வைதீகப் பார்ப்பானும் (கடவுள் பேரால் மூடச்சனங்களிடமிருந்து வருந்தியுழைக்கும் பணத்தை கொள்ளையடிக்கும்) கடவுள் பக்தர்களும் கேடு செய்யும் எவ்வித கொடுமைகளுக்கும் மிரட்டல்களுக்கும் நானும் சதாசிவமும் அஞ்சப் போவதில்லை யென்றும் கூறி முடித்தார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

திரு. ஆர். கே. ஷண்முகம்.

சர்வதேச தொழிலாளர் பிரதிநிதியாக இவ்வருஷம் உயர்திரு ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல். எம். எல். எ. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

ஓலகண்டாபுரம் "சமதர்ம சங்கம்";

1932-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 18ந் தேதியில் இவ்வூரில் "சமதர்ம சங்கம்" என்ற ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. ஷே சங்கத்தை மாஜி சேர்மன் உயர்திரு பெரியார் சி. கு. சிவலிங்கம் அவர்கள் திறந்து வைத்தார். திறப்புவிழாவிற்கு இவ்வூர் யூனியன் போர்டு வைஸ்சேர்மனும், பிரபல மிராஸ்தாருமான தோழர் கே. எஸ். இராஜகோபால் அவர்களும் பிரபல வர்த்தகர்களும், உபாத்தியாயர்களும் விஜயம் செய்து திறப்பு விழாவை சிறப்புற நடாத்தி வைத்தார்கள். ஷே சங்கத்திற்கு பஞ்சாயத் கோர்ட்டு பிரசிடெண்டு உயர்திரு பொ. மா. பழனியப்பன் அவர்களை தலைவராகவும், உயர்திரு பெ. ம. பழனிவேல் அவர்களை பொக்கிஷதாராராகவும், தோழர். ஜே. பி. கிருஷ்ணன் அவர்களை காரியதரிசியாகவும், சங்க மெம்பர்களால் ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஷே சங்கத்திற்கு "சண்டமாருதம்" "திராவிடன்" "தமிழன்" "குடி அரசு" "புதுவை முரசு" "போர் முரசு" "குமரன்" "ஆனந்த போதினி" "ஆனந்த விகடன்" பத்திரிகைகள் வரவழைப்பதென்றும், சங்கம் சீர் திருத்தத்துரையில்முனைந்து உழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

விளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்:—

ஈரோடு முனிசிபல் சங்கத்தாருக்கு பாத்தியப்பட்ட கீழ் குறிப்பிட்ட பீஷர் வீதியிலுள்ள நெ. 1 முதல் 8 வரையிலுள்ள 8 கடைகளை 1932-33 வருஷத்திற்கு அனுபவித்துக்கொள்ளும் பாத்தியதையை 1932-ஹு மாசி மாதம் 12-தேதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஈரோடு முனிசிபல் ஆபீசில் முனிசிபல் சங்கத்தாரால் பகிரங்கமான ஏலத்தில் விடப்படும்.

ஈரோடு முனிசிபல் ஆபீஸ்,
16—2—1932.

(ஒப்பம்)
K. A. ஷேக்தாவுத்
சேர்மன்.

தாது புஷ்டிக்கு
"கெய்ரோடைன்"
சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இலவசமாக அனுப்புகிறோம். விலாசம்:
ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

விபசாரத்தடை.

சென்னையில் அமுல்.

இம்மாதம் 13ந்தேதி வெளியான சர்க்கார் அறிக்கையில் மேற்கண்ட விபசாரத்தடைச்சட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பதாவது:—

1930ஆம் சென்னை சட்டசபையில் விபசாரத்தடை சட்டம் நிறைவேறியது. அதுமுதற்கொண்டு ஷை சட்டத்தை நிறைவேற்றி வைப்பது சம்மந்தமாய் சர்க்கார் யோசித்து வந்தார்கள். அந்தச்சட்டம்மாகாணம் முழுவதும் உபயோகிக்கவேண்டியிருக்கிறது. சிறுவர்கள் விசாரணை கோர்ட்டுகளும், சிறுமிகளுக்கு பாதுகாப்புவிடுதிகளும் இல்லாமையால் அதை முன்னமே அமலுக்கு கொண்டுவரமுடியாது போயிற்று. குறிப்பிட்ட சில இடங்களில் அத்தகைய சௌகரியங்கள் உள்ள விடங்களில் இச்சட்டத்தை அமலுக்குக் கொண்டுவர சர்க்காருக்கு அதிகாரமில்லாதிருந்தது. இத்தகையகஷ்டங்களைப்போக்க சர்க்கார் 1931ஆம் ஒருதிருத்தத்தைஏற்றுஅதுவும்சட்டமாயிற்று. குறிப்பிட்ட சில இடங்களில் இசசட்டத்தை அமலுக்குக் கொண்டு வரவும் சிறுவர் விசாரணை கோர்ட்டுகளில்லாமையால் டம் விதியை தள்ளுபடியும் செய்கிறது. திருத்தமசோதாப்படி ஒருகஷ்டம் நிவர்த்திக்கப்பட்ட போதிலும், சட்டத்தின் 6-வது செக்ஷன்படி 18 வயதுக்குகுறைந்த ஒரு பெண்ணை விபசார விடுதியினின்றும் அப்புறப்படுத்தவும், அவளை 21-வயது வரை அல்லது தனக்கு உசிதமாய் தோன்றுகிறகாலம்வரை ஒரு பாதுகாப்பு விடுதியில் வைத்திருக்க மாஜிஸ்டிரேட்டுக்கு அதிகாரம் கொடுக்கிறது. வேறு பாதுகாப்பில் வைப்பதாயின் தகுந்த முகாந்திரங்கள் எழுத்து மூலம் காட்டவேண்டும். ஆதிமசோதாவைப்பற்றி அறிக்கை வெளியிட்ட செலக்ட் கமிட்டியார் மாகாண சர்க்காரே பாதுகாப்பு விடுதிகளை ஏற்படுத்தவேண்டுமென்று வற்புறுத்தியது. இது சம்மந்தமாய் எவ்வித பணப்பொருப்பும் சர்க்கார் ஏற்றுக்கொள்ள முடியாமலிருக்கிறார்கள். எனவே அவ்விதியை சேர்ப்பதற்கு கவர்னர் மறுத்துவிட்டார். பாதுகாப்பு விடுதிகள் சம்மந்தப்பட்டமட்டில் கீழ்கண்டவாறு நடப்பதாக அறிவித்திருக்கிறார்கள்:—

பொது ஜனதர்ம விஷயமாய் இருக்கும் ஒரு காரியத்துக்குப்பணம் கொடுக்க இதுசமயம் சர்க்காரிடம் பணமில்லை. எனவே ஷை சட்டம் முழுவதும் அமலுக்குவர வேண்டுமானால் பொது ஜன உபகார ஸ்தாபனங்கள் மேற்கண்ட விடுதிகளை ஏற்படுத்தி நடத்தவேண்டும். சில ஸ்தாபனங்கள் ஷை பெண்கள் பாதுகாப்பில்ஏற்படும் சிலவில்ஒருபகுதியைகொடுப்பதாயிருந்தால் தாங்கள் ஏற்படுத்துவதாய் சொல்கின்றனஇதற்கு சர்க்கார் சம்மதிக்கமுடியாது. சட்டம் ஒருவசதியை உண்டாக்குகிறது. அதுவேலை செய்யப்பார்த்துக்கொள்வது பொதுஜன ஸ்தாபனங்களின் கடமையாகும்.

தகுந்த பாதுகாப்பு விடுதிகளில்லாமையால் 18 வயதிற்கு குறைந்த பெண்களை விபசார விடுதியிலிருந்து அப்புறப்படுத்தி அவைகளைப்பராமரிக்கும் விபசாரத்தடை மசோதா 6, 7, 8, 16ம் செக்ஷன்களை சர்க்கார் அமலுக்கு கொண்டுவரமாட்டார்கள். சட்டத்தின் ஏனைய செக்ஷன்களை சென்னை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், பின்னர் பரீக்ஷார்த்தமாக சிலகுறிப்பிட்ட நகரங்களிலும் அமலுக்குக்கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சமயம் நேரும்போது இந்த செக்ஷன்கள் மற்றய இடங்களிலும் அமலுக்குவரும்.

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

வழக்க மெல்லாம் மண்மூடிப் போக.—ராமலிங்கசுவாமிகள்.

ஃஃ ஃஃ

பகுத்தறிவென்பது மனிதவாழ்க்கைக்குஇன்றியமையாததொருபோக்கிஷம். அதை உபயோகிக்கத் தெரியாதவனை, அல்லதுஉபயோகிக்க முடியாதவனை மனிதவாழ்க்கைஎன்ற லட்சியத்திலிருந்து விலகிய ஒரு பேடியாவான் .....

ஜி. வெங்கிடாசலம்.

ஃஃ ஃஃ

சிவமதத்திற்கு விபூதி, ருத்ராட்சம்—வைணவ மதத்திற்கு ராமம், துளசிமணி—கிருஸ்துவ மதத்திற்கு சிலுவை மதச்சின்னங்கள் போல, தொழர் காந்தியின் "ராமராஜ்ய"த்திற்கு கதர் மதச்சின்னமாம்.....எஸ். வி. தொகுதி.

ஃஃ ஃஃ

ஆதிதிராவிடர்களுக்கு மதத்தைப்பற்றி கவலையில்லை—மத உரிமையைபற்றியே கவலை.....

வீரய்யர்.

ஃஃ ஃஃ

பலாத்காரத்தினால் இந்தியாவின் சுதந்திரம் பின் தள்ளிப்போகும். சுயராஜ்யம் பெற்றவுடன் எல்லோரும் சுத்தாதாத்துடனும் நிருப்திபுடனும் இருப்பர் என, யாரும் கருதவேண்டாம். சுயராஜ்யம் எல்லாத்துன்பங்களையும் பரிகரியாது. சுயராஜ்யத்துக்கு அப்பாலடையாக உள்ளது சரியான சமூக ஒழுங்கேயாகும்.....

எஸ். ராதாகிருஷ்ணன்.

ஃஃ ஃஃ

மதம், கடவுள், மறு ஜென்மம் ஆகிய இவைகளை நீலி நிறுத்துவதற்கு யார் எந்த வெஷத்தில் வந்தாலும், அதாவது காங்கிரஸ் பக்தராக வந்தாலும் சரி, உலகம் போற்றும் உத்தமராக வந்தாலும் சரி, அல்லது சாஸ்திர எடுகளுடன் கடவுளென்று ஒன்றை யே அழைத்துக்கொண்டு வந்தாலும் சரி, அஞ்சாமல் கேள்விகளுடன் எதிர்ப்போம்.....

எஸ். ஆர். சாமி.

ஃஃ ஃஃ

மதமும், கடவுளும், அடுத்த ஜென்மமும் ஒழிந்தாலொழியஇந்திய பொருளாதாரத்தையில் எந்நாளும் சீர்படப்போவதில்லை. அதற்கு பதிலாக தரித்திரமும், கூலியும், இழிவும், பஞ்சமும் நோயும் இந்தியாவுக்கு நிரந்தர சொத்தம்..... ஈ. வெ. ராமசாமி.

ஃஃ ஃஃ

அறிவற்றவன் கல்விக்ரகத்தின் தலையில் பால், தேன், பசு நெய், தயிர் இவைகளைக் குடங்குடமாக, விட்டு அபிஷேகம் செய்தால், மோக்ஷ லோகத்தில் முதல் வகுப்பில் போய்ச்சேரலாமென்பான். .....சி எம். குமார்.

ஃஃ ஃஃ

ஏழை மக்கள் முன்னேறவேண்டுமென்றால், கோவிலையும், அதிலுள்ள சாமிகளையும், அதன் சர்க்களையும் இல்லாதொழிக்கவேண்டியதேயல்லாது வேறுவழியில்லை.....செல்வி சிவகாமி.

ஃஃ ஃஃ

வருணாச்சிரமத்தை நிலை நிறுத்தவும், முதலாளிகளை காப்பாற்றவும், ஜமீன்தார்களுக்குப்பந்தோபஸ்து அளிக்கவும். தொழிலாளி கட்டு வயிற்றுக்கு வேண்டிய அளவு கூலி கொடுக்கவும், தேசியமும், காங்கிரசும் இருக்கிறதென்றால், அந்த தேசியத்தையும், காங்கிரஸையும் ஒழிப்பதுடன், அத்துடன் அளவளாவும் அரசாங்கத்தையும் ஒரு கை பார்த்தே விடுவோம்.....எஸ். பி. விசலாட்சி.

வாலிபர் பொதுக்கூட்டம்.

30-1-32ல் வேலூரைச்சார்ந்த விருப்பாட்சி அக்ராவரத்தில் வாலிபர்களின் பொதுக்கூட்டம் ஒன்று இரவு 8-மணிக்கு ஏடைபெற்றது. அதுபோது பலபெரியோர்களும், வாலிபர்களும் விஜயம் செய்திருந்தார்கள் பின் தோழர் இ. சின்னப்பா அவர்களால் வட்டமேஜை மகாநாட்டில் வெற்றிபெற்ற தருவாளர்கள் டாக்டர் அம்பேத்கார், சீனிவாசன் அவர்களின் வீரத்தை புகழ்ந்தும் தோழர் இ. பெரியசாமி அவர்களால் வாலிபர்களின் கடமையும் (வாலிப) சங்கத்தின் அவசியமும் என்பதுபற்றியும் பலமேற்கோள்களுடன் பேசப்பட்டது. பின் அவ்விடம் ஓர்வாலிபசங்கம் சீக்கிரத்தில் ஆரம்பிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

[5-ம் பக்கத்தொடர்ச்சி]

வியாக்யானத்தை, தற்காலம் பொது ஜனநாயக மென்று- அழைக்கப்படும் எந்த அரசியலுக்காகிலும், பொருத்தமுளதா வென விசாரிப்போம். நமது தேசத்தில் (British India) நிகழ்வுறும் "ஜனநாயக" மென்று வழங்கும் அரசியலே விசாரிப்பாம். ஜன நாயக சபைகளென வழங்கும் சபைகள் இரண்டுள. இவ்விரண்டு சபைகளை, சட்ட சபைகளெனக் கூறுவர். முக்கிய சட்டங்களெல்லாம், இவ்விரண்டு சபைகளில்நடக்க வேண்டுமென, எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடு, மத்திய சர்க்காரைப் பொருந்தியது. ஆனால் மாகாணங்களிலும், சட்ட சபைகளெனக்கூறும், ஸ்தாபனங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த ஸ்தாபனங்களில், பொது ஜனங்களுக்கு வேண்டிய நன்மைக்காக, சட்டங்கள்செய்வதென சித்தாந்தம். இந்த ஆட்சி புரிய, இந்த ஸ்தலங்களுக்கு, பொது ஜனப் பிரதிநிதிகளென்போர், தேர்தல் செய்யப்படுகின்றார்கள். இவர்களை தெரிந்தெடுப்போர் யார்? பொது ஜனங்கள். இந்த பொது பொது ஜனங்கள் யார்? தங்கள் நன்மை இன்னதென தெளிவு அடையாதோரும், மத கற்பனைகளில் உழலும் மாந்தரும், செல்வவந்தர்களுக்குத் தொண்டு புரிவோரும், ஜாதி சமையத்தில் ஆழ்ந்தோரும், ஆகிய இத்யாதி பாமர மக்களே நிகழும் ஜனநாயகத்தில் தேர்தல்உரிமையைப் பெற்றுள்ளவர்கள். இவர்களுக்குப் பிரதிநிதிகளாக வருவோர் யார்? தனவந்தர்களும், ஜமீன்தார்களும், நிலச்சுவான்களும், லாயர்களும், வர்த்தகர்களும், மத குருமாரும், சேனைத தலைவர்களும், மற்றும் பல சிறிய பெரிய முதலாளிகளுமே. இத்தியாதி சம்பத்தையும், ஆதிக்கத்தையும், செல்வாக்கையும் படைத்துள்ள முதலாளிகள், இவைகளற்ற பாமர மக்களுக்கு பிரதிநிதிகளாக வருகின்றார்கள். சுருங்கச் சொல்லல் விளங்க உரைத்தல் என்றபடி, உடையவர்கள் (Haves) இல்லாதவர்களுக்கு (Have nots) ப் பிரதிநிதிகளாம்! இவர்கள் இட்டது தான் சட்டமாம்!! இது தான் ஜனநாயக ஆட்சி முறையாம்!!!

இந்த மண்ணுலகில், எந்த தனவந்தன், எந்த முதலாளி, எந்த நிலச்சுவான், தன் கீழ் அடங்கியுள்ள பல கோடி பல்லாயிரம் பாமர மக்களுக்கு சொத்துரிமையும், செல்வவுரிமையும், கல்வி யுரிமையும், சுதந்திரமும், சமத்துவமும், சகோதரத்துவமும், மற்றுமுள்ள செல்வாக்குகளும், அளிப்பான் என்று கேட்கின்றோம்? புலி, தன் வேட்டையைக்கொடுத்தாலும் கொடுக்குமே யொழிய, செல்வாக்குடைய முதலாளி (Bourgeois) ஒருக்காலும் தனது செல்வாக்கில், இம்மி அளவாகிலும் பாமர மகனுக்கு கொடுக்க மாட்டான் என அறிக. அல்லது

தொடுக்கா விடினும், பாமர மகன் அடைய வேண்டிய சாய் கால்களே யாகிலும் உண்டாக்க மாட்டான் எனவும் அறிக. ஏனெனில் முத லாளியின் இனம் வேறு, பாமர மக னின் இனம் வேறு. மற்ற நாட்டில், இந்த வேற்றுமையாலும், நமது நாட் டில், இத்துடன், சாதி மத வேற்று மையாலும், பொருளாளி, தொழிலா ளிக்கு தன்னுடைய சமத்துவத்தைப் பகுந்து கொடுப்பான். இந்த ஆபாச இன வேற்றுமையால் தான், (Less Division) "ஜன நாயகம்" என்று சொல்வது, வெறும் பேச்சாக முடி கின்றதே யொழிய, உண்மை சுதந் தரம், சமத்துவம், சகோதரத்துவம், பொது ஜனங்களுக்குக் கிட்டுவது மிகக் கஷ்டம். இந்த ஆபாச திட் டத்தை, பொது ஜனங்களுக்காக பொது ஜனங்களால், அவர்கள் பொறுப்புக்காக, ஏற்பட்டுள்ளதென் பதும் ஆபாஸமே!

இன்னொரு ஆபாசமும் இந்த ஆபாச ஜனநாயக திட்டத்தில் அடங் கியுள்ளது. அதென்ன வெனில் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள், அவ ரவர்களுடைய தொழில் முறைப்படி தெரிந் தெடுக்கப் படாமல், பொரு ளாப்படைத்த சந்தர்ப்பத்தால், தேர் தல் உரிமையை அடைந்திருக்கும் திருக்கூத்தே! இந்தக் கூத்தின் ஆபா சமே, ஆபாசம்!! தச்சனுக்கு லாய ரும், தரிகாரனுக்கு வர்த்தகனும், கிருஷிகனுக்கு (பயிரிடுவோன்) பாதி ரியும், ரயில்வே தொழிலாளனுக்கு கப்பல் ஓட்டும் தொழிலாளியும், நில முள்ளவனுக்கு நிலமுடையவனும், ஏழைக்குப் பணமுடையோனும், இவ் விதமாக, சம்பந்தமோ, இனமோ, தொழிலோ இல்லாத ஒருவனுக்கு அனுமதேயப் பேர்வழிகளெல்லாம் பிரதிநிதிகளாக வருகின்றார்கள்! இந்த ஆபாச பிரதிநித்துவத்தைத் தான், நமது காங்கிரஸ் காரர்களும், மற்றுமுள்ள முதலாளிகளும் கோரு கின்றார்கள். இந்த ஆபாச அரசி யல் நடவடிக்கையால் தான் உலகி லுள்ள அரசியல் திட்டங்கள் மூல மாக உலக மக்களுக்கு எந்த சுகப் பேறும் அடைய முடிய வில்லை.

இன்னுமொரு ஆபாசத்தில், நித முமும் ஜனநாயகத் தேருதல், அவஸ்த் தைப்பட்டழல்கின்றது. அதாவது, இயற்கைக்கு விரோதமாக, நடந்து வரும் தேருதல்களே. எந்தெந்த தொழிலைப்புரிகின்றார்களோ, அந்தந்த தொழிலுக்துரியவர்களை பிரதிநிதிக ளாக எடுப்பது தான் இயற்கையான ஜன நாயகத்தேர்தலாகும். உலகத் தொழில்களை யாகிலும், அல்லது நாட்டுத் தொழில்களை யாகிலும், அல்லது கிராமத் தொழில் களையாகிலும், சிற்சில தொழில் களாக பிரிக்கலாம் இரும்புத் தொழில் (Heavy Industries) நெசவுத் தொழில் (Textile) பயிர்த் தொழில் (Agriculture,) போக்கு வரத்து (Trans Port) தற்காப்புக்கு வேண்டிய சேனை (Army & Navy) விஞ்ஞானம், (Science and Invention,) எண்ணை (Oil) கல்வி, கேள்வி, (Education and Culture) முதலிய தொழில்களே முக்கியமான வை. இத்தொழில்களால் தான், உலகமும் அதிலுள்ள அரசியல்களும் சம்பத்தும், செல்வமும், ஞானமும், தழைக்க வேண்டும். இந்தத்தொழில் களைக் செய்வோர்கள், சுகப்பட வேண்டுமானால், இந்தத் தொழில் செய்வோரே அரசியல் புரிய வேண் டும். இந்த அரசியலை நடத்துவோர் தான், தேருதல் (Election) ஆதிக் கம் பெற வேண்டும். இந்தத்தேரு தலைக் கொண்டு தான், பிரதிநிதி களைத் தேர்ந்து எடுக்க வேண்டும். இவ்வகைத் தேர்தலின் பிரதிநிதிகள் தான், இயற்கையான பிரதிநிதிக ளாவர். மற்ற அரசியலும், தேர்த லும், பிரதிநித்துவமும் இயற்கை அற்றவைகளே. (Unnatural) தொழில் முறைமைக்கு அதீதப்பட்ட அரசியலும் பிரதிநித்துவமும், தேர் தலும் ஜனநாயகத்திற்கு மாறுனவை களென அறியவும்.

தற்போது வழங்கும் ஜனநாயக ஆட்சியின் மூன்றும் ஆபாசம் யாதெ னில், ஒரு நாட்டிலோ அல்லது, ஒரு மாகாணத்திலோ அல்லது, ஒரு கிராமத்திலோ வாழ்கின்றவன், மற் றோர் இடத்தில் வாழும் பொது மக் களை ஆளும் ஆபாசமே! தமிழ் நாட் டில் வசிக்கும் ஒருவன், பம்பாயிலோ அல்லது வங்காளத்திலோ, வாழ்ப வர்களை ஆளும் ஆபாசமே. இது என்ன விபரீதம்? தமிழ் நாட்டு நடை யுடை பாவனை, தொழில், பழக்க வழக்கங்களுக்கும், பங்காளத்து நடையுடை தொழில் முறைகளுக் கும் என்ன சம்பந்தம்? இந்ததோஷ த்தை முதலாளி அரசுகளிலெல்லாம் காணலாம். இந்த தோஷத்தால் அரசியல் தாறுமாறுக நடை பெறு கின்றது.

இவ்வித ஆபாசம் நிறைந்துள்ள போலி ஜன நாயகத் திட்டத்தை மாற்றி தேசத்தில் உள்ள எல்லா மக் களும், சமத்துவம், சுதந்திரம், சகோ தரத்துவம், செல்வம், சுகம் செல் வாக்குப் பெற்று வாழக்கூடிய உண் மையான ஜனநாயகத்தை ஏற்படுத்த முயற்சிப்பதே நமது முதன்மை யான வேலையாகும்.

பலசாலிகள் மகாநாடு.

செட்டிநாடு பலசாலிகள் 2-வது மகாநாடு கூடிய சீக்கிரம் நடைபெ றும். அம்மகாநாட்டிற்கு பெங்க ளூர் உடற்பயிற்சிநிபுணரும் பலசாலி யுமான புரோபசர் கே. வி. அப்பரவ ர்கள் தலைமை வகிக்க இசைந்துள் ளார்களென ஒரு நிருபர் எழுது கிறார்.

மதப்பிரிவும், கதர் பிரிவும் ஒன்றே.

(பரமக்குடி எம். பாலசாமி.)

1. மதப்பிரிவர்கள், மதத்தை நம்பு வதாலும் மதத்திட்டத்தின்படி நடப் பதாலும் மோட்சமடைவதாகக்க ருதுகிறார்கள். கதர்ப்பிரிவர்களும், கதர்த்திட்டத்தை நம்புவதாலும் கதர்கட்டுவதாலும் 'சுயராஜ்யம் அல் லது விடுதலை' பெற்றுவிடுவதாகக் கருதுகிறார்கள்.

2. மதப்பிரிவர்கள் காவடி எடுத் துக்கொண்டு தேகமெங்கும் வேல் களைக்குத்திக்கொண்டு ஆடிக்கொ ண்டு அரஹரா, முருகா, கோவிந்தா என்று கோஷம் செய்துகொண்டு கோவிலுக்குச்செல்வதால் மோக்ஷம் கிடைத்துவிடுமென்று நம்புகின்றார் கள். கதர்ப்பிரிவர்களும் சுயராஜ் யக்கொடியைப்பிடித்துக்கொண்டு சத்தியாக்கிரகம் செய்து அடிதடி உதை வதைபட்டு 'வந்தே மாதரம் மகாத்மாகாந்திக்கு ஜே' என்று சொ ல்லிக்கொண்டு சிறை புகுவதால் சுயராஜ்யம் கிடைத்துவிடுமென்று நம்புகின்றார்கள்,

3. மதப்பிரிவர்கள் மதக்கர்த்தாக் களை தெய்வமாகக்கருதி வழிபடுகின் றார்கள். கதர்ப்பிரிவர்களும் கதர்க் கர்த்தாவாகிய காந்தியாரை மகாத்மா என்றும் கடவுள் அவதாரமென்றும், கருதி மண்ணுருவசிலையாக்கித்தே ரில்வைத்து சூடதிபாராதனை தேங் காயுடைத்தல் முதலிய சகல வைப வங்களுடனும் வணங்குகின்றார்கள்.

4. மதப்பிரிவுகள், மனிதன்முன் னேற்ற மடைய பலவகையில் ஆரா ய்ச்சி செய்தற்குரிய அறிவு வளர்ச் சிக்கு முட்டுக்கட்டை ஏற்படுகிறது. கதர்ப்பிரிவுகளும், இயந்திரவளர்ச்சி நாகரீக வளர்ச்சி, பொருளாதாரத் துறை முதலியவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்குரிய அறிவு வளர்ச்சிக்கு முட்டுக் கட்டை ஏற்படு கிறது.

5. ஒருவன் மதத்தைக் கண்டிக் கும் பொழுது அவனை மதப் பிரிவர் கள், நாஸ்திகன் மதத்துரோகியென்று நிந்திக்கவும், தூற்றவும் செய்கிறார் கள் ஒருவன் கதரைக் கண்டிக்கும் பொழுதும் அவனை கதர்ப்பிரிவர்கள் தேசத்துரோகி, சர்க்கார் தாசன்என நிந்திக்கவும் தூற்றவும் செய்கிறார் கள்.

6. மதப்பிரிவுகள் பார்ப்பனர்கள், பாமர ஜனங்களை ஏமாற்றி தாங்கள் உயர்ந்தவர்களென்று மதிக்கும்படி செய்து கோண்டார்கள்: கதரிலுலும் பார்ப்பனர்கள் பாமர ஜனங்களை ஏமாற்றி பல காங்கிரஸ் ஸ்தாபனங் களில் தலைமை வகித்து அதன்மூலம் தாங்கள் உயர்ந்தவர்களென்று மதிக் கும்படி செய்து கொள்ளுகிறார்கள்.

7. மதப்பிரிவுகள், மதக்கொள் கையின்படி நடப்பதால் கடவுள் சந் தோஷப் படுகிறார் என்று மூடத்தன மாகக்கருதப் படுகிறது: கதர்ப் பிரிவுகளும் கதர்கட்டுவதால் ஏழை ஜனங்கள் சுகமாக சந்தோஷமாக வாழமுடியுமென்று மூடத்தனமாக க்கருதப்படுகிறது.

உண்மை ஆராய்ச்சிசபை செந்தல்.

மேற்கண்ட வாசகசாலையின் கூட் டமொன்று உபதலைவர் கூ. மா. சி. மாரிமுத்து அவர்களின் தலைமையில் 30-1 32 இரவு 8-மணிக்கு கூடி யது. அவ்வமயம் உபதலைவரால் சந் தாசூலிப்பதைப்பற்றியும், அங்கத் தினர்கள் தேர்ந்தெடுத்தல்பற்றியும், சங்கத்தை ரிஜிஸ்தர் செய்தல்பற்றி யும் பேசப்பட்டன. பிறகு மா. செ. பண்டாரமவர்கள் கணக்கைப்பற்றிய விஷயங்கள் பேசினர். சி. வி. குப் புசாமியவர்கள் அகில மலேயா தமி ழர் மகாநாட்டில் நடந்தவைகளைப் பற்றி பேசினர், ஜி. குமாரசாமி சங்கம் அரசியம் முன்னேற்றமடை யவேணுமென்று பேசினர். கூட் டத்திற்கு ஏராளமானவர்கள் விஜயம் செய்திருந்தனர். கூட்டம் ஒரு விமரிசையுடன் கரகோஷத்தினி டையே நடைபெற்றது. பிறகு சில ரை 1932 சங்கநிர்வாகிகளாக மேற் படி சங்கத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்டபின் கூட்டம் கலைந்ததென ஒருநிருபர் எழுதுகிறார்.

நோட்டீஸ்.

உடுமலைப்பேட்டை

டி. டி. முன்சீப் கோர்ட்டாரவர்கள் சமூகம்.

1931 வது S. C. No. 839.

உடுமலைப்பேட்டை கருப்பண கவுண்டன் மகன் வெங்கிடாசலக் கவுண்டன்—வாதி.

உடுமலைப்பேட்டை தாலூக்கா ஆமந்தக்கடவுமஜரா அம்மாபட்டி மாரிகான்னம் கொபாலகிருஷ்ணய் யர் குமாரர் கோபிநாதராவ் 1-ம் பிரதிவாதி.

கெ நம்பரில் வாதி உங்கள் வகையராப்பேரில் பிராம்சரி நோ ட்டுப்படி ரூ. 136—0—0 ம்பின் வட்டியும் கோர்ட்டு சிலவும் வகை யரா கிடைக்கவேணுமாய்த்தாவா செய்து 29—2—1932ல் வாய்தா போட்டிருக்கிறது. ஏதாவது ஆக்ஷேபணையிருந்தால் ஆஜராகி கெ கோர்ட்டில் காலை 10-மணிக் கு தெரிவித்துக்கொள்ளவும் இல் லாதவரையில் ஒரு கக்ஷி தீர்ப் பாய்விடும்.

N. Mounaguruswami Naidu
Advocate.

[4-ம் பக்கத்தொடர்ச்சி]

சாங்கத்தின் கீழிருந்து வாய் விட்டு சொல்லுகிறார். தீர்மானம் தோற்றுப் போகிறதென்றால், நீங்கள் கோரும் வருணச்சிரம ராம ராஜியத்திலே, இவைகளைப்பற்றி பேச முடியுமா? நினைக்க முடியுமா? யோசித்துப் பாருங்கள். சகோதரிகளே நிலைமை இவ்வாரிருக்க நீங்கள் அர்த்தமில்லாது மேற்கொண்ட செய்கை முன்யோசனையற்றதென்றே கூற வேண்டியிருக்கிறது. உங்களது ஊக்கமும், தைரியமும், உணர்ச்சியும் பாராட்டற்குரியதே. ஆனால், அவைகளை எவ்வழியில், எதற்காக செலவிடுவது? திடீரென நீங்கள் காங்கிரசின் மீது கொண்ட அன்பின் ரகசியம் தான் என்ன? ஸ்ரீமதி..... கூட்டத்தை நடத்தினார், ஸ்ரீமதி.....மாலை போட்டு வரவேற்கப் பட்டார், ஸ்ரீமதி மறியல் தொண்டர்களை நடத்திச் சென்றார் என்று காணப்படும் பத்திரிகை விளம்பரங்களின் மேல் கொண்ட பிரேமையா? அல்லது மகாத்மீயத்தின் மீது கொண்ட அன்பா? அல்லது காங்கிரஸ் கொள்கைகள் மீது வைத்த பற்றுதலா? அல்லது தேசாபிமான வெள்ளத்தின் பெருக்கா? அல்லது தேசப்பணியின் மேன்மையும் கடமையும் உணர்ந்தா? என்பது விளக்கப் பட வேண்டிய பிரச்சினையாகும்.

நீங்கள் சாதித்ததென்ன?

சகோதரிகளே கடைசியாக ஒன்று சொல்லி இதை முடிக்கிறேன். அடிமை நாடாகிய பாரத நாட்டின் சுதந்திரத்தை விரும்புகின்ற நீங்கள், எத்தகைய கஷ்டத்தையும் ஏற்று, தியாகமும் செய்து சிறைக்கும் சென்று இந்திய விடுதலையை விரும்பும் நீங்கள், உங்கள் உயிரைவிட அருமையாக நீங்கள் கருதும் "தாலியை"யும் இழந்து தேச சேவையில் ஈடுபட்ட நீங்கள், உங்கள் நிலையை, உங்கள் பெண் இனத்தின், பெண் சமூகத்தின் கோர நிலைமையை, இழிதகைமையை, உரிமையற்ற வாழ்வை, சுதந்தரமில்லா வாழ்வை, அடிமை வாழ்வை, உயிரற்ற வஸ்துக்களாய், நடைபிணங்களாய் வாழும் வாழ்க்கையைப்பற்றி சிறிது நேரமாவது யோசித்த துண்டதா? உங்கள் அன்புமிக்க சகோதரிகள் மூடப்பழக்க வழக்கங்களாலும், குருட்டு நம்பிக்கைகளாலும், மதத்தின் பேராலும், கடவுள் பேராலும், சாஸ்திரம், புராணம், சுருதி, ஸ்மிருதி இவைகளின் பேராலும் அநுபவித்து அல்லலுறும், கஷ்டங்கள், நஷ்டங்கள், கொடுமைகள் எவ்வளவு என்பதையாவது, அவைகளுக்குப் பரிகாரமென்ன என்பதையாவது உங்களில் எத்தனைபேர் யோசித்தீர்கள்? அதற்காக என்ன செய்தீர்கள்? சீர்திருத்த அவாவும், சுதந்தர விழைவும், உரிமை வேட்கையும் ஆண்களுக்குமட்டுமிருந்தால் போதாது, அது போன்றே பெண்களுக்கும் இருந்தாலல்லாது எவ்வகை முன்னேற்றமும் சாத்தியமானதல்ல வென்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளுகிறீர்களா? அவ்வாராயின் மதப்பைத்தியம் கொண்டு, ஸ்தலயாத்திரை, தீர்த்தயாத்திரை செய்து கடவுளை வணங்கி, ஏராளமான பொருளை விரயமாக்கி, ஏழைகளாகி வருந்தித்தவிக்கும்ஏழைச் சகோதரிகளுக்கு இறங்கி அவர்களுக்கு பகுத்தறிவைபுட்டிதிருத்தியவர்கள் உங்களில் எத்தனை பேர்? எவ்வித ஆதாரமுமற்ற இளம் பெண்கள் வகையற்றுவிய பசாரம் செய்ய முற்படுவதைத்தடுக நீங்கள் எத்தனைசங்கங்கள் உண்டாக்கினீர்கள்? எத்தனை பேரைசீர்திருத்தி தப்புவித்திருக் கிறீர்கள்? சடங்கு, சம்பிரதாயம், பழக்கம், வழக்கம் என்ற இவைகளின் பேரால் உங்கள் சகோதரிகள் தங்கள்தினசரி வாழ்கையில் பட்டுழன்று அடையும் கஷ்டமும், விரயமும் நீங்கள்தெரிந்திருக்கிறீர்கள்? அவைகளை யொழிக்கநீங்கள்என்ன செய்கிறீர்கள்? செய்திருக்கிறீர்களா?பெண்கள்எல்லோரும்தங்கள்சக்திக்கேற்றவாறுஉயர்தரப் படிப்பும் கற்கவேண்டுமென்றுநீங்கள் விரும்புகிறீர்களா? அப்படியாயின் அநேக இடங்களில் பெண்கள் 13, அல்லது 14வயதிற்கு மேல் படிக்காதவாறுதடைப்படுத்தப் பட்டுவருகிறார்களே. அதையொழிக்க எவ்வகையில்பிரசாரம்செய்து வெற்றி பெற்றிருக்கிறீர்கள்? கண்ணீரும் கம்பலையுமாய் இல்லற வாழ்க்கை இன்பமே இன்னதென்றறியாது ஓயாத துன்பத்திலும்,ஒழியாவேதனையிலும்தங்கள் வாழ் நாட்களை நித்தியம் எண்ணிக் கொண்டிருக்கிற விதவைகளின்துயர்தீர்க்க, அவர்கள் மறுமணத்தில்அவர்களதுஇன்பவாழ்க்கையில் கவலைசெலுத்தியவர்கள் எத்தனைபேர் உங்களில்இருக்கிறீர்கள்?

உரிமையும், கடமையும்.

சகோதரிகளே, உங்கள் குறைகள், கொடுக்கப்பட வேண்டிய உரிமைகள், அடையவேண்டிய சுதந்திரங்கள், எண்ணற்று கிடக்கின்றன.உங்கள்சமூக முன்னேற்றத்தில், பெண் இன கூடுமத்தில், அவர்களது அறிவையும் எண்ணத்தையும்சீர்திருத்தி, பகுத்தறிவையுண்டாக்கி எல்லோரும்சமானமாகி உங்கள் உரிமைப் போரைநடத்துவதை விட்டு அகில இந்திய சுதந்திரப் போரில் முனைந்த உங்களது வீரத்தை என்னென்பது. நேற்றுவந்த சாரதா மசோதா சட்டமாகியும். அமுலுக்கு வராது, அதை மீறியெத்தனையோ விவாகங்கள் நடத்தப்பட்டனவே. அதைக்கண்டுபிடிக்க, தண்டிக்க சட்டபூர்வமாகநீங்கள், உங்கள் சங்கங்கள், என்னசெய்தன. இது ஒன்றே போதாதா. இதைவிட பெண் சமூகத்துக்கு வேறு முக்கிய பிரச்சினை யொன்றுவேண்டுமா? இந்த நிலைமையில், சுதந்திரப்போர், சட்டமறுப்பு! சத்தியாக்கிரகம், சிறைத்தண்டனை!வெட்கம்வெட்கம்சகோதரிகளே'பழமையைப்போக்குங்கள். மூடபழக்க வழக்கங்களில், சடங்குகளில், ஆழ்ந்து அமிழ்ந்து தோய்ந்து அல்லலுறும் உங்கள்சகோதரிகளை கரையேற்றுங்கள். அவர்கள துபகுத்தறிவை வளருங்கள். கல்வியைப்பரப்புங்கள். மதப்பைத்தியத்தை அழியுங்கள். உங்கள் சமத்துவத்தைநிலை நாட்டுவதில் முயலுங்கள். உரிமைகளைப்பெறுவதில் கருத்தைச் செலுத்துங்கள். உங்கள் பெண் சமூகத்தின் கோரிக்கைகளை வற்புறுத்த பெண் சங்கங்களை பரப்புங்கள். பிரசாரம் செய்யுங்கள். உங்களது சக்தியையும், ஊக்கத்தையும், முயற்சியையும், காலத்தையும் பெண்சமூகவளர்ச்சிக்காக, முன்னேற்றத்துக்காக, க்ஷேமத்திற்காக செலவிடுங்கள். காந்திக்குஜே, வந்தேமாதரம் என்பதைவிட்டு பெண்கள் உரிமைக்குஜே! சுதந்திரக்குஜே! பெண் இனத்துக்குஜே! என்ற சொல்லக்கூடிய காலத்தைஎதிர்பாருங்கள்கூட்டத்தில்கோவிந்தா போடுகின்ற தொத்துநோய் உங்களிடை பரவாதிருக்கட்டும்.

உங்கள்

கண்ணையும்

காதையும்

கவனித்துக்கொள்ளுங்கள்

பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வை மைத்தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாகயிருந்தால் கூடப்பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கறையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இன்றேவிஷில் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

"Sri" Works,

Beadon St. P. O. Calcutta.

நாகர்கோவில்
சுயமரியாதை இளைஞர் சங்கம்.

30-2-32 மாலை 6-மணிக்கு இச்சங்கத்தின் முதல் கூட்டம் கோட்டாற்றில் வைத்து திருவாளர்கள் ஏ. குணமணி எம். ஏ, பி. எல்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காரியதரிசி நிகழ்ச்சிக்குறிப்பு வாசித்தபின்னர் தலைவர் முகவுரையாக பேசுங்கால் ரஷியா, பிரான்ஸ், இங்கிலாண்டு முதலிய தேசங்கள் சமத்துவசகோதரத்துவத்தை முதலில்சைப்பற்றியதால்தான் சுதந்தரமடைந்ததென்றும் இந்தியா சுயமரியாதை இயக்கத்தால்தான் சுதந்தரமடையுமென்றும் விரித்துக்கூறினார். பின்னர் தோழர்கள் எஸ். உத்தண்டன் எ. சுப்பையா, எ. யி. பெருமாள், எஸ். பூதலிங்கம், சி. எஸ். வேலாயுதம் பி. ஏ., எஸ். கிருஷ்ணன், எஸ். ராமையா முதலியோர் முறையே நமது நிலைமை, சாதிவேற்றுமை, பொருளாதார நிலைமை, பேயும், பிசாசும், வாலிபர் கடமை, மதம், பெண்கள் விடுதலை என்னும்விஷயங்களைப் பற்றி விரித்துப்பேசினர். தலைவர் முடிவுரையாகப் பேசியபின்னர் நன்றிகூறலுடன் கூட்டம் சுமார் 8-30 மணிக்கு முடிவுற்றது பின்னர் டீபார்ட்டி தோழர் ஆர். மாடசாமி அவர்கள் வீடுதில்வைத்து நடைபெற்றதென சங்ககாரியதரிசி எஸ். கிருஷ்ணன் அறிவிக்கிறார்.

மதுரை
சுயமரியாதை சங்கம்.

14—2—32ந்தேதி பகல் 12-மணிக்கு இச்சங்க ஆதரவில் ஒரு சமபந்தி போஜனம் மாரியம்மன் தெப்பக்குளத்திற்கு அடுத்த தோப்பில் அதிவிமரிசையாக நடந்தது. ஆதிதிராவிட சகோதரர்களாலும் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களாலும் சமைக்கப்பட்டதை எல்லோரும் சமபந்தியாகயிருந்து சாப்பிட்டார்கள். 200 பேருக்குமேல் கூட்டம் இருந்தது சமபந்தி தீர்த்தமும் போட்டே எடுக்கப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்

சோமதேவ இருஷியின் வரப்பிரசாத ஔஷதம்.

குஷ்டம் தீராதகர்மநோயென்றெண்ணி கஷ்டப்படுவதேன்!

எக்காரணத்திலாவது முண்டாகின்ற எவ்வித குஷ்ட நோய்க்கும் அனேக தொத்துவியாதிகளுக்கும் சான சிகிச்சை முறைகளையும் சிறந்த ஔஷதங்களையும் சரித்திரசுருக்கினங்கி அனுபவித்தானந்தப்படுங்கள். நோயினால் அவஸ்தைப்படுவோர் ஸ்டாம்புடன் எழுதுங்கள்

சி. ஒ. கேசவவைத்தியர்

Bhaskara Vilasam (S. K. R.) Pharmacy

Cameron Road, Pallithottam, Quilon S. I.

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

தமிழர்களின் மடாதி பதிகளை சைவசமயத்தவர்களெல்லாம் சிவபெருமானுக்கு இரண்டாவதாக நினைக்க வேண்டும். அவ்விதமே மரியாதைகளும் செய்யப்படுகின்றனர். அவர்கள் படித்தவர்கள், ஆகமவிதிதெரிந்தவர்கள், அதன் அனுஷ்டான பூசைகளைத் தினமும் செய்கின்றவர்கள், சைவசமயப்படி எல்லாதீக்ஷையும் பெற்றவர்கள், தென்தேசத்துப்பெரிய சிவாலயங்களுக்குக் கர்த்தாக்கள், காரியம் நடத்துகிறவர்கள், சிவபெருமானைக் கைகூப்பி வணங்குவதை நிறுத்தி, மனதிலேயே வணக்கத்தை சங்கல்பித்துக்கொள்ள அதிகாரம்பெற்றவர்கள். பெரும் சொத்திற்கு அதிபதிகள், தானதருமம்வழங்குகிறவர்கள், காஷாயம்உத்திராக்ஷம் விதிப்படிஅணிந்தவர்கள்சந்நியாசிகள். இவர்கள்கோவிலின்உள்ப்பிறகாரம் போய் ஒருவில்வத்தைசுவாமி தலையில்போட்டு மந்திரம்சொல்ல அருகதை உடையவர்களாக இருக்கிறார்களா? ல்லே. என் இல்லே? அவர்களும் சூத்திரர்கள்தான். அவர்கள்பாஷையும் சூத்திரபாஷைதான். என்பதல்லாமல் வேறென்னகாரணம்? எல்லாவற்றிலும் ஒழுக்கம்கெட்ட ஒருபார்ப்பான்கெர்ப்பகிரகத்தினுள் போய் சுவாமிதலையில்கைவைத்து, கள்ளும் சாக்கணவும் தின்றுவாசனைவீசும் வாயால்எதையோமுணு முணுக்கலாம். அதுமந்திரமுமாகும், சிவபெருமான் அருளிய நான்மறையின்விதியுமாகும்.

கோவிலோ மடாதிபதிகளின்அதிகாரத்திற்குச்சொந்தம், கோவிலோ சிவன்கோவில், சிவனே சைவர்களுக்குத்தெய்வம் சைவர்களோ மாடாபதிகளுக்குச்சிஷியர்கள், மடாதிபதிகளோ தமிழுக்கு சைவத்திற்கு, ஜகமத்திற்கு, கோவிலுக்கு, அதன்சிலவிற்குகர்த்தர்களாய் தமிழர்களுக்கேகுருவாய், சந்நியாசியாய் இருப்பவர்கள். சைவசமயத்தில்வேறுபட்ட, தள்ளப்பட்ட ஒரு சுமார்த்த, ஒழுக்கங்கெட்டபார்ப்பானுக்குள்ள பாத்திதைகூடஇல்லே என்றால் தமிழன் குறைஎப்படிநீங்கும். ஆராய்ச்சிப்பண்டிதர்களே சொல்லுங்கள். உங்கள் ஆசாரிகளே இந்த நியாயவிரோதத்திற்குக்காரணமென்றால் கோபிக்கிறீர்கள். வஞ்சகம், கபடம், பொய்வினையம்இரக்கமின்மை முதலிய தீக்குணங்களில்லாமல் கருத்தறிவல்லாம்தண்ணீர், வெளுத்த தெல்லாம்பால்என்ற கபடமின்மை தன்னைப்போல பிரரை மதித்து நம்பிக்கொள்ளல் முதலிய குணங்களையுடைய தமிழர்களை வேதம் சாஸ்திரம், பலதெய்வம், பிதிர்லோகம் என்ற விஷயத்தில் நம்பிக்கையை அதிகப்படுத்தி வார்சுக்கிரமத்தைவைத்துத் தங்களைஉயர்த்திக்கொண்டு, மதக்கொள்கையைக்குழப்பிக்கெடுத்து தங்கள் ஜாதிக்கே தானதருமம்வழங்கவேண்டு மென்பது கடவுள் கட்டளைஎன்றும் சொல்லி, அதிலிருந்து ஆலோசனையில்லாத ஜனங்களை எமாற்றி சந்தர்ப்பத்திற்குத்தகுந்தபடி தங்கள் சுயநலத்தையும், சுஜாதி அபிமானத்தையும், கட்டுப்பாடாய் நிலைபெறச்செய்வதற்கு ஏற்படுத்தினகதைகளில் அகஸ்தியனுக்கதையும் ஒன்றென அறியாதமதுபண்டிதர்களில் பலர் இன்னும் சிவபெருமானின் கலியாணத்தில் வடகோடு தாழ்ந்து தென்கோடு உயந்து போனதைச்சரிப்படுத்த சிவபெருமான்அகஸ்தியருக்கு தமிழ்உபதேசித்து தென்னாட்டிற்கு அனுப்பினார் என்பதைஇன்னும்நம்பிக் கொண்டேதமிழ் ஆராய்ச்சிசெய்கிறார்கள், எழுதுகிறார்கள், பிரசங்கம் செய்கிறார்கள், இவ்விதபண்டிதர்கள் முன்னுமிருந்தார்கள், இப்பொழுதுமிருக்கிறார்கள், இத்தனை பண்டிதர்களிருந்தும் இங்கிருக்கும் நமது சிவபெருமானுக்கும், அவரைச் சேர்ந்ததெய்வங்களுக்கும் தமிழேன் தெரியாமல் போயிற்று என்றுநினைத்துப்பார்க்கவில்லே. அவைகளுக்குத் தமிழ்பாஷையைக் கற்றுக்கொடுக்கவுமில்லே. ஒன்றிரண்டு பண்டிதர்கள் அதைத்தெரிந்து சொன்னால் மற்றவில்லாதி வீரர்களான பண்டிதர்களெல்லாம் சண்டைக்குப் போவார்கள். அதைக்கண்ட பார்ப்பார்களும்அவர்களையே தூண்டிவிட்டு அந்தப்பண்டிதர்களையே துன்புருத்து வார்கள், இதையே பண்டிதப்பெருமை என்று நினைத்துவிட்டார்கள்.

வடதேசத்துக் கங்கை, யமுனை முதலிய நதிகளுக்குத்தான் தமிழ்பாஷைதெரியாது, தென்னாட்டுக்காவேரிக்கும், தாம்பிரபரணிக்கும், வைகைக்குமா தமிழ்தெரியாது?

இந்நதிகள்கூட தன்னிடம் குளிக்க வருகிறவர்கள்வட மொழியில் விண்ணப்பம்செய்து கொண்டால் தானே பாவத்தைப்போக்குகிறது. அதற்காபபார்ப்பானுக்கு நாலணாகூலியுமுண்டு,தேவர்களிருக்கும் கைலயங்கிரியில்தேவபாஷை தானிருக்கும். தமிழ்இருக்காது:கைலயகிரி சிவபெருமானின் சடையிலிருந்து வந்தகங்கைக்கும், கங்கையின் தங்கையான காவேரியை அங்கிருந்து இங்கேஅகஸ்தியர் கூட்டிவந்தார் என்று சொல்லுகிறதுபுராணம்,அதனால் காவேரிக்கும் தமிழ்தெரியாமலிருக் கட்டும் திருநெல்வேலி சைவப்பண்டிதர்கள் தமிழ்தாம்பர பரணிக்கும், மதுரைச் சங்கத்தமிழ்வைகைக்கும் தமிழ்தெரியாமல் போனதற்குக் காரணத்தை ஆலோசித்துப்பாருங்கள்.

தமிழ்வேதமான தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி இவற்றைக் கேட்டு கடவுள் சமயஆசாரிகளுக்கு காட்சி அளிக்கவில்லையா? அதைப்படித்துப்பாராயணம் செய்துபரலோகம் போனபக்தர்களில்லையா? என்று கெட்கலாம் இதைகோவில், ஆசாரி, குரு, புரோகிதன் முதலியவர்கள் இன்றுவரையிலும் ஒத்துக்கொள்ளவில்லையே புராணத்தில், பண்டிதர்கள் சொல்லில், எழுத்தில் இருக்கிறது. குருவிடத்தில் தெய்வசன்னதியில்அபிஷேக அர்ச்சனை ஆராதனையில்இல்லையே தேவாரத்தைக் கூட வெளிப்பிரகாரத்திலிருந்து சுவாமிக்குஅர்த்தமாகும் பாஷையில் உபசரணையெல்லாம் சொல்லி, கற்பூரஆலாத்தியெடுத்து பார்ப்பானுக்கு ஆராதனையும்காட்டினபின் தானேபாடவேண்டியிருக்கிறது. தேவாரத்தைப்பண்டாரப்பாட்டென்று சொல்லுவதை நீங்கள்கேட்டதில்லே, அப்பர்சுவாமிகளுச்சூத்திரனென்று தள்ளிவைப்பதும், அவர்பின்னல் வேதம் சொல்லமறுப்பதும் நாலணு அதிகம்கொடுத்தால்சொல்லுவதும் சைவர்களுக்குத் தெரியாதா? ஆகவேநம்முடையதெய்வம், வழிபாடு, எளவு, எட்டுகருமாந்திரம்முதலிய எல்லாக்கர்மங்களிலும்தமிழ்பாஷைதெரியாத தேவதைகளை வைத்துக்கொண்டு தமிழ்பாஷையை எப்படிவிர்த்திசெய்யமுடியும். அந்த தெய்வங்களைநாம் குடிவைத்த நன்றிக்குஅவைகளாகவேவந்து தமிழ்கற்றுக்கொள்ளாது நாமேஅவைகளுக்கு தமிழ்கற்றுக்கொடுக்க வேண்டும் எப்படியெனில்,

குரான்அரபுபாஷையாகவிருப்பதால் துருக்கியர்களுக்கு குரானேஒதுவதுகஷ்டமாக விருக்கிறதென்றுகுரானைத்துருக்கி பாஷையிலே ஒதும்படி கனம். கமால்பாஷா அவர்கள் உத்திரவு போட்டார் என்பதை நீங்களெல்லாம் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள் அதுபோல நமது தெய்வ கருமாந்திரங்களெல்லாம் வடமொழியிலிருப்பதால் நமக்கும் கஷ்டமாகவிருக்கிறது, தென்மொழியும் நமது கடவுளுக்குத்தெரிவதில்லே. இனிதெய்வவழிபாட்டிற்கும் கர்மங்களுக்கும் மூள்ளமந்திரங்களெல்லாம் தமிழிலேயேசொல்லி விட்டோமானால் நமது தெய்வங்களுக்கும் தமிழ்தெரிந்துவிடும் அதன் குறைபாடும் நீங்கும் அரபுபாஷை தெய்வம் துருக்கிபாஷையைஒத்துக்கொள்ளுகையில் சமஸ்கிரதபாஷைத்தெய்வம் தமிழ்பாஷையைஒத்துக்கொள்ளாதா? அரபுபாஷைத்தெய்வத்திற்கு துருக்கிபாஷைஅர்த்தமாகுகையில் வடமொழித்தெய்வத்திற்கு தென் மொழிஅர்த்தமாகாதோ?

(தொடரும்.)

தாராபுரம்.

இவ்வூர் வெஸ்லியன் மிஷன் டிரையினிங் பாடசாலையின் ஆதரவின் கீழ் 11-2-32 வியாழக்கிழமை மாலை 4-மணிக்கு இவ்வாசகசாலைக்கட்டிடத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதன் தலைமை உபாத்தியாயராகிய ஸ்ரீ. டி. தாமஸ், எம். ஏ., அவர்கள் தலைமை வகிக்க ஸ்ரீ ச்சி வக்கீல் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்கள் 'உபாத்தியாயரும் சமூகத்தொண்டும்' என்னும்பொருள்பற்றி நீண்ட நேரம் ஒருசொற்பொழிவு ஆற்றினார்.

பின் வந்தஜேபசாரத்துடன் அக்கூட்டம் இனிது முடிந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

திருமணங்கள்.

மாயவரம் செட்டித் தெரு அம்மணி நிலயத்தில் 1—2—32ந் தேதி காலை 9 நிலையத்தின் அதிபரும், பிரபல கனவானுமாகிய திருவாளர். சோ. ம. ரெங்கசாமி அவர்கட்கும், நாகைதிருமதி. மீனாக்ஷிசுந்தரத்திற்கும்,—நீண்டநாட்களாக மனங்கலந்தஉண்மைக்காதலாகள் திரு. சோ. ம. ரத்னம் அவர்களுக்கும், திருமதி. சுலோச்சனை அவர்கட்கும திருமணங்கள் நடைபெற்றன.

திருமணத்திற்கு முந்தியநாள் இரவு 8-மணிக்கு மாயவரம தேசூர். எஸ். சம்பந்தம் அவர்கள் தலைமையில் சுயமரியாதை இயக்கத்தலைவர்கள் ஈ. வெ. இராமசாமி, எஸ். இராமநாதன், எம். ஏ. பி. எல்., ஆகிய இருவர்களின் பெரிய உருவப்படங்களை காகுடி தேசூர், சி. எம். ரத்னம் அவர்கள் திறந்துவைத்தார். இவ்விழாவிற்கு நாகை தேசூர்கள், மணி, சிவஞானம், சாமிநாதன், கீழையூர் அ. கு. ரங்கசாமி, எஸ். கல்யாணம், எஸ். வேலு, மாயவரம் சி. நடராஜன் சொக்கலிங்கம், ராமலிங்கம், ரயிலடி சுப்பையா, நடராஜன் முதலிய வாலிபர்களும் மற்றும பலதேசூர்களும் ஏராளமாக விஜயம செய்திருந்தார்கள். 'ஜ. தி' என்ற சாத்தானை அறவே ஒழித்து மூன்று தினங்கள்வரை சமபந்தி போஜனம் நடைபெற்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

அறிவிப்பு.

கொளுமபில் கீழ்கண்டவிலாசங்களில் சுயமரியாதை தலைவர்கள் ஆபடோன் போட்டே படங்களும், பேட்ஜ், குடி அரசு பதிபபக புத்தகங்களும், சுயதர்மப் புத்தகங்களும், ஆராய்ச்சி அணிகலம், சனனி லோகல் போராட்ஆக்ட், கதரின் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்) என்னும் புத்தகங்களும கிடைக்க பெறலாம். ஒவ்வொரு அன்பர்களும வாங்கி பயனடைய வேண்டுகிறோம்.

1. A. S. பரமசிவம், 45
காலி ரோடு,
பம்பல பிட்டிய, கொளும்பு.
2. A. பாலகிருஷ்ணசாமி,
191, கேரீஸ் ரோட்டு,
பெட்டா கொளும்பு.
3. M. K. S. பிள்ளை,
லெக்ஷிமி விலாச ஸ்டோர்,
நெ 2, மலாய வீதி,
கும்பினி தெரு, கொளும்பு.

இம்மூன்று விலாசத்திலும் கிடைக்கும்.

A. S. பரமசிவம்,
நியூஸ் ஏஜண்ட்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. இயற்கைமதம் ... 0—8—0
2. சிதம்பர ரகசியம் ... 0—8—0
3. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
4. சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள் ... 0—4—0
5. பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ... 0—6—0
6. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
7. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
8. சென்னை லோக்கல் போர்ட் ஆக்ட் ... 2—0—0
9. மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம். ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.) ... 2—0—0
- ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம் ... 0—8—0
- சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு மாதிரி தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டில் ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது
பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.
இம்பிரியல் பிரஸ், மாயவரம்

"தமிழன்"

மலாய் நாட்டு சுயமரியாதை தமிழ் தினசரி.

உள்நாடு மாத சந்தா $ 1.00.
வெளிநாடு ,, இந்தியா $ 1.50.

ஆசிரியர்:—சுவாமி அற்புதானந்தா.

விலாசம்:— மானேஜர் "தமிழன்"
10, ஜெல்ப்ரோட், சுப்பேர்.

'சண்டமாருதம்'
சுயமரியாதைத் தமிழ் தினப்பதிப்பு.

அனேக தந்திச்செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
ருசிகரமான குறிப்புகள்
தேனின் இனிய "திரட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்கூச்செறிக்கும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விவரம்.

உள்நாடு மாத சந்தா ரூ. 1—4—0
தனிப்பிரதி ... ... ரூ. 0—0—9
வெளிநாடு வருட சந்தா ரூ. 18—0—0
ஆறுமாதம் ... ரூ. 10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சிராப்பள்ளி.

Read the
"SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கவலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாசவர்களால் எழுதப்பட்ட கட்டுரை களைத்தொகுத்து வெளியிடப்பட்டது. இதுகட்டுரைகளைப்படிப் பதால் அனேக சாஸ்திர, புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்த தினாற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணை. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள வழுல் களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுக்களை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணை. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அணை. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைகளின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆடாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித் தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின்வண்டவாளம்முழுதும்தெ ரியும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அணை. 0—4—0

மநுநீதி மறுமம்.

இது மநுதரும சாஸ்திரத்தின் உள்ள அநீதிகளையும், பார்ப் பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தி யுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணை. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில உள்ள பாடல்களிலிருந்துதொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலிய வைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணை. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, வகுப்பு பணக்காரக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப் பட்டிருக்கிறது. இனிய பாடல். எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணை. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப் பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றுவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான—சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணை. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக்காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப்பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணை 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கென கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணமெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணை 0—2—0.

தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்த மற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணை கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம. இரண்டு இளைஞர்கள் மாறு வேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத் தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணை 0—3—0.

பங்களும் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, மூதேவியவற்றை யும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணை 0—4—0.

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதராகிய "கன்னி மேயோ" எழுதி யதில்உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்— நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிச் சீர்திருந்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணை 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித் திரப்புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிருக் கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப் பட்டது.

இதன் விலை அணை 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக் கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராக வன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணை 0—2—0.

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபன்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையா வும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவை களுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளியி டப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதரைப் புரட்டை உணர லாம்.

இதன் விலை அணை 0—2—0.

முக்கிய கவனிப்பு:—மேல்கண்ட புத்தகங்கள் "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு முக்கால் விலைக்குக்கொடுக்கப்படும். ஆனால் பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் அச்சுப்பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.